கலைமகள்

519
MADRAS

மாதப் பத்திரிகை

வெகுதான்ய வரு

புரட்டாசி மீ Sept

அக 1938

SEP-1938

JL
கலை, M7KN.
N38.14.3.
213420

மதராஸ், கல்கத்தா, டில்லி,
பொம்பாய்

முதலிய அகில இந்திய ரேடியோ
ஸ்டேஷன்களைத் தனித்துக் கேட்கலாதும்



ரேடியோ
ரிஸீவர்
மாடல்
469 A.C.



- இதில் ஸர்வதேச ரேடியோ ஸ்டேஷன்களையுமே யன்றி, புதிய இந்திய ஸ்டேஷன்களையும் தனித்துக் கேட்கலாதும்!
- செவிக்கினிய நாதம்
- அழகான தோற்றம்
- 11-2000 மீட்டர்வரையிலும் கேட்கலாம்
- பிக்கப் உபயோகிக்கச் சௌகரியமுண்டு

இன்றே உங்களுக்கென்று ஒரு ரிஸீவரை "ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்" ரேடியோ வியாபாரியிடம் பார்த்து வாங்கிவிடுங்கள்.

மாடல் 469 A. C.
50-100 ஸைகில் : 195-250 வோல்ட்

விலை
ரூ. 400 மட்டுமே!

- இதை டி. சி. கரண்டிலும் உபயோகிக்கக் கன்வர்டர் மூலமாகக் கிடைக்கும்.

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"



ஸ்ரீ வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர், C.S.I.



2134

கலைமகள்

வி. கிருஷ்ணசாமி ஐயர்

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்

4

தமிழபிமானம்

பெரிய உத்தியோகத்தில் இருந்தால் ஆங்கிலப் புத்தகங்களைப் படிப்பது, ஆங்கிலங் கற்றவர்களை வியப்பது, இங்கிலீஷ் நூலிலுள்ள கருத்து எந்தப் பாஷையிலும் இல்லையென்று சொல்வது முதலியவற்றைப் பெருமையாகக் கொள்பவர்கள் எந்தக் காலத்திலும் உண்டு; ஆனல் இப்போது அத்தகையவர்களது தொகை குறைத்து வருகிறது. கிருஷ்ணசாமி ஐயர் காலத்தில் ஆங்கில மோகம் உச்ச நிலையை அடைந்திருந்தது.

கிருஷ்ணசாமி ஐயர் ஆங்கில அறிவில் சிறந்தவர்; அவருடைய தந்தையாரும் தமையனரும் அவரும் வடமொழிப் பயிற்சியும் அந்த மொழியினிடத்தில் அன்பும் உடையவர்கள். இந்த இரண்டு பாஷைகளிலும் கிருஷ்ணசாமி ஐயருக்கு இருந்த அறிவும் அபிமானமும் மற்றப் பாஷைகளை வெறுக்கச் செய்யவில்லை. தமிழினிடத்தில் அவருக்கு இருந்த அபிமானத்தை நான் அனுபவத்தில் பல சமயங்களில் உணர்ந்திருக்கிறேன்.

வடமொழியில் அன்பிருந்தால் தமிழினிடத்தும் அபிமானம் உண்டாவது அந்தக் காலத்தில் அருமை. அறிவுக்கு உண்மையான மதிப்பை யளிக்கும் பெரியார்கள்

JL
M21,N17(M

ஒவ்வொன்றின் பெருமையையும் நன்கு அறிந்து பாராட்டி வருவார்கள்.

"எந்தப் பாஷையாக இருந்தால் என்ன? மனத்திற் பதியும்படியான நல்ல விஷயம் எங்கே இருக்கின்றதோ அதைத் தேடி அறிந்துகொள்ளவேண்டும்" என்பது கிருஷ்ணசாமி ஐயரது கொள்கை.

ஒருநாள் சென்னை இராசதானிக் கலாசாலைத் தமிழ் மாணவர் சங்கக்கூட்டத்திற்கு அவர் அக்கிராசனம் வகித்தார். காலஞ்சென்ற ஜி. ஏ. வைத்தியராமையர் அன்று 'தமிழின் பெருமை' என்னும் விஷயத்தைப்பற்றிப் பேசினர். கிருஷ்ணசாமி ஐயர் தலைமை வகிப்பது தெரிந்து பலர் கூட்டத்திற்கு வந்திருந்தனர். ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியாரும் வந்திருந்தார்.

கிருஷ்ணசாமி ஐயர் என்ன பேசுவாரோ என்று யாவரும் ஆவலோடு எதிர்நோக்கி யிருந்தனர். சிலர், 'இவர் தமிழைப் பற்றி என்ன பேசப்போகிறார்? ஸம்ஸ்கிருதத்தைப்பற்றி வேண்டுமானால் பேசுவார்' என்று நினைத்தார்கள்.

உபந்நியாசகர் பேசியபின்பு கிருஷ்ணசாமி ஐயர் பேசத்தொடங்கியபோது எல்லோரும் அவர் வாயையே பார்த்துக்கொண்டு இருந்தனர். அவர் பேசலானார்:

"தமிழில் எத்தனை நூல்கள் இருக்கின்றன! திருவள்ளுவர் திருக்குறள் செய்த பாஷை இது; கம்பன் இராமாயணம் இயற்றியது இந்தப் பாஷையிலேயே; நாயன்மார் தேவாரம் பாடிய பாஷை; மாணிக்கவாசகர் திருவாசகம் அருளிய பாஷை; ஆழ்வார்கள் திவ்யப்பிரபந்தம் பாடியதும் இதிலேதான். இந்தப் பாஷையின் பெருமைக்கு அளவில்லை" என்று தொடங்கி வரிசையாகக் கூறிக் கொண்டே சென்றார். அவருடைய பேச்சில் ஒரு பெருமிதமும் கம்பீரமும் இருந்தன. யாவரும் பிரமித்தனர். ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் அன்று அந்தப் பிரசங்கத்தைக் கேட்டுக் குதூகலத்தை அடைந்தார். அந்தப் பேச்சு அவர் உள்ளத்திலே ஒரு கிளர்ச்சியை உண்டாக்கியது; அதிலிருந்து ஒரு பாட்டுக்குரிய பொருளைக் கிரகித்துக்கொண்டார். தமிழ்நாட்டைப்பற்றி அந்த முறையிலே

பாடவேண்டுமென்று அவருக்கு அன்று ஒரு கருத்து உண்டாயிற்றென்றே தோற்றுகின்றது.

கிருஷ்ணசாமி ஐயர் நம்முடைய நாட்டின் பெருமையை அமைத்து எளிய நடையில் குழந்தைகளும் பெண்களும் பாடும் வண்ணம் சில பாட்டுக்கள் இயற்றவேண்டுமென்று விரும்பினர். பலரிடம் தம் கருத்தை உரைத்து வந்தார்.

அந்தக் காலத்தில் சுப்பிரமணிய பாரதியார் அவருடைய பழக்கத்தைப் பெற்றிருந்தார். கிருஷ்ணசாமி ஐயர் பாரதியாரிடம் தம் கருத்தைத் தெரிவித்தார். பாரதியாருடைய காதில் கிருஷ்ணசாமி ஐயருடைய பழைய பிரசங்கம் ஒலித்துக்கொண்டே இருந்தது. அவர் தமிழ்ப் பாஷையைப்பற்றிச் சொன்னதைப் பின்பற்றி இவர் தமிழ் நாட்டைப்பற்றிப் பாடத்தொடங்கினர்:

"செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே"

என்ற பாட்டைப் பாரதியார் பாடினர்.

'கம்பன் இராமாயணம் செய்த பாஷை; திருவள்ளுவர் திருக்குறள் செய்த பாஷை' என்று அன்று அவர் கூறியதை இவர் சிறிது மாற்றி,

"கல்வி சிறந்த தமிழ்நாடு—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு—நல்ல
பல்வித மாயின சாத்திரத் தின்மணம்
பாரெங்கும் வீசுந் தமிழ்நாடு"

என்றும்,

"வள்ளுவன் றன்னை யுலகினுக் கேதந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு—நெஞ்சை
அள்ளுஞ் சிலப்பதி காரமென் றோர்மணி
யாரம் படைத்த தமிழ்நாடு"

என்றும் பாடினர்.

இந்தப் பாட்டைக் கேட்டு இதில் தம்முடைய கருத்து அமைந்திருப்பதை அறிந்து கிருஷ்ணசாமி ஐயர் பெருமகிழ்ச்சியை அடைந்தார். பாரதியாரைப் பின்னும் பல பாடல்களைப் பாடச்செய்து அவற்றைச் சேர்த்து ஆயிரக்

கணக்கில் அச்சிடுவித்து இலவசமாக வழங்கச் செய்தார். சுப்பிரமணிய பாரதியாரை அக்காலத்திலே அறிந்து அவருடைய கவித்துவத்தைப் பாராட்டி ஆதரித்தவர்களுள் கிருஷ்ணசாமி ஐயர் முக்கியமானவர். பாரதியாருடைய கொள்கைகளிற் பலவற்றைக் கிருஷ்ணசாமி ஐயர் விரும்பாவிடினும் அவருடைய கவித்துவத்தில் அவர் ஈடுபட்டார்.

இவ்வாறே பலவேறு கொள்கைகளையும் பலவேறு பழக்கங்களையும் உடையவர்களாக இருப்பினும் தமிழ் முதலியவற்றில் அறிவுடையவரென்பது தெரிந்தால் மற்றவற்றையெல்லாம் மறந்து பாராட்டுவது கிருஷ்ணசாமி ஐயரது இயல்பு.

தேவார திருவாசகங்களில் அவருக்கு நிறைந்த அன்பு உண்டு. யாரேனும் இசையுடன் தேவாரம் பாடிலை மணிக்கணக்கில் மெய்ம்மறந்து கேட்டுக்கொண்டே இருப்பார்; மனமுருகிக் கண்ணீர் பெருக்குவார்; 'ஹா! ஹா!' என்று தம் ஆனந்தத்தை வெளியிடுவார். அவர்களுக்கு வேண்டிய உதவியும் செய்வார். ஸம்ஸ்கிருத பாஷையில் எவ்வளவோ ஸ்தோத்திரங்கள் இருக்கின்றன. அவற்றிற் பலவற்றை அவர் படித்ததுண்டு. ஆயினும் நெஞ்சை உருக்கும் விஷயத்தில் தேவார திருவாசகங்களைப்போல எதுவும் இராதென்று அவர் அடிக்கடி சொல்வார். "'தேடிக் கண்டுகொண்டேன்' என்று எவ்வளவு அருமையாகப் பாடியிருக்கிறார்கள்! அவர்களுடைய அனுபவம் எவ்வளவு சிறந்தது!" என்பார்.

தேவாரம் தெரிந்தவராக யார் வந்தாலும் அவரை இசையுடன் பாடச்சொல்லிக் கேட்பதில் அவருக்கு விருப்பம் அதிகம். கவிகுஞ்சர பாரதியின் பேரராகிய காலஞ் சென்ற கோடீசுவரையர் அடிக்கடி அவரிடம் வந்து பாடி அவரை மகிழ்விப்பார். வேறு பலரும் அங்ஙனம் செய்வதுண்டு. ஒருமுறை கோடீசுவரையர் திருவாசகத்தை மோகன ராகத்தில் பாடிக்கொண்டிருந்தார். கிருஷ்ணசாமி ஐயர் அவ்விசையைப் பருகி விம்மித மடைந்து இருந்தார். உடனிருந்து அவருடைய நண்பர் சிலரும் நானும் கேட்டுவந்தோம். கிருஷ்ணசாமி ஐயர் மனமுருகிக்

கேட்டார். தடையின்றிக் கோடீசுவரையர் பாடிக் கொண்டேவந்தார். அப்போது உடனிருந்த ஒருவர் கோடீசுவரையரைப் பார்த்துத் தமக்குப் பிரியமான வேறு பாட்டு ஒன்றைப் பாடச்சொன்னர்; கிருஷ்ணசாமி ஐயருக்கு உடனே கோபம் வந்துவிட்டது; "சட்! என்ன பைத்தியக்காரத்தனம்! தேவாமிர்தத்தைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது, கொஞ்சம் பிண்ணைக்குக் கொண்டு வா வென்று சொல்வது போலிருக்கிறது உம் மூடைய பேச்சு. திருவாசகத்தைக் கேட்ட காதால் வேறொரு பாட்டைக் கேட்க உமக்குப் பிடிக்கிறதா? மற்ற வேளைகளில் கேட்டுக்கொள்ளுமே" என்று கடுகடுப்போடு சொன்னர். கோடீசுவரையர் திருவாசகமே பாடலானர்.

பலமுறை திருவாசகமும் தேவாரமும் பாடக் கேட்டுக் கேட்டு அவருக்கு அவற்றின் பொருளில் மனம் லயித்து விட்டது. பொருள் தெரியாத பாடல்களை அவர் விரும்புவதில்லை. தேவாரத்தின் சிறப்பைப் பற்றிப் பலரிடம் அவர் வாதம் செய்வார். ஒரு முறை ஒரு பெரிய ஸம்ஸ்கிருத பண்டிதரோடு அவர் பேசிக்கொண்டிருந்தார். "பக்திரசம் தேவாரத்திலே இருப்பது போல வேறு எதிலும் இல்லை" என்று அவர் சொன்னர். ஸம்ஸ்கிருத பண்டிதர், "ஸம்ஸ்கிருதத்தில் ஆயிரக்கணக்கான சுலோகங்கள் மகான்களால் இயற்றப் பெற்றிருக்கின்றன. அவற்றின் அர்த்த புஷ்டியும் பெருமையும் அனந்தம்" என்று சொன்னர். கிருஷ்ணசாமி ஐயர், "நானும் அவைகளைப் படித்திருக்கிறேன். உயர்ந்த அர்த்தம் அவைகளில் இருப்பது வாஸ்தவந்தான். ஆனல் பாடின மாத்திரத்தில் மனத்தைக் கவ்விக்கொண்டு உருக்குவதில் தேவார திருவாசகங்களுக்குச் சமமாக ஒன்றும் இல்லை. ஒன்று, இரண்டு இருக்கலாம். இந்த உருக்கம் அவைகளில் இல்லை" என்று அழுத்தமாகக் கூறினர்.

இந்த விஷயத்தைப்பற்றிக் கிருஷ்ணசாமி ஐயருக்கும் அவருடைய தமையனாராகிய சாமிநாதையருக்கும் சில சமயங்களில் வாக்குவாதம் எழுவதுண்டு. கிருஷ்ணசாமி ஐயர் தேவாரத்தைப் புகழ்வார்; அவர் தமையனர் ஸம்ஸ்கிருத சுலோகங்களைப் பாராட்டுவார்.

திருநெல்வேலி ஹிந்து காலேஜில் ஆசிரியராக இருந்தவரும் என்னுடைய நண்பருமாகிய காலஞ் சென்ற எட்டையபுரம் மகாலிங்கைய ரென்பவரோடு ஒரு முறை கிருஷ்ணசாமி ஐயருடைய தமையனரிடம் போயிருந்தேன். மகாலிங்கையர் இனிய சாரீரம் உடையவர். எவ்வளவு நேரம் பாடினாலும் சோர்வு தோற்றாத குரல்வன்மை பெற்றவர். தேவார திருவாசகங்களைக் கேட்பாருக்குப் பொருள் விளங்கும்படி தெளிவாகப் பாடுவார். அன்று அவர் தேவாரதிருவாசகங்களை மிகவும் அற்புதமாகப் பாடினர். சாமிநாதையர் அவற்றைக் கேட்கக் கேட்க மனமுருகலாயினர். வர வர அவருடைய உருக்கம் அதிக மாயிற்று. தேம்பித் தேம்பிக் கண்ணீர்விட்டு ஆனந்த மடைந்தார். "ஆஹா! என்ன பக்தி! என்ன பக்தி!" என்று பாராட்டினர். "என் தம்பி தேவார மகிமையைப் பற்றி என்னிடம் வாதாடுவான். இன்றுதான் அதனை அனுபவத்திலே அறிந்தேன்" என்றார்.

புதிய புதிய பாடல்களைக் கேட்கவேண்டு மென்று கிருஷ்ணசாமி ஐயர் விரும்புவார். ஒருமுறை மகாலிங் கையரை அவரிடம் அழைத்துச் சென்றிருந்தபோது, "இவரை எனக்குத் தெரியுமே. சொன்னதையே திருப் பிச் சொல்லாமல் பாடுவாரா?" என்று கேட்டார். "அப்படியே பாடுவார்" என்றேன். அன்று நெடுநேரம் தேவார இன்னிசையை நாங்கள் நுகர்ந்தோம்.

கம்ப ராமாயணத்தில் கிருஷ்ணசாமி ஐயருக்கு அன்பு உண்டு. அதிலுள்ள செய்யுட்களை நான் சிலமுறை அவ ரிடம் எடுத்துக் கூறி மகிழ்வித்திருக்கிறேன். வேறு சிலர் வாயிலாகவும் அவர் கேட்டிருக்கிறார். "கம்பன் மகாகவி தான். ஒவ்வொருவருடைய குணத்தையும் நன்றாக அறிந்து தவறாமல் அமைத்திருக்கிறான். அவனுடைய வருணனைகள் அளவுக்கு மிஞ்சிப் போய்விடுகின்றன. எல்லாம் ரஸமாகவே இருக்கின்றன. ஆனால் பத்துப் பாடல்கள் இருக்கவேண்டிய இடத்தில் நூறு பாடல்களைப் பாடிவிடுகிறான். அங்கே தெவிட்டிப்போகிறது" என்று அவர் சொல்வார். அவருடைய வேகமான புத்திக்கு அந்த நீண்ட வர்ணனையைப் படித்து அனுபவிக்கும் பொறுமை இருப்பதில்லை.

ஒருநாள் நான் பிற்பகலில் அவர் வீட்டிற்குப் போயிருந்தேன். அப்போது 'மெயில்' ஆபீஸில் முக்கிய மான வேலையில் இருந்த மூனிசாமி ஐயர் என்பவர் அங்கே வந்திருந்தார். அவர் பேசிக்கொண்டே இருக்கும்போது, தமிழைப்பற்றிய பேச்சு வந்தது; "தமிழில் என்ன இருக் கிறது? ரஸமில்லாக் குப்பையே அதிகம்" என்று அவர் சொன்னார். எனக்குத் துணுக்கென்றது. "நீங்கள் எங்கே படித்தீர்கள்? தமிழ் உபாத்தியாயர் யார்?" என்று நான் கேட்டேன். புறப்படுவதற்கு ஸித்தமாக இருந்த அவரைக் கிருஷ்ணசாமி ஐயர் பார்த்து, "உட்காரும்" என்று சொல்லிப் புன்முறுவல் செய்தார். அவருடைய முகக்குறிப்பினால் மூனிசாமி ஐயருடைய வார்த்தையை மறுக்கும் தைரியம் எனக்கு உண்டாயிற்று. அவர் என் கேள்விக்கு விடைகூறத் தொடங்கித் தாம் சித்தூரில் படித்ததாகச் சொன்னார்; தமக்குத் தமிழ்ப்பாடம் சொன்ன உபாத்தியாயர் இன்னாரென்பதையும் தெரிவித் தார்; அப்பால் பண்டிதர்களைப்பற்றிச் சிறிதுநேரம் இழி வாகப் பேசினார். அதைக் கேட்டபோது எனக்கு மிக்க வருத்தம் உண்டாயிற்று.

"எங்கேயோ தெலுங்கு தேசத்தில் யாரோ உப யோகமற்ற பண்டிதர் ஒருவரிடம் படித்ததை வைத்துக் கொண்டு இப்படி ஒரே யடியாகத் தூஷிப்பது கூடாது. தமிழின் பெருமையை அறிந்து கொள்ளாதது உங்கள் குற்றமே யொழியத் தமிழின் குற்றமன்று. உங்கள் பண்டி தர் உங்களுக்குத் திருப்தி யுண்டாகும்படி பாடம் சொல்ல வில்லை. அதனால் எல்லோருமே அத்தகையவர்களென்று நினைப்பது தவறு. இங்கிலீஷ் படித்துவிட்டால் தேச பாஷா பண்டிதர்களைக் குறைவாகக் கருதும் இயற்கை வளர்ந்துவிடுகிறது. மற்றவர்கள் இப்படிச் சொன்னாலும் அதிகக் குற்றமில்லை. உங்களைப் போன்றவர்கள் இப் படிப் பேசுவது அழகன்று" என்றேன். கிருஷ்ணசாமி ஐயர் என்னுடைய பேச்சில் திருப்தி யடைந்து புன்னகை பூத்துக்கொண்டே இருந்தார். அப்போது என்னை இன்னாரென்று அவருக்குக் கிருஷ்ணசாமி ஐயர் அறிவித் தார். அந்தப் பத்திரிகைக்காரருக்கு எதிர்பாராத

உணர்ச்சி உண்டாயிற்று ; முகத்தில் பிரகாசம் மங்கியது ; தாம் கூறியதற்காக மனத்துக்குள் அஞ்சி இரங்குவது அவர் முகக்குறிப்பினால் வெளியாயிற்று.

"எனக்கு உங்களைத் தெரியாது; தோற்றியதைப் பேசிவிட்டேன்" என்று அவர் என்னை நோக்கிக் கூறினர்.

அப்பால் புறநானூறு முதலிய பழந்தமிழ்ச் செய்யுட்களிலுள்ள விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தேன். நேரம் போனதே தெரியவில்லை. முனிசாமி ஐயர் கேட்டுக்கொண்டே இருந்தார். அவ்வப்போது தம்முடைய மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

அப்போது கிருஷ்ணசாமி ஐயர், "தமிழில் ஒன்றுமில்லையென்று சொன்னீரே; இந்தமாதிரி நாட்கணக்காக இவர்கள் விஷயங்களை எடுத்துச் சொல்வார்கள்" என்று கூறினர்.

முனிசாமி ஐயர், "ஏதோ தெரியாமல் சொல்லிவிட்டேன்; எனக்குத் தெரியாத குறையைப் பாஷை மேலும் பண்டிதர்கள் மேலும் ஏற்றிச் சொன்னேன்" என்று சொல்லி விடை பெற்றுக்கொண்டார். அவர் அப்படிக் கூறும்போது தமிழின் பெருமையை அவர் உணர்ந்து கொண்டமையைத் தெரிந்து என் மனத்தில் ஓர் ஊக்கம் உண்டாயிற்று; 'இப்படிக் காரணமில்லாமல் தம்முடைய அறியாமையினால் தமிழையும் பண்டிதர்களையும் தூஷிக்கும் கனவான்கள் எவ்வளவோ பேர்கள் இருக்கிறார்களே! அவர்கள் யாவரும் இவரைப் போல மனம் மாறினால் எவ்வளவு நன்றாக இருக்கும்!' என்று எண்ணினேன்.



இலங்கை இந்தியா வரலாறுகள்

ந. நாராயணன், பி.ஏ., பி.எல்., எல்.டி.,
(இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம்)

தற்சமயம் இந்தியரை நாடு கடத்தவேண்டுமென்று இலங்கையின் பெரும்பான்மைக் கோஷ்டியரான சிங்களவர் பெருமுயற்சி செய்து வருகின்றனர். இச்சிங்களவரும் இந்தியரே என்றாலும், தாங்கள் பிற இந்தியருக்குச் சிறிது காலம் முன்னதாகவே இலங்கையில் வந்து குடியேறிவிட்டபடியால், இலங்கை முழுவதும் தங்களுக்கே உரியது என்று போராடுகிறார்கள். இந்தப் போராட்டம் சரியோ பிழையோ என்பதைத் தீர்மானிப்பது இப்போது என்னுடைய நோக்கமல்ல. ஆனால், இலங்கையின் சரித்திரமும் இந்தியாவின் சரித்திரமும் ஆதிமுதல் இன்றுவரை தொடர்புற்றிருக்கின்றனவென்றும், அவ்விரு சரித்திரங்களையும் ஒன்று சேர்த்து ஆராய்தல் அவசியமென்றும், அவ்வாறு ஆராய்ந்தால் சில சுவாரசியமான உண்மைகள் வெளியாகுமென்றும் நிரூபிக்கவே இக்கட்டுரையை எழுத முன்வந்தேன்.

இலங்கையின் சரித்திரத்திற்கு ஆதாரங்களாகச் சில நூல்கள் பாளிபாஷையிலும் சிங்கள பாஷையிலும் உள்ளன. இவற்றுள் முக்கியமானவை தீபவம்சம், மகாவம்சம், சூலவம்சம், பூஜாவலிய, நிகாயசங்ரக, ராஜாவலிய என்பன. இவை இந்தியாவில் எக்காலத்தில், எவ்வாறு சிங்களவர் உற்பத்தியானார்கள் என்பதையும், அவர்கள் எப்பொழுது, எவ்வாறு, இலங்கைக்கு வந்தார்கள் என்பதையும், இலங்கைக்கு வந்த பிறகு அவர்கட்கு இந்தியாவுடன் எவ்விதத்தொடர்பு இருந்து வந்தது என்பதையும் பற்பலவிடங்களிற் கூறுகின்றன. இலங்கையின் சரித்திரம் எழுதுவோர்க்கும் இந்தியாவின் சரித்திரம் எழுதுவோர்க்கும் இவ்விவரங்கள் மிகவும் உபயோகமாயிருக்கும். பேர் பெற்ற ஜி. சி. மெண்டிஸ் (*G. C. Mendis*) என்ற சரித்திர ஆசிரியர் ஒருவர் இவ்விவரங்களையும் இந்திய சரித்திர ஆதார நூல்களில் இலங்கையைப்பற்றியுள்ள விவரங்களையும் ஒருங்கே உபயோகித்து இலங்கையின் பூர்வ சரித்திரத்தை வெகு நேர்த்தியாய் எழுதியிருக்கின்றார். இந்தியாவின் பழைய வரலாற்றையும் இவ்வாறே இலங்கை வரலாற்றுடன்

அமைத்து ஓர் இந்திய ஆசிரியர் எழுதுவாரேயானால், இருநாடு களுக்கும் நலமாயிருக்கும்.

இலங்கையின் ஆதிசரித்திரம்

இலங்கையின் ஆதி சரித்திரம் உத்தர ராமாயணத்தில் கூறப் பட்டுள்ளது. ஆதியில் இலங்கை அரக்கருக்குச் சொந்தமாயிருந் தது. பின்பு அரக்கர் திருமாலால் பாதாளத்திற்குத் தரத்தப் படவே, குபேரனும் அவன் அனுசரராகிய இயக்கரும் இலங்கையை இருப்பிடமாகக் கொண்டனர். அதன்பின், இராவணன் தலை யெடுத்து இயக்கரையும் குபேரனையும் இலங்கையைவிட்டு அகற்றி னன். இராமபிரான் இராவணனைக் கொன்றபின் விபீடணன் இலங்கைக்கு அரசனானன். பிற்காலத்தில் அரக்கர் பாடு என்ன யிற்றே தெரியவில்லை. கி. மு. ஏழாவது நூற்றாண்டில் இலங்கை மறுபடியும் இயக்கர் வசம் இருந்ததாகத் தெரியவருகிறது. கி. மு. ஐந்தாவது நூற்றாண்டில் இயக்கரிடமிருந்து சிங்களவர் இலங்கை யைக் கைப்பற்றினர்.

சிங்களவர் யார்?

இந்தியாவில் லாடம் என்னுமோர் இராச்சியத்தில் ஓர் அரசன் ஆட்சி செய்தான். அவனுக்கு யார் சொல்வதையும் கேளாத ஒரு புதல்வி இருந்தாள். அவள் ஒரு நாள் வீட்டை விட்டு ஓடிக் காட்டை அடைந்தாள். அங்கு அவள் ஒரு சமயம் தனிமையாய் அகப்பட்டுக்கொள்ள, அவளை ஒரு சிங்கம் தூக்கிச் சென்று தன் குகையில் வைத்துக்கொண்டது. அங்கே அவளுக்கு ஒரு பைய னும் ஒரு பெண்ணும் பிறந்தார்கள். குழந்தைகள் வளர்ந்தபின் தாயுடன் குகையை விட்டுத் தப்பியோடிவிட்டார்கள். பையன் லாட தேசத்திற்கு அரசனாகி, தன் தங்கையையே மணந்து கொண் டான். இருவருக்கும் விஜயன் என்ற ஒரு புத்திரன் பிறந்தான். அவன் இளமை முதலே மிகவும் துஷ்டனானன். அவனுக்கு அவனைப்போலவே பல துஷ்ட நண்பர்களும் உண்டானார்கள். அவர்களது இம்சையைப் பொறுக்கமுடியாமல் அரசன் அவர்களை ஒரு கப்பலில் ஏற்றிச் சமுத்திர மத்தியில் விட்டுவிட்டான். அவர்கள் தற்செயலாய் இலங்கைக்கு வந்து சேர்ந்தார்கள். அவர் களைத்தான் ஆதிசிங்களவர் என்று சொல்லுகிறார்கள்.

சிங்களவர் இலங்கையை வென்றவாறு

சிங்களவர் வரும்பொழுது இலங்கையை இயக்கர் ஆண்டு கொண்டிருந்தனர். குவேணி என்ற இயக்கி ஒருத்தி விஜயன் முதலியோர் கரையேறிய இடத்தின் அருகிலிருந்துகொண்டு, அங்கே வருபவர்களெல்லோரையும் உண்ண ஆயத்தம் செய்து

கொண்டிருந்தாள். புத்தபிரானின் ஆணையால் இந்திரனவன் விஜயனைப் பாதுகாப்பதற்காக மகா விஷ்ணுவை இலங்கைக்கு அனுப்ப, மகாவிஷ்ணுவும் தன் மந்திர சக்தியால் விஜயனைக் காத்தார். விஜயன் குவேணியை வென்று, அவள் வேண்டுகோளுக்கிணங்கி அவளை மணந்து கொண்டான். பின்பு குவேணியின் சூழ்ச்சியால் இயக்கர்களை வென்று இலங்கையைத் தன் வயப்படுத்திக்கொண்டான். ஆனால், இலங்கைக்கு மன்னனாக முடியவில்லை. ஏனெனில், மானிட அரச குலத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணியை மணந்து கொண்டாலன்றி க்ஷத்திரியன் மகுடாபிஷேகத்திற்கு உரியனாகான் என்பது சாஸ்திரம். ஆகவே, சாஸ்திரானுசாரமாய் மணப்பதற்காக, மதுரைக்குத் தூதனுப்பி, மதுரை மன்னன் அனுமதியின்மேல் ஓர் அரசிளங்குமரியை விஜயன் மணந்து கொண்டு இலங்கையரசனாக முடிசூட்டப்பெற்றான். அவ்வாறே, அவன் தோழர்களும் பாண்டிய நாட்டுப் பெண்மணிகளை விவாகம் செய்துகொண்டனர். எனவே இலங்கையில் மனிதர் முதன் முதல் வந்து குடியேறிய காலந்தொடங்கி, இலங்கையரும் இந்தியரும் சம்பந்திகள் ஆய்விட்டார்கள்!

பின்வந்த இந்தியர்கள்

இலங்கையின் இரண்டாவது அரசனான பாண்டுவாசுதேவன் என்பானும் இந்தியாவிலிருந்து வந்தவனே. இவனுக்கு இருநூறு ஆண்டுகட்குப் பின்னர்த்தான் அசோக சக்கரவர்த்தியின் மூலம் இலங்கைக்குப் பௌத்த சமயம் வந்து சேர்ந்தது. அதனால் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் நட்பு அதிகமாயிற்று. ஆனால், இந்நட்பு நீடிக்கவில்லை. கி. மு. இரண்டாவது நூற்றாண்டில் இலங்கையின் வடமேற்குப்பகுதியில் மாதோட்டம் என்ற ஒரு பெரிய துறைமுகம் இருந்தது. இத்துறைமுகத்தின் வியாபாரம் அந்நாளில் அளப்பரிது. இவ்விடத்தைத் திருஞானசம்பந்தர் திருக்கேதீச்சரப் பதிகத்தின் பாட்டு ஒவ்வொன்றிலும் சிறப்பித்துக் கூறியுள்ளார். அந்நானமே சுந்தரரும் அதே பெயருடைய பதிகத்தில் இதனைச் சிறப்பித்துக் கூறியுள்ளார். மாதோட்டமானது துறைமுகமாக இருந்ததோடு சைவத்திருத்தலமாயும் இருந்தபடியால், சைவர் பலர் அங்கே வருவதுண்டு. ஆனால் அச்சமயம் சிங்களவரின் ஆட்சிவலுவற்றிருந்தபடியால், சைவர் வந்திறங்கு மிடத்தில் கடற்கொள்ளைக்காரர் நிலக்கொள்ளைக்காரர் இவர்களுடைய உபத்திரவம் அதிகமாயிருந்தது. இதைத் தீர்ப்பதற்காக இலங்கையின் வடமேற்குப் பகுதியைச் சைவர் தாங்களே ஆளவேண்டியதாயிற்று. ஆகவே, அவர்கள் ஆட்சிக்குத் தேவையான தானைகளையும் படைக்கலங்களை

யும் மரக்கலங்களில் ஏற்றிக்கொண்டு இலங்கைக்கு வந்தார்கள். இவர்களுள் இருவர் சேனன் என்றும் குத்திகன் என்றும் பெயர் கொண்டு மலபாரில் இருந்து வந்த தமிழர் என்று மகாவம்சம் கூறுகின்றது. அக்காலத்தில் சேர நாடு அல்லது கேரள நாடு என்றும் இக்காலத்தில் மலபார் அல்லது மலையாளம் என்றும் சொல்லப் பட்ட தேசம் கி. பி. ஏழாவது எட்டாவது நூற்றாண்டுகள் வரை தமிழ் நாடாகவே இருந்தபடியால், அக்காலத்தில் தென்னிந்தியா வின் மேற்கரையிலிருந்து வந்தவர்களை இலங்கையர் மலையாளிகளென் றும் தமிழரென்றும் வேற்றுமைப் படுத்தாது அழைத்தனர். மேலும், சமீபகாலம் வரை இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வரவேண்டு மானால் இந்தியாவின் மேல்கரைத் துறைமுகங்களிலிருந்து கப்ப லேறி வருவதே சுலபமாயிருந்தது. எனவே, மலையாளிகள் என்ற பெயர் பொதுவாகத் தென்னிந்திய மக்கள் எல்லோருக்குமே இலங் கையரால் வழங்கப்பட்டு வந்தது.

சேனன், குத்திகன் என்பவர்கட்குப்பின்னல் ஏலேலன் என்ற தமிழ்மன்னன் இலங்கையின் வடபாகத்தை 44 ஆண்டுகள் ஆண் டான். இவன் காலத்தில்தான் இலங்கையருக்கும் இந்தியருக்கும் பெரும்போர் இலங்கையில் நிகழ்ந்தது. அதில் சிங்களவரசனை துட்டகேமுனு வெற்றியடைந்தான். இன்றும் இவனையே சிங்களவர் தங்களுடைய முதல் வீரனாகக் கொண்டாடுகிறார்கள்.

மத்தியகால வரலாறுகள்

இதற்குப் பின்னும் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் நெருங் கிய தொடர்பு இருந்துகொண்டே இருந்தது. சினேகிதராகவோ பகைவராகவோ ஜனங்கள் இங்கு மங்கும் ஏராளமாகப் போய்க் கொண்டும் வந்துகொண்டும் இருந்தார்கள். நட்போ, பகையோ, இரண்டு தேசங்களுக்கும் இடையே சம்பந்தஸ்தானம் மட்டும் எப் பொழுதும் அற்றுப்போனதே கிடையாது. பன்னிரண்டாவது நூற்றாண்டில் மகா பராக்கிரமபாகு என்றொரு பேர்போன சிங்கள வரசன் இருந்தான். அவனுடைய பிதாமகன் ஒரு பாண்டிய இள வரசன். மகாபராக்கிரமபாகு இந்தியா மேலும் படையெடுத்தவன். ஆனால், இவன் படையில் இந்தியப் போர் வீரர்கள் உண்டு: இவன் இலங்கையிற் குடியேறிய இந்தியர்களுக்கு எல்லா வசதி களும் செய்து கொடுத்தவன்.

விரிவஞ்சி இலங்கையில் சோழர் ஆதிக்கியத்தையும் விஜயநகர அரசரின் ஆதிக்கியத்தையும் விடுத்து, இரண்டு நாடுகளுக்கும் கலை விஷயமாய் உள்ள சம்பந்தத்தையும் விடுத்து, இலங்கையில் கடைசி யில் அரசாண்ட மன்னர்களைக் குறித்துமட்டும் சிறிது கூறுவோம்.

பிற்கால நிகழ்ச்சிகள்

பதினெட்டாவது நூற்றாண்டின் துவக்கத்தில் நரேந்திரசிங்கன் என்பான் சிங்களவரின் அரசனுய்க் கண்டியில் ஆண்டான். இவன் மதுரை நாயக்கர் குலத்தைச்சேர்ந்த ஓர் இளவரசியை மணந்தான். இவன் இறந்த பிறகு அவ்விளவரசியின் சகோதரன் ஸ்ரீவிஜய ராஜ சிங்கன் என்ற பெயருடன் சிங்காதனம் ஏறினான். அதுமுதல் பதினெட்டாவது நூற்றாண்டின் இறுதிவரை, அதாவது ஆங்கிலேயர் அரசாட்சி துவங்கும் வரை, இலங்கையை ஆண்ட அரசர்கள் இந்தியரே. அதற்கு முன்னும் பின்னும் அரசகுலத்திற்கு வெளியேயுள்ள சாதாரணமக்களும் நூற்றுக்கணக்காக இந்தியருடன் சம்பந்தம் செய்திருக்கிறார்கள். இன்றும், இலங்கையின் பிரபலமான குடும்பங்களைச் சேர்ந்த சிலர் இந்தியரின் சம்பந்திகளாயிருக்கிறார்கள். இவ்வாறுக, ஆதியோடந்தமாய் இடையறுது, பரம்பரைச் சம்பந்திகளாயுள்ளவர்களிடையே எவ்வாறு கலகம் ஏற்படுகின்றது என்பதைப் பற்றி எல்லோரும் யோசிக்க வேண்டியதாயிருக்கிறது. ஆனல், ஒன்றை மட்டும் எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள்: அதாவது, தனி மக்கட்கிடையே உண்டாகும் சம்பந்திக் கலகங்கள் எவ்வாறு கூடிய சீக்கிரத்தில் தீர்ந்து போகின்றனவோ, அவ்வாறே நாடுகட்கிடையே உண்டாகும் சம்பந்திக் கலகங்களும் கூடிய சீக்கிரத்தில் தீர்ந்து போய் விடும் என்பதே. ஆகையால், இலங்கையும் இந்தியாவும் இன்று சமரசமாயில்லாவிடிலும், விரைவில் ஒன்றுகூடிவிடும் என்று நாம் எண்ணுதற் கிடமுண்டு.



மனத்தைப் பண்படுத்தல்

கே. சந்திரசேகர ஐயர், எம். ஏ., பி. எல்.

ஒரு சிறு ஸம்பவம் என் ஞாபகத்திற்கு இப்பொழுது வருகிறது. ஒரு நண்பர்வீட்டில் ஒரு விசேஷத்திற்கு எனக்கு அழைப்பு வந்தது, நான் போயிருந்தேன். அங்கே ஹரிகதா காலக்ஷேபத்தைப் பாகவதர் ஒருவர் வெகு அட்டஹாஸத்துடன் செய்துகொண்டிருந்தார். பட்டணத்திலுள்ள பிரமுகர்கள் பலர் முன்னல் உட்கார்ந்துகொண்டு கதையைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அந்த நண்பருடைய பேரக் குழந்தை ஒன்று, மூன்று வயதிருக்கலாம்; அழகிய முகம், சிவந்த மேனி, கிருஷ்ண விக்ரஹம் போன்ற உருவம்; மெல்லிய பட்டாடையுடுத்திக்கொண்டு நடுவில் வந்து நின்றது. பாகவதர் கையை உயரத் தூக்கிக் கூப்பாடு போடுவதைக் கேட்டுக்கொண்டே பின்னல் நகர்ந்தது குழந்தை. சற்று நகர்ந்ததும் கீழே சப்பளம் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்த ஒரு பெரிய மனிதரின் தொடையால் தடைப்பட்டு குழந்தை அவருடைய மடியில் அப்படியே உட்கார்ந்துவிட்டது. அவ்வளவு தான். என்ன நடந்ததென்று நினைக்கின்றீர்கள்? உங்களில் அநேகருக்கு எனக்கு இருந்ததுபோன்ற எண்ணம் உண்டாயிருக்கக் கூடும்; அதாவது, அப்படியே குழந்தையைக் கட்டியணைக்கத்தான் ஆசை ஏற்பட்டிருக்கும். ஆனல் நடந்தது என்னவெனின், கூப்பிடாமல் குழந்தை தம் மடியில் திடீரென்று உட்கார்ந்ததைச் சற்றும் அங்கீகரிக்காத அப்பெரியவர் ஏதோ தவளையோ தேரையோ மடியில் 'பொத்'தென்று விழுந்தவுடன் ஏற்படக்கூடிய மனவேதனையுடன் விழித்தார். குழந்தையும் நொடிப்பொழுதில் அவருடைய கவலையை அறிந்தமாதிரி அவரை ஏற எடுத்துப் பார்த்துவிட்டு எழுந்து ஓடிவிட்டது. அந்தப் பிரமுகர் படித்தவரல்ல என்பதற்கில்லை. புத்திசாலி; மிக்க அநுபவங்கூடப் பெற்றவர். ஆனல் குழந்தையைக் கண்டு களிக்கும் மனப்பாங்கில்லாதவர். நமக்குத் தெரிவதற்குமுன் அச் சிறுகுழந்தைக்கே தெரிந்துவிட்டது அவ்விஷயம். ஆம், நாகரிகம் பட்டணத்தில் இல்லாததா, அதிலும் அந்தப் பிரமுகருக்கு இல்லாததா என்று எண்ணும்பொழுது

தான் அவருக்கு இருந்த குறை என்னவென்பதைக் கவனிக்கத் தூண்டுகிறது. அதைத்தான் 'கல்சர்' (Culture) போதாதென்று சொல்லவேண்டி இருக்கிறது. கல்வியறிவும் கேள்வி ஞானமும் அவரை என்ன செய்யமுடியும்? காளிதாஸன் சாகுந்தலத்தில் சொல்லியிருபபதை அறிந்துங்கூட அப்பெரியாருக்குக் குழந்தையைத் தம் மடியில் ஒரு கணமாவது வைத்திருக்க அவா இல்லையென்றால், படிப்பில் என்ன இருக்கிறது? அநுபவத்தில்தான் என்ன இருக்கிறது?

ஆனால் இதிலிருந்து நீங்கள் 'கல்சர்' (Culture) என்னும் ஆங்கிலப் பதத்தின் அர்த்தம் முழுவதும் தெரிந்துகொண்டதாகக் கருதவேண்டாம். ஏனென்றால் அப்பதத்தின் அபிப்பிராயத்தைத் தமிழ்ச்சொல் ஒன்றினால் சுருக்கமாக எடுத்துக்காட்ட இயலாது. தமிழர்களிடம் 'கல்சர்' (Culture) அதிகம் இருக்கின்றதே யொழிய அந்த வார்த்தையை மொழிபெயர்த்துச் சொல்வதற்குத் தகுந்த வார்த்தை இல்லை. ஒரு விதமாக அதன் பொருளைப் 'பண்பட்ட உள்ளம்' என்று சொன்னால் சரியாயிருக்கும். ஸம்ஸ்கிருதத்தில் உட் கருத்துக்கள் அநேகம் அடங்கிய வார்த்தையொன்று இந்த அபிப்பிராயத்தைச் சிறிதளவு காட்டுகிறது. அதுதான் 'ஸம்ஸ்காரம்' என்னும் மொழி. இப்பொழுது எதை நாம் குறிக்கின்றோம் என்பதை அறிந்துகொள்ள முடிந்தால், தமிழிலோ அல்லது ஸம்ஸ்கிருதத்திலோ அதற்குச் சரியானமொழி இல்லாவிட்டால் என்ன? குடியொன்றும் முழுகிப்போய்விடாது. ஆங்கிலத்தையே இப்பொழுது உபயோகித்துக்கொண்டு நாம் விரும்பும் விஷயத்தைக் கவனிக்க முயலுவோம்.

"இலைகளினின்றும் உண்டாகிய புஷ்பத்திற்கும் இலைக்கும் எவ்வளவு தூரமோ அவ்வளவு தூரந்தான் புஸ்தகத்திற்கும் 'கல்சர்' (Culture) என்பதற்கும்" என்று தமிழ் நாட்டில் பெயர் பெற்ற ஆசிரியரான ஸ்ரீமான் கே. எஸ். வேங்கடரமணி ஒரு புத்தகத்தில் வெளியிட்டிருக்கிறார். வாஸ்தவம்; என்னதான் இலைகளின் நடுவில் புஷ்பத்தைப் பகவான் ஸ்ருஷ்டித்திருந்தாலும், இலைக்கும் பூவிற்கும் அதிக வித்தியாஸமில்லையா? அதுபோல் ஒருவன் படிப்பினால் எவ்வளவு அறிவைப் பெற்றிருந்தாலும் அவன் உள்ளத்தில் ஸம்ஸ்காரம் ஏற்படவேண்டுமானால், கேவலம் படிப்பின் மிகுதியால் மாத்திரம் அது அவனுக்குக் கிட்டாது. வேறு என்ன வெல்லாமோ இருந்து, படிப்பின் ஸாராம்சமும் அநுபவங்களின் பலனும் கலந்து சரியான பண்பட்ட உள்ளம் அவனுக்கு உண்டாக வேண்டும். அவ்விதம் இல்லாத காரணத்தினால்தான் வாழ்க்கை

யில் துர்க்கதியினால் பீடிக்கப்பட்டவன்போல் அநேகஸமயங்களில் மனிதன் தோன்றுகிறான். பண்பு என்னுங் கருவி கையில் இல்லாத தால், படிப்பும் புகழும் செல்வமும் செல்வாக்கும் அவனை எங்கேயோ பாறையின்மேல் மோதுண்ட மரக்கலம்போல் விட்டு விடுகின்றன.

அகராதியை எடுத்துப் புரட்டினால் 'கல்சர்' (Culture) என்னும் ஆங்கிலப்பதத்திற்கு, புத்தியை, கல்வி கலைஞானம் முதலிய ஸஹாயங்களாலும் இன்னும் உயர்ந்த அபிருசிகளாலும் பண்படுத்திக்கொள்ளுதல் என்றுதான் புலப்படும். உடனே உங்களில் அநேகருக்கு, 'ஏன், நாம் கலாசாலையில் பி. ஏ. பட்டம் பெற்றவராயிற்றே. நம்மிடம் நிச்சயம் 'கல்சர்' (Culture) இருக் கத்தான் செய்யும்' என்று தோன்றக்கூடும். ஆனால், படிப்பும், பாட்டும், இன்னும் மற்றக் கலைப்பயிற்சியும் எல்லோரையுமே பண்பட்டவராகச் செய்து விடுகின்றனவா? இல்லை; தேடித்தேடி அலைந்து நூறுபேரில் ஒருவரைத்தான் நாமும் பண்பட்டவராக ஒப்புக்கொள்கிறோம். அவ்விதம் காணும் மனிதனுடைய சிறிய செய்கையிலும் பேசும் வார்த்தையிலுங்கூட அப்பண்பின் சின்னங் கள் பிரதிபலிப்பதை நாம் உணரலாம். உலகத்தில் பெரிய காரி யங்களைச் செய்யும் மஹான்களைப் பார்த்தால் இந்த விஷயம் நன்கு புலப்படும். நாட்டில் பெரும் கிளர்ச்சி; எந்த நிமிஷம் எங்கே அடிதடி நடக்குமோ என்ற பயம் அதிகமாக இருப்பதாக வைத்துக் கொள்வோம். அப்பொழுது ராஜீய காரியங்கள் எல்லாவற்றை யும் தாங்கிச் சீர்குலையாமல் பாதுகாக்கும் ஒரு முதல் மந்திரியையோ அல்லது கவர்னரையோ நினைத்துப் பாருங்கள். அவர் எவ்வித மிருந்தால் நமக்கு க்ஷேமமுண்டாகும்? முதலில் அவர் விஷயங்களை நன்கு பரிசோதித்துப் பார்க்கும் புத்தியுடையவராகவும், அதனுடன் தைரியத்தைக் கைவிடாதவராகவும், எதையும் அமர்க்களப்படுத் தாதவராகவும், தாம் முயன்று ஸாதிக்கவேண்டிய காரியத்தில் மனம் தளராதவராகவும் இருக்கவேண்டும். பிறகு ஊரில் அமைதி ஏற்பட்டவுடன் இவ்விதம் நடந்துகொண்டவருடைய உள்ளம் எவ்விதமிருந்தால் நாம் மேலே சொல்லிய பண்பட்டவராக அவரைக் கருதுவோமென்று கவனிப்போம். கோபமில்லாமல் பாடு பட்டிருந்தால்தான் அவரைத் தூஷித்த சத்துருக்களும் ஒருவாறு சாந்தமடைவார்கள். தம் ஜயத்தையே கருதி பிறருடைய ஸந் தோஷத்தை அதிகம் பாராட்டாமல் அவர் உழைத்திருந்தால் நெருங்கிய ஸ்நேகிதர்களுக்கும் அவரிடம் மனச்சலிப்பு ஏற்படும். ஆனால் வெற்றியில் மார்தட்டாமல் தம்மைச் சேர்ந்தவர்களுக்கும் விரோதிகளுக்கும் நலத்தை உண்டாக்கியவர் தாம் என்று நினை

யாமல் மேலே செய்யவேண்டிய காரியத்தில் புத்தியைச் செலுத்தி ஞானல் அதைவிட உயர்ந்த பண்பட்ட மனத்தை எங்கு நாம் காணமுடியும்? மேலும், பண்பட்ட உள்ளத்தின் அடையாளம் எதை யும் எளியவகையில் எடுத்துக்காட்டுவதே. பெரிய தத்துவத்தைச் சிறிய வார்த்தையில் எடுத்துக்காட்டுவதுதான் பண்பட்டவனுடைய இயல்பு. பண்பட்டவன் ஓர் அபிப்பிராயத்தை வைத்துக்கொண்டு அதோடு மன்முடி விழுவதில்லை. அபிப்பிராயத்தின் வலையில் சிக்காமல் அதற்குமேல் நின்று சுலபமாக அதை எடுத்துப் பேசு வதே அவனுடைய திறமையைக் காட்டும். பண்டிதன் என்முல் ஒருவரும் அறியாவண்ணம் பெரிய பெரிய வார்த்தைகளை வாரி இறைப்பதுதான் தகும் என்று சிலர் நினைக்கலாம். ஆனல் நிஜமான பண்டிதனுயிருந்தால் அவன் அறிந்த ஞானம் அவனை எளிய பாஷையில்தான் எதையும் பேசச்செய்யும். பண்பட்டவன் இந்த விஷயத்தைத்தான் முதலில் அறிந்துகொள்ளுகிறன்.

பண்பட்ட மனம் என்னும்பொழுது புண்பட்டமனம் என்று கொள்ளவேண்டாம். ஆனல் இந்த இரண்டு பதங்களிலும் த்வனிப்பொருத்தம் மாத்திரம் இல்லை; ஓர் அளவு விஷயப்பொருத் தமும் இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. ஏனென்முல் வாழ்க்கையில் சிரமங்களையும் கஷ்ட நஷ்டங்களையும் அநுபவித்த வரே பிறரிடம் அநுதாபம் தயை தாக்ஷிண்யம் முதலியவைகளைக் காட்டுவதை நாம் நன்கறிவோம். பிறருடைய நல்ல குணத்தில் நம்பிக்கையையும் அபிமானத்தையும் காட்டுவது போற்றத்தக்க விஷயமல்லவென்று யார்தாம் சொல்லுவார்கள்! ஆனல் கஷ்டங் கள்தாம் மனத்திற்குப் பண்பை அளிக்கவல்ல ஸாதனங்களென்று சாதிப்பதும் அவ்வளவு சரியல்ல. பெரும்பாலும் சிரமமும் தோல்வி யும் மனிதனை ஒழுங்குபடுத்துவதை மெய்ஞ்ஞானியர்கள் அறிந்து சொல்லுவார்கள். சரித்திரத்தில் நாமறிந்த பெயர் பெற்ற தீரர்க ளெல்லாம் தாமாகவே கஷ்டங்களையும் சிரமங்களையும் மேற்கொண் டிருப்பதை வாசித்தறிந்தும் இந்த விஷயத்தைப்பற்றிச் சந்தேகிக்க ஹேது எதுவுமில்லை. ஆனல் அதற்காக மனம் புண்ணுய் எப்பொழு தும் முகம் வேதனையைப் பூண்டிருப்பதும் பண்பட்டவனுடைய அடையாளமாக ஆகமாட்டாது. ஒன்றுக்கொன்று சற்று விரோத மாய்த் தோன்றக்கூடிய குணங்களே சரியான அளவில் தோன்றி மனி தனிடத்தில் காலத்திற்கேற்றவாறு பரிணமிக்கவேண்டும். அதுவே அவன் பெறும் பண்பு. அதற்காகத்தான் வால்மீகிமஹரிஷி ராமனு டைய குண விசேஷங்களைக் குறிக்குங்கால் அவனுக்கு மிருதுவான ஸ்வபாவம் இருந்தும் மனவுறுதியைக்கைவிடவில்லை என்றும், பிறருக்

குப் பிரியமானவற்றையே பேசும் இயல்பிருந்தும் அஸத்யத்தை ஒரு பொழுதும் சொன்னவனல்லன் என்றும் வருணித்திருக்கிறார் போலும். ஒன்றுக்கொன்று ஒவ்வாதவைகளாகத் தோன்றும் குணங்களையே சேர்த்து வைத்துக்கொண்டு அளவு கடக்காமல் காப்பாற்றி, ஒழுக்கத்தாலும் சீலத்தாலும் மற்றும் தயை தாக்ஷிண்யங்களாலும் அரிய ஸம்ஸ்காரத்தை மனிதன் பெறுகிறான்.

ஒருவனுக்கு அதிக சிரமங்கள் உண்டாகாமல் அதிருஷ்டம் எல்லாவற்றையும் கொடுப்பதாக வைத்துக்கொள்வோம். அவனுடைய செயல்களில் எல்லாம் ஸ்வய நம்பிக்கையையும் தைர்யத்தையும் நிச்சயம் பார்க்கலாம். இவை நல்ல குணங்கள் என்பதில் ஸந்தேகமில்லை. ஆனால் அவன் வாழ்க்கை முழுவதையும் ஊன்றிக் கவனித்தோமானால் தன் போன்ற அதிருஷ்டசாலிகளாக இல்லாதவர்களிடத்திலும் தோல்வி அடைந்தவர்களிடத்திலும் அநுதாபம் அவனுக்கு ஏற்படாதது ஸஹஜமே. புத்தி தீக்ஷ்ணயம் மாத்திரம் ஒருவனுக்கு உலகில் இருந்தால் போதுமா? யுக்தி வாதங்களைக் கொண்டு எல்லோரையும் வென்று தன் சாதுர்யத்தைக் காட்டும் திறமை அவனுக்கு இருந்தால் மாத்திரம் நாம் ஒப்புக்கொண்டு அவனை உயர்ந்தவனாக நினைக்கின்றோமா? தங்கம் ஜ்வலிக்கிறதென்று அதைச் சாப்பிடமுடியுமா? மின்னலைக் கண்டு மயங்குமளவுதான் அவனுடைய புத்திவேகத்தைக் கண்டு நாமும் ஆச்சரியப்படுவோம். ஆனால் எவ்விதம் மின்னலின் மின்சார சக்தியைக் கண்டுபிடித்து அதன் கொடுமையைச் சிறிதாக்கி, வேண்டிய அளவையே உபயோகித்து வீடுகளையும் கட்டிடங்களையும் வெளிச்சத்தால் அலங்கரிக்கின்றோமோ, அம்மாதிரியே புத்தியின் தீக்ஷ்ணயம் ஹிருதயத்தைக் கொளுத்தி வாட்டவிடாமல் அதன் வேகத்தை ஹிருதயத்தின் மார்க்கமாகவே வழிகாட்டி அழைத்துச் செல்வது எவ்வளவு உயர்ந்ததாக ஆகும்!

ஹிருதயத்தை அதிகம் வளரவிட்டால் புத்தியைக்கூட மங்கச் செய்துவிடுமென்று சிலர் கருதுவதையும் நாம் கவனிக்கவேண்டியதுதான். புத்தி நுட்பமும் காரியவேகமும் உடையவர்கள் அநேக காரியங்களைச் சீக்கிரத்தில் முடித்துக்கொள்வதைப் பார்க்கின்றோம். அதிலிருந்து எப்பொழுதும் அவர்கள் செய்வது சரியென்று எண்ணுவதற்கில்லை. யோசிக்கும் குணத்தைக் கைவிடாமல், பிறருடைய வார்த்தைகளுக்கும் காது கொடுத்துப் பிறகே தீர்மானித்துக் காரியங்களைச் செய்யும் மஹான்களையும் பார்த்துக்கொண்டுதான் இருக்கின்றோம். நதியின் பிரவாஹத்தை அணைத்துக்கொண்டு போகும் கரைபோல் செயலின் வேகத்தை யோசனைதான் காப்

பாற்றுகிறது. மலையுச்சியை நாடும் கால்கள் கவனியாமல் பெரும் பள்ளத்தை வேகத்தினால் மாத்திரம் அடைவதேபோல், யோசிக்காதவர்கள் ஆபத்துக்களை அடைகிறார்கள். நின்று நிதானித்து அக்கம் பக்கங்களைப் பார்த்துவிட்டு, எந்த வழி ஆபத்துக்கள் இல்லாமல் மலைச்சிகரத்துக்குக் கொண்டுபோய்விடும் வழி என்று யோசனை செய்யும் வழக்கம் அதைவிட எவ்வளவு மேல்?

நம்முடைய யூனிவர்ஸிடிகளும் கலாசாலைகளும் மாணவர்களுக்குச் செய்யக்கூடிய உபகாரம் ஒன்றுண்டென்பது நிச்சயம். ஆயிரத்தில் நூறு பேர்கள்தாம் வாழ்க்கையில் தாங்கள் செய்ய வேண்டிய தொழில் முறையின் ஞானத்தைக் கலாசாலையில் அடைகிறார்கள். பாக்கித் தொள்ளாயிரம் பெயர்கள் பரீக்ஷை தேறிப் பட்டம் பெறுவதையே லக்ஷ்யமாக நினைக்கின்றார்கள். ஸமூஹவாழ்க்கை, கலையுணர்ச்சி, இல்லறம் நடத்தல் முதலிய காரியங்களில் பிற்காலத்தில் நல்ல அறிவு உண்டாவதற்கு ஏற்றபடியான மனப்பக்குவம் அவசியம்; அதனை அடைவதற்குக் கல்லூரியிலும் யூனிவர்ஸிடிகளிலும் எதைப் பெறவேண்டுமென்பதை ஊன்றிக் கவனித்தால் அது நன்றாய்ப் புலப்படும். அதுதான் விஷய பரிசோதனை. எந்தக் காரியத்தையும் எந்த விஷயத்தையும் பகுத்தறிவுடன் கவனித்துப் பார்க்கும் சக்தி. ஆங்கிலத்தில் *Thinking Mind* என்று சொல்லுவதுகூட அதுதான். அதற்காகவே ஊசிமுனையில் வைத்துப் படிப்பை இளம்வயதிலிருந்தே நமக்கு ஏற்றுகின்றாகள் போலும். சிலருக்கு மருந்து பலிக்கின்றது; சிலருக்கு மருந்துக்குமேல் வியாதி பெரிதாக இருப்பதால் ஊசிமுனையின் ஞாபகம் மாத்திரம் அவர்களை விட்டு அகலுவதில்லை.

பாட்டும் பேச்சும் இலக்கியப் பற்றும் நல்ல விஷயங்கள் என்றும், பண்படுவற்கு ஹேதுக்களென்றும் உலகம் அறியும். ஆனால் அவைகளிருந்தும் மனிதன் ஸந்தோஷத்தை அடையாமலிருப்பது அவைகளை நல்ல வழியில் உபயோகிக்காததனால்தான். அவைகளை ஸ்வயநலத்திற்கென்று மாத்திரம் வைத்துக்கொள்ளாமல் இருந்தால் அப்போது அவை பிறருக்கு எப்பொழுதும் ஸந்தோஷமளிப்பதுடன், கடைசியில் மனிதன் பெறும் பலன்களில் சிறந்தனவாக மாறிவிடும். ஸந்தோஷம் என்பது என்னவென்று யோசித்துப்பார்த்தால் அது மனத்திற்கு மேலும்மேலும்உற்சாகத்தை ஊட்டும் கருவி என்பது தெரியவரும். அவ்வித ஸந்தோஷத்தை அழிவில்லாமற் பெறவேண்டுமானால் அதற்கு ஒரே உபாயந்தான் உண்டு. அது செய்கையில் ஈடுபட்டுத் தன் நினைவை யொழித்துப் பிறரிடமே அன்பு வைக்கும் மனப்பான்மை.

இவ்விதம் ஸந்தோஷத்தைப் பூர்ணமாக அடைவதற்காகத் தான், வீணையையும் புத்தகத்தையும் ஜபமாலையையும் கையிலேந்தித் தாமரையில் வீற்றிருக்கும் வாணிதேவியை நம் தேசத்தில் இவ் வளவு காலமாக நாம் போற்றி வந்திருக்கின்றோம். பண்பட்ட உள் ளத்தின் அடையாளங்களான கலையும் கல்வியும் பக்தியும் அவளு டைய வீணையாகவும் புத்தகமாகவும் ஜபமாலையாகவும் காட்டப்படு கின்றன. நாம் கற்ற படிப்பு நம்மை அமுக்கி மனுஷ்யாதியாக மாறுமலிருப்பதற்கே மலர்ந்த தூய வெண்தாமரையில் தேவியை வீற்றிருக்கச் செய்துள்ளனர். மேலும், இயற்கை, அநுபவம் இவை களையொட்டியே ஞானேதயமாக வேண்டுமென்ற கருத்தை எடுத்துக்காட்டியபடி பலவர்ணங்களின் பொலிவு பெற்ற மயிலின் உருவம் தேவியை அணுகி நிற்கின்றது. இதைவிட வேறு சிறந்த ஸ்ருஷ்டி நம் பண்பட்ட உள்ளத்தின் உயர்விற்கு என்ன வேண்டும்! தன்னலத்தை மறந்து ஞானத்தைத் தேடும் வழிதான் நமக்கு இயற்கையாகவேண்டும்; அவ்விதம் அடைந்த ஞானத்தைக்கொண்டு தன்னையே அறிந்தவன்தான் பண்பட்டவன் என்று சொல்லவும் வேண்டுமா!



சென்னை அகில இந்திய ரேடியோவில் 'Inoculating culture' என்ற விஷயத்தைப் பற்றி 11-8-39ல் பேசியது; அனுமதியுடன் பிரசுரிக்கப்பட்டது.

இரசாயனமும் சமூகவாழ்வும்

கே. ஸீ. வீரராகவையர், எம்.ஏ., எல்.டி.

நாம் அடைந்துள்ள ஞானஸம்பத்து

மிகப் பழைய காலத்தில் உண்டான வேதங்கள் முதலிய நூல்களை இயற்றிய முனிவர்களும் நமது காலத்தில் இலங்கும் நுண்ணறிவாளர்களும் இவர்களுக்கு இடைப்பட்ட காலத்தில் நிகழ்ந்த அறிவாளர்களும் சலிப்பின்றிப் பாடுபட்டுத் தங்களது ஆறறிவுகளையும் செவ்வனே உபயோகித்துத் தொகுத்த அறிவுக்களஞ்சியமே நாம் இன்று அடைந்துள்ள ஞானஸம்பத்தாகும். இந்த ஸம்பத்தில் பற்பல இனங்கள் இருக்கின்றன.

ஒன்று, நமது உள் அகத்தில் நிகழும் உணர்ச்சிகளின் தத்துவங்களையும் குண தோஷங்களையும் அவைகளின் வழி வெளிப்படும் நிகழ்ச்சிகளையும் ஆராய்வதாகும். இதிலே ஆத்ம விசாரணையையும், மதக்கொள்கைகளையும், ஒழுக்க வழக்கங்களையும், மனோதத்துவத்தையும் பற்றிய விவரங்களும் விவாதங்களும் அடங்கியிருக்கின்றன.

மற்றொன்று நமது அகத்துக்குப் புறத்தேயுள்ள பொருள்களைப்பற்றி ஆராய்வதாகும். நமது இந்திரியங்களால் அறியக்கூடிய சேதன அசேதனப் பொருள்களையும், இடி, மின்னல்போன்ற சம்பவங்களையும் ஆராய்தல் இதன் கண் அடங்கும். இன்னும் பொருளாதார நிலை, பண்டைக்கால சரித்திரம், இக்கால அரசாங்க நிகழ்ச்சிகள் முதலியவைகளைப்பற்றி ஆராய்ந்து கிடைத்திருக்கும் அறிவு பிறிதொரு வகையாகும். இவை ஒவ்வொன்றிலும் ஈடுபட்டு, வாழ்நாளையெல்லாம் அந்த அந்த ஆராய்ச்சியிலே செலுத்தி உழைத்த பெரியார் பலர்; அவர்கள் வாழ்நாள் சரித்திரங்களும் உழைத்து அடைந்த பலன்களும் நமது மனத்தை இன்றும் கொள்ளை கொள்கின்றன.

பொருள்களின் வகை

புறப்பொருள்கள் பல வகைப்படும். பூமியிலும் கடலிலும் ஆகாயத்திலுமுள்ள பொருள்கள் எண்ணிக்கையில் அடங்காதனவாகும். அவைகள் திட, திரவ, வாயு நிலைகளில் தோன்றுகின்றன. அவைகளின் உள் அமைப்பு விசேஷங்களையும், வெளித்தோற்றங்களையும் கவனித்து, அவைகளின் குணங்களையும் உபயோகங்களையும் ஆராய்வதற்குப் பற்பலவழிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு வழியையும் பின்பற்றுபவர்கள் அவ்வவ்வழி நிபுணக்கூட்டத்தாராவார்கள். அக்கூட்டத்தார்கள் தொகுத்த அறிவு

வகைகளே இக்காலத்தில் சையன்ஸ்கள் என்ற பொருள் அறிவு நூல்களில் காணப்படுவனவாகும்.

புறப்பொருள் ஆராய்ச்சி

புறப்பொருள் ஆராய்ச்சிவகைக்கு ஓர் உதாரணத்தைக் கவனிப்போம்: ஒரு மலை. அந்த மலையிலிருக்கும் பாறைகளின் அமைப்பு என்ன, அவை எப்படித் தோன்றியிருக்கக்கூடும், அவைகளின் குணங்கள் எவை என்றெல்லாம் ஜீயாலஜி (Geology)க் கூட்டத்தார்கள் ஆராய்வார்கள்; அம்மலையில் வளரும் செடி கொடி விருக்ஷங்களின் அவயவங்கள் எவை, அவைகள் வளர்ந்த விதம் எப்படி, அவைகளிலிருந்து கிடைக்கும் பூக்கள், காய்கள், பழங்கள் முதலியவைகளின் அமைப்பு விசேஷங்கள் எவை என்றவைகளையெல்லாம் பாட்டனி (Botony)க் கூட்டத்தார்கள் ஆராய்வார்கள். அம்மலையில் வசிக்கும் மிருகங்கள் எவை, அவைகளின் உடை, உணவு, உணர்ச்சிகள் எவை எவை என்றும், அம்மலையிலுள்ள விருக்ஷங்களில் வசிக்கும் பறவைகளின் இனங்கள், அவயவங்கள், ஆகார வியவகாரங்கள் எவை எவை என்றும் சூவாலஜி (Zoology)க் கூட்டத்தார்கள் ஆராய்வார்கள். ஜீயாலஜி அறிஞர் 'இது ஒரு கிரானேட் (Granite) பாறை. இதில் குவார்ட்ஸ், பெல்ஸ்பார், மைகா என மூன்றுவிதக் கற்கள் உள; கடினமானது; பளபளப்பாக மினுக்க இழைபடக் கூடியது; வீடுகள் கட்டுவதற்கு உபயோகமானது' என்று சொல்வார். இரசாயன அறிஞர்கள் கிரானேட்டின் மூக்கூறுகளையும் பிரித்துப் பிரித்து ஆராய்ந்து அவைகளில் என்ன என்ன தனிப்பொருள்கள் இருக்கின்றன வென்றும் அவைகளைப் பிரித்துத் தனித்தனியாக உண்டு பண்ணி அவைகளின் பௌதிக ரசாயன குணங்கள், உபயோகங்கள் முதலியவை எத்திறத்தனவென்றும் சோதனை செய்து அறிவிப்பார்கள். உதாரணமாக: குவார்ட்ஸில் சிலிக்கான், பிராணவாயு என்ற தனிப்பொருள்களும், பெல்ஸ்பாரில் பொட்டாசியம், அலுமினியம், சிலிக்கான், பிராணவாயு என்ற தனிப்பொருள்களும், மைக்காவில் பொட்டாசியம், அலுமினியம், சிலிக்கான், நூலவாயு, பிராணவாயு என்ற தனிப்பொருள்களும் இருக்கின்றன என்று சொல்வார்கள். பௌதிக அறிஞர்கள் இத்தனிப்பொருள்களின் தராதர எடை, செறிவு, உருகுநிலை, கொதிநிலை, வெப்பம், மின்சாரம் முதலியவைகளைச் செலுத்தும் குணம் முதலியவைகளைச் சோதித்துச் சொல்வார்கள்.

இப்படி ஒவ்வொரு கூட்டத்தாரும் திரட்டும் அறிவுத்தொகுதி நெருங்கிய சம்பந்தம் உடையதாயும், ஒன்றையொன்று ஆசிரயித்திருப்பதாயும் காணப்படுகிறது. சமூக வாழ்வுக்கு ஒவ்வொரு கூட்டத்தாரும் தங்கள் தங்களால் இயன்ற உதவியைச் செய்து வருகிறார்கள். சில புராணங்கள் தத்தம் கடவுளை உயர்த்திச் சொல்வதைப்போலச் சில சமயங்களில் இக்கூட்டத்தார்களும் தங்கள் தங்களுடைய சேவை மகிமையையும் இன்றியமையாமையையும் புகழ்ந்து பேசுவார்கள். இது தற்புகழ்ச்சியுமல்ல, கர்வமுமல்ல; ஆனால் ஜனங்கள் மன்னிக்கக்கூடிய ஓர் உணர்ச்சி வெளியீடே.

இரசாயன ஆராய்ச்சி

நன்று; இரசாயன அறிஞர்கள் செய்த சமூக சேவைகள் எவை? அவைகளினால் மனிதர்களுக்குத் துன்பம் பெருகியுள்ளதா, சுகம் பெருகியுள்ளதா? அவர்கள் கேவலம் வஸ்துக்களின் எண்ணிக்கையைத்தான் அதிகப்படுத்தியிருக்கிறார்களா, அல்லது ஜனங்களின் மனோபாவத்தையும் மனோரம்மியத்தையும் மேன்மைப்படுத்தியிருக்கிறார்களா, அவர்கள் ஆராய்ச்சிகள் பொருளாதார நிலையை மாறுபடச்செய்துள்ளனவா என்ற சில விஷயங்களை இங்கு ஆராய்வோம்.

இரசாயனிகளுக்கு முக்கிய ஆயுதம் ஒரு சோதனைக்குழல். அதில்தான் பொருள்கள் பல சேர்க்கையினால் எவ்விதம் மாறுபட்டுப் புதுப்புதுப்பொருள்களாய்த் திகழமுடியும் என்று பரிசீலனை செய்வார்கள். சோதனைக்குழலும், சுத்தஜலமும், அடக்கி ஆளக்கூடிய ஜ்வாலையுமே அவர்களுடைய முக்கியமான தோழர்கள். இன்னும் பற்பல பிற கருவிகளையும் சமயோசிதமாய் உபயோகிப்பார்கள். அவர்கள் சோதனைக்குழலில் சிறியதாய்க் கண்ட காட்சியை இஞ்சினியரிங் அறிஞர்கள் பெருவாரியாகத் தொழிற்சாலைகளில் காணமுயன்று, புத்தம் புதிய பொருள்களை அபரிமிதமாய் உண்டுபண்ணிப் பிறதேசங்களுக்கும் அனுப்பச்செய்வார்கள். அவர்கள் முயற்சிக்குத் துணை செய்ய முதலாளிகளும் அவசியம். லாபத்தைக்கருதித் தனவந்தர்கள் தனித்தனியாயும் கூட்டம் கூட்டமாயும் பணத்தைச் சிறு முதலாகவும் பெருமுதலாகவும் சேர்த்து, தொழிற்சாலைகளை ஏற்படுத்தி, தொழிலாளிகளிடம் நிபுணர்கள் மூலமாய் நெற்றி நீர் நிலத்தில் விழ வேலையை வாங்கிச் சரக்குகளைச் செம்மைப்படுத்தி வர்த்தக வியாபாரம் செய்வது பண்டைக்காலமுதல் கண்ட முறையாகும்.

இரசாயனத்தின் வளர்ச்சி

எகிப்திய நாகரிகம், சிந்துநதிப் பள்ளத்தாக்கு நாகரிகம் முதலிய பிராசீன நாகரிக காலங்களில் நிலவிய இரசாயனம், அங்கங்கே காணப்படும் தங்க நாணயங்கள், ஆபரணங்கள், கண்ணாடி, எனமல், இயற்கைச்சாயப் பொருள்கள், பொருள்கள் அழுகாமல் பாதுகாக்கும் மருந்துகள் மூலமாகச் சிறிது துலங்குகிறது. அதற்கப்புறம் சுமார் ஆயிர வருஷங்களில் ரஸவாதப் பேய் உலாவியது; இரும்பைப்பொன்னாக்குவதில் பித்தம் கொண்டவர்கள் சிலரல்ல; பொன்னாசை மேலீட்டினால் அவர்கள் வலையில் சிக்கின மன்னர்களும் பலராவார்கள்; கடைசியில் அவர்களுக்கு ஏமாற்றமும் சாவுமே பலித்தன. ஆனால் அவர்கள் செய்யமுடியாததை எத்தனித்து அடையப் பாடுபடுகையில், அவர்கள் நிர்மாணித்த கருவிகளும் உபயோகித்த பிரயோகங்களும் பலவாயின. அவைகளே பின்னர் வந்த இரசாயனிகளுக்கு வழி காட்டிகளாய் ஏற்பட்டன.

இக்காலத்திய இரசாயன ஞானமெல்லாம் சென்ற இருநூறு வருஷங்களில் ஏற்பட்டதாகும். முக்கியமாக, பாயில், பிரீஸ்டிலி, ஷீலே, டேவி,

லவாய்சியர், காவண்டிஷ், டால்டன் முதலியவர்கள் நவீன இரசாயனப் பிதாமகர்கள் ஆவார்கள். அவர்களுடைய அரிய செயல்களின் பலன்களே நாம் இன்று அனுபவிக்கும் பாக்கியங்களெல்லாம். இரசாயன அறிஞர்களின் சில சமூக சேவைகளைக் கவனிப்போம்:



டால்டன்

காற்றுக்கு வந்த கௌரவம்

நம்மைச்சுற்றி யிருப்பது காற்று. அது இந்தியாவிலும் கிரேக்க நாட்டிலும் பஞ்ச பூதங்களில் ஒன்றாயிருந்தது. ஆனால் அது அடைந்த சிறப்பைப் பாருங்கள்: இருநூறு வருஷங்களுக்கு முன்புகூட ஒரு தனிப்பொருளாக இருந்த அந்த வஸ்து, மண்ணுலகம் தோன்றிய காலமுதலிருக்கும் அந்த வஸ்து, பேதமடையத் தொடங்கியது. அதில் நல்லவாயு, கெட்டவாயு என இரண்டு வாயுக்கள் இருக்கின்றனவென்று ஸ்வீடன் தேசத்து ஷீலே துரை 1770-ல் பல சோதனைகள் மூலமாய் அறிவித்தார். அப்பொழுது அதில் நீராவியும் கரியமிலவாயுவும் இருக்கின்றனவென்றும் தெரிந்தது. இந்த அறிவு 1894 வரை பரவியிருந்தது. ஆனால் வாயுக்களின் சம அளவு நிறைகளைச் சோதித்து வந்த ராலி பிரபுவுக்கு இடர் ஒன்று ஏற்பட்டது. அவர் நவச்சாரத்திலிருந்தும்

காற்றிலிருந்தும் நைட்ரஜன் வாயுவைச் சேகரித்தார்; அவைகளை ஒரே பரிமாணமாக எடுத்து நிறுத்ததில், திரும்பத்திரும்ப இருநூறில் ஒருபங்கு எடை வித்தியாசம் தோன்றிக்கொண்டே வந்தது. தமது சோதனையில் தப்பில்லை என்று நிரூபித்தார். வித்தியாசத்துக்குக் காரணம் தெரியவில்லை. உடனே தம் சினேகிதரான ராம்சே இரசாயனிக்கு இப்புதிரை அனுப்பினர். அவர் இடைவிடாது இப்பிரசினையில் ஆழ்ந்து, சோதனைகள் பல செய்து, காற்றில் அதுவரையும் தெரியாத சில வாயுக்கள் இருக்கின்றனவென்று அறிவித்தார். மூன்று வருஷங்களுக்குள் ஐந்து விதமான புதிய வாயுக்கள் சிறிய சிறிய அளவிலே காற்றில் இருப்பதாகக் காட்டினர். விஞ்ஞான உலகம் பிரமித்தது; பின்னர் இவ்வரிய ஆராய்ச்சிக்கு 1904-ல் நொபெல் பரிசையும் பெற்றார். அவ்வாயுக்களில் ஒன்று ஆர்கான் என்பது. அது சுமார் நூற்றுக்கு ஒரு பாகம் காற்றிலுளது; அது நமது எலெக்டிரிக் பல்புகளில் புகுந்து நமக்குப் பிரகாசத்தைக் கொடுத்து விளக்கின் ஆயுசை நீட்டிக்கிறது. மற்றொன்று நியான் என்பது; அது 80,000 பங்கில் ஒரு பங்குதான் உளது; ஆனல் அதுவே நமது மவுண்ட்ரோடில் பல கட்டடங்களின் வாயில்களில் சிவப்பு வெளிச்சத்தைக் கொடுத்து நம் பார்வையைக் கவர்ந்து ரமிக்கச்செய்கின்றது. இன்னும் ஒரு வாயு; அது ஹீலியம் என்பது; அது இரண்டு லக்ஷம் பங்கில் ஒரு பங்குதான் உளது; ஆனல் அது பல தேசத்து அரசாங்கங்கள் இப்பொழுது நாடும் வாயுவாயுள்ளது; ஜலவாயுவுக்குப் பதிலாக அதைப் பலூன்களிலும் ஆகாயக்கப்பல்களிலும் அடைத்துப் பறந்தால், தீயினல் ஓர் ஆபத்தும் வராது. ஆயினும் அது மிகச் சிறிதளவிலே காற்றில் காணப்படுதலின், பெருவாரியாகப் பிரித்தெடுப்பதற்குப் பணச்செலவு அபரிமிதமாக ஆகின்றது. ஆனல் அமெரிக்காவில் கானடாவிலும் ஐக்கிய நாடுகளிலும் இயற்கையிலே பூமியிலிருந்து கிளம்பும் சில வாயுக்களில் அது கலந்து அகப்படுகிறது. அவ்வூர் இரசாயனிகள் அதைப் பிரித்தெடுத்துச் சேகரிக்கிறார்கள். அவ்வரசாங்கத்தார் பிறநாடுகளுக்கு அதை விற்கமறுத்து ஏகபோக பாக்கியமாக வைத்திருக்கிறார்கள். அளவில் அற்பமாகக் கிடைக்கும் இவ்வாயுக்கள் நமது வாழ்வில் புது உபயோகங்களைத் தருகின்றன.

உப்புகள் செய்யும் உபகாரம்

சுத்தக்காற்றுக்கும் ஜலத்துக்கும் அடுத்தபடியாக மனிதனுக்கு அத்தியாவசியமானது உணவு. அரிசியும் கோதுமையும் பல தேசத்தார்களுக்கும் வழக்கமான முக்கிய உணவுப்பொருள்கள். கோதுமை நிரம்ப விளைவதற்கு ஏதாவது நைட்ரஜன் உப்பு நிலத்துக்கு உரமாகப் போடவேண்டியது அவசியம். சிலி தேசத்தில் பூமியிலிருந்து வெட்டி எடுக்கப்படும் சோடியம் நைட்ரேட் என்ற உப்பு 1860 முதல் பல தேசங்களில் உரமாக உபயோகப்பட்டு வருகிறது. ஆனல் அங்கு அகப்படும் சோடியம் நைட்ரேட்டின் எடை மதிப்பைக் கணக்கிட்டார் ஓர் அறிஞர்; வருஷந்தோறும் இருபது லக்ஷம் டன் நைட்ரேட் உப்பை அங்கு வெட்டி அப்புறப்படுத்தி வந்தார்கள்; 1898-ல் பிரிட்டிஷ் சையன்ஸ் அபிவிருத்தி சமாஜத்தாரது வருஷக்கொண்டாட்டத்தில் தலைமை வகித்த சர் வில்லியம் குரூக்ஸ் என்ற மூதறிஞர், "மேற்சொல்லிய

விதம் நைட்ரேட் உப்பை உபயோகித்தால் 1938-ல் நைட்ரேட் ஒன்றும் மிஞ்சாது; நைட்ரேட் இல்லையானால் உரமில்லை; உரமில்லையானால் கோதுமையில்லை; கோதுமையில்லையானால் உணவில்லை; அந்த உணவில்லையானால் அதை நம்பிவாழும் நாமும் மடியவேண்டும்; நாம் மடியவே நமது நாகரிகமும் நசித்து விடும்; அந்த உணவுப் பஞ்சத்தைத் தீர்க்கவல்லவர்கள் இரசாயனிகளே. ஆகையால் இரசாயனிகளே, விழியுங்கள்! பரபரப்பாயிருங்கள்! நைட்ரேட் உப்பு, அல்லது நைட்ரஜனது உப்பு வேறு உண்டாவதற்கு வழி தேடுங்கள்; ஊகத்தையும் புத்தியையும் உபயோகித்து அவைகளைப் பெற ஏற்பாடு செய்யுங்கள்" என்று பறையடித்தார். அவர் எச்சரிக்கையைத் தலைமேற்கொண்டு உழைத்தவர் பலர். காற்றில் நைட்ரஜன் வாயுவும் பிராண வாயுவும் அக்ஷயமாயிருக்கின்றன; அவை இரசாயன முறையில் சேர்ந்து விட்டால் நைட்ரேட் உப்பைச் சீக்கிரம் அடையலாம். ஆனால் அவை இலகுவில் அப்படிச் செய்வதில்லை. அது இயற்கையன்னையின் கருணை; நமது மேலுள்ள அவளது வாஞ்சை அப்படி உளது. அந்த இரண்டு வாயுக்களும் இலகுவில் உயர்ந்த உஷ்ண நிலையில் சேர்வதாயிருந்தால், கோடையிடி மின்னலிலோ மழைக் காலத்திலோ அவை சேர்ந்து வேறு பொருளாய் விடும்; பிறகு நமக்குச் சுவாசிக்கப் பிராண வாயுவே அகப்படாது போய்விடும்.

இஞ்சினியர்களும் இரசாயனிகளும் மெய்வருத்தம் பாராது உழைத்து, செயற்கை மின்னலாகிய எலெக்டிரிக் சக்தியை உபயோகித்துப் பலனடைந்தார்கள். எலெக்டிரிக் கரண்ட் வெகு லாபமாகக் கிடைக்க வேண்டும்; அருவியின் சக்தியை உபயோகித்துக் கிடைக்கும் எலெக்டிரிக்கரண்ட் அப்படிப்பட்டது. ஆகவே பிரபலமாக இந்த முறை நார்வே, ஸ்வீடன் மலையருவிகளின் சாரலில் பெருமை அடைந்தது. காற்றின் பிரதம வாயுக்கள் சேர்ந்து நைட்ரிக் ஆக்சைட் என்ற வாயுவை 3000 சதாம்ச டிகிரி உஷ்ண நிலையில் 100-க்கு ஒரு பங்கு அல்லது இரண்டு பங்கு வீதம் தருகின்றன; இதை மெல்ல ஆற வைத்தால் மறுபடியும் பிரிந்து விடுகிறது; ஆகவே நைட்ரிக் ஆக்சைட் உண்டாக உண்டாக அதைச் சடுதியில் குளிர வைத்து, பிறகு அதைப் பிராணவாயுவுடன் சேர்த்து, அப்பால் சுண்ணும்புத் தண்ணீரில் கரையவிடுவார்கள். அது கால்சியம் நைட்ரேட் உப்பாகும்; நார்வீஜியன் நைட்ரேட் என்றும் அது அழைக்கப்படுகிறது. அந்த நைட்ரேட் உப்புக்களே உயிர்களை ரக்ஷிப்பதற்கும் அழிப்பதற்கும் உபயோகமாகின்றன.

பொட்டாசியம் நைட்ரேட் என்ற ஓர் உப்பு உளது. அது வெடியுப்பு எனப்படும்; பெங்கால் சால்ட்பீட்டர், எனவும் சால்ட்பீட்டர் எனவும், நைட்டர் எனவும் இங்கிலீஷில் சொல்லப்படுகிறது. வெடிமருந்துக்கு முக்கிய ஆதாரச் சரக்கு அதுவே. அது அறுபது வருஷங்களுக்கு முன்பு இந்தியாவிலேயே முக்கியமாகச் செய்யப்பட்டுப் பிறநாடுகளுக்கு அனுப்பப்பட்டது. பீஹார், பஞ்சாப், ஐக்கிய மாகாணங்கள் ஆகிய மாகாணங்களில் இன்றும் சிறிதளவு அது செய்யப்படுகிறது. ஆனால் ஜெர்மனி தேசத்தில் பூமியிலிருந்து கறி உப்பை வெட்டி எடுக்க 1830-ல் ஒரு முயற்சி நடந்தது; ஜீயாலஜி, இரசாயன நிபுணர்கள் எதிர்பார்த்ததற்கு மாறுக உப்புக்குப் பதிலாகக்

கசப்புப்பொருள்கள் பல கிடைத்தன; முதலாளிகளும் அரசாங்கத்தார்களும் கோபித்தனர்; "எல்லாம் நன்மைக்கே" என்றார்கள் இரசாயன நிபுணர்கள்; ஊடே ஊடே பொட்டாசியம் குலோரைட் என்ற உப்பும் கிடைத்தது. இது ஜெர்மனிக்குக் கிடைத்த பெரும் புதையலாகும். பின்னர் 1860-ல் சிலி நைட்ரேட் கண்டு பிடிக்கப்பட்டு வெளிக்கிளம்பி ஜெர்மனிக்கு நிரம்பச்சென்றது. அங்கே இரசாயனிகள் தங்கள் நாட்டுப் பொட்டாசியம் குலோரைட் உப்பையும் சிலிநாட்டுச் சோடியம் நைட்ரேட் உப்பையும் ஜலத்தில் கரைத்துச்சேர்த்துப் பக்குவம் பண்ணவே வெடியுப்புக் கிடைத்தது. அவ்வளவுதான்; உடனே முதலாளிகளும் அரசாங்கமும் சேர்ந்து குன்றுகள் அளவாக அதை உற்பத்தி செய்ய ஏவினர்கள். உடனே இந்திய வெடியுப்புக்குக் கிராக்கி குறைந்தது; 1860-ல் இந்தியாவிலிருந்து 35,000 டன்கள் வெளியே சென்றன. ஆனால் 1914-ல் 13,400 டன்களே சென்றன; துரதிர்ஷ்டமாக 1914-ல் ஐரோப்பிய யுத்தம் ஆரம்பிக்கவே, ஜெர்மன் வெடியுப்பு முன்போல வெளிவர மறுத்தது; எதிரிகளுக்கு அது அவசியமாய் வேண்டியிருந்தது. என் செய்ய? சர்க்கார் ஹுக்கும் பிறந்தது; "சுவர்க்கீரையானாலும் சரண்டிப் போடடி" என்றார்கள். இந்திய சர்க்கார் சலுகை காட்டினர்கள்; "குத்தகை வரியைக் குறைக்கிறோம். குத்தகைச் சீட்டைப் போஸ்டாபீஸ்களில் கூடப் பெறலாம். குத்தகை நிலத்தை விசாலப்படுத்துகிறோம். வெடியுப்புச் சாலையில் கிடைக்கிற கறி உப்புக்கு வரிவஜா செய்கிறோம்" என்றெல்லாம் முரசு கொட்டினர்கள். 1914-ல் 327 குத்தகைச்சாலைகள், 1918-ல் 453 குத்தகைச் சாலைகள், 1914-ல் 31,000 குத்தகைதார்கள், 1918-ல் 51,800 குத்தகைதார்கள்; 1914-ல் 14,000 டன் வெடியுப்பு வெளியேற 1918-ல் 23,000 டன்கள் வெளியேறின. சண்டை ஒய்ந்தது; ஜெர்மன், இரசாயன வெடியுப்பு மறுபடியும் வெளிவந்தது. விலை குறைய இந்தியச் சரக்குக்குக் கிராக்கி குறைந்தது; பிறகு போன மச்சான் திரும்பி வந்தது போலத்தான்.

உடையைப்பற்றிய ஆராய்ச்சி

உணவுக்கு அடுத்தாற்போல நமக்கு உடை அவசியமாகும். இதிகாச காலங்களில் பட்டாடைகளும் மரவுரிகளும் இருந்தன. குளிர் தேசங்களில் பிராணிகளின் ரோமமே உடைக்கு அடிப்படையாயிருந்தது. அத்தேசத்தான் ஒருவன் உஷ்ணப்பிரதேசத்தில் சஞ்சரித்தபோது, ஆடின்றிச் செடியில் ரோமம் விளைகிறதென்று வியந்தானும். பருத்தி பண்டைக்காலப் பொருளே. அதுவே நமது உடைகளுக்கு இன்றளவும் ஆதாரம். ஆனால் பட்டுப்பூச்சிகளை வளர்த்து அது நூற்றுக்கொடுக்கும் அபூர்வப் பட்டுநூலை ராஜ உடைக்கு ஆதாரமாக்கினர். பட்டுப்பீதாம்பரம் பாமரர் அடையும் பாக்கிய மல்ல. ஆனால் இரசாயனிகள் இந்தக் கலையை நன்கு ஆராய்ந்து பாமரர்களும் உடையளவில் அரசபோகத்தை அனுபவிக்கச் செய்திருக்கிறார்கள். சோடியம் ஹைட்ராக்சைட் கரைந்த ஜலத்தில் துணிகளைத் தோய்த்து இறுகப் பிழிந்து உலர்த்திவிட்டால் பளபளப்புள்ள துணிகள் கிடைப்பதைக் கண்டார்கள். அதுவே மெர்சரைஸ்ட் காட்டன் என்று அழைக்கப்படுவது. 1844-ல்

ஜான் மெர்சர் என்பவர் இந்த ஆராய்ச்சி செய்தார்; ஆனால் 1895-ல்தான் அமுலுக்கு வந்தது. சாதாரணத் துணியிலுள்ள நூல், முழுதும் உபயோகிக்கப்பட்ட பல் பேஸ்ட்டுக் குழாய்களைப்போல் சப்பையாயிருக்கும். ஆனால் மெர்சரைஸ் செய்துவிட்டால் புதிதாக வாங்கப்படும் பல் பேஸ்ட்டுக் குழாய் மாதிரி உருளையாகிவிடுகிறது. அதுவே பளபளப்புக்குக் காரணமாகிறது. மற்றும் ஓர் இரசாயனி ஆராய்ந்தார். பட்டுப்புழு முசுக்கட்டை இலைகளைத் தின்றுதானே பட்டு நூலால் தனது கொக்கூனை இழைத்துக் கொள்ளுகிறது? இலையிலுள்ளது செல்லுலோஸ்தானே? பருத்தி சுத்த செல்லுலோஸ் ஆயிற்றே? ஆதலால் என் நாமும் பட்டுப்புழு வேலையைச் சோதனைக் குழாயில் ஆராயக்கூடாது? இப்படி அவருக்கு உள் உணர்ச்சி ததும்பியது; புத்தி அதில் பிரவேசித்தது; கண்ணும் கருத்துமாய் வேலையைத் தொடங்கினர். 1899-ல் உலகம் திகைக்க, பாரிஸ் காட்சிச்சாலையில் செயற்கைப் பட்டுக் காட்டப்பட்டது.

சார்டனே என்ற இரசாயனி பருத்தியை ஸல்புயூரிக் அமிலமும் நைட்ரிக் அமிலமும் கலந்த திரவத்தில் தோய்த்தார்; பின் அதை அமிலச் சார்பு நீங்க நீரில் அலம்பினர்; ஆல்கஹாலும் ஈதெரும் கலந்த திரவத்தில் அதைக் கரைத்தார்; பசை போன்றிருந்தது; தேங்குழல் உழக்கில் மாவை அடைத்துத் துவாரங்களின் மூலம் கொதி எண்ணெயில் பிழிந்து இனிய பண்டத்தை அடைவது போல, நுண்ணிய கண்ணுடிக் குழாய்களின் வழியாய்த் தாம் செய்த பசையை இடைவிடாமல் பிழிந்துபார்த்தார். அது உலர்ந்தவுடன் பட்டுநூல் போலப் பகட்டியது. சந்தோஷித்தார்; ஆரவாரித்தார்; தாம் இன்புறுவதைப் பிறரும் இன்புறக்காணுவது மனித தர்மம் அல்லவா? பிறருக்குக் காண்பித்தார்.

மற்றோர் இரசாயனி, "ஏன் பருத்தி வேண்டும்? மரக்கட்டைகளைக் கூழாக்கி ஏன் முயலக்கூடாது?" என்றார்; உடனே கருமமே கண்ணுயினர். அவர்கண்டமுறையே விஸ்கோஸ்முறைப் பட்டு எனப்படுவது. இன்னும் பிறமுறைகள் ஆராயப்பட்டன; மொத்தம் நான்கு முறைகள் உள; சார்டனே முறை மறைந்துவிட்டது; மற்றமுறைகள் வழக்கிலுள்ளன; இரசாயனிகள் கண்டமுறையை முதலாளிகளும் இஞ்சினியர்களும் பெருவாரியாக உபயோகித்துக் குவிக்கிறார்கள். ஜப்பானியப் பட்டு, செயற்கைப் பட்டு எனக் கடைகளில் துணிகள் குவிந்திருக்கின்றன. சமூகத்துக்கு என்ன லாபம்? பாமரர்களும் பட்டுடை உடுத்தி ரமிக்கிறார்கள். அறுபத்து மூவர் போன்ற விழாக்காலங்களில் தெரு வழியே போகும்போது நமது ஒட்ர சிநேகிதர்கள் உடைகளைக் கவனித்தால் தெரியும். இரசாயனிகள் பாமரர்களுக்கும் தோணியாவார்கள். இம்மட்டோ?

சாயவேட்டி வேண்டாமா? 'கலர்'ப் புடைவைகள் வேண்டாமா? பழைய பழுக்காய்ச் சாயம் இப்போது உளதா? அவுரி நீலந்தான் வழங்குகிறதா? கத்திரிப்பூ நிறம், நீலமேகம், யானைக்கறுப்பு, மயில்கண்டை முதலிய சாயத்தினுசுகள் தாண்டவமாடுகின்றனவே. அவைகளும் இரசாயனிகள் பாமரர்களுக்கு அளித்த காணிக்கைப்பொருள்களாகும். இரசாயன ஆராய்ச்

சிச்சாலேதான் பெரிய ஆலைகளின் மூலை; இரசாயன ஆராய்ச்சி புதிய ஆலைகளை நிருமிக்கும்; பழைய ஆலைகளைக் கூண்டோடு ஒட்டியும் விடும்.

இந்தியா நீலச்சாயத்துக்குப் பேர்போனது; இண்டிகோ என்ற மொழியை உலகத்துக்கு அளித்துள்ளது. பிறநாட்டார்கள் வெகுகாலமாக அதற்கு ஆசைப்பட்டு நம்மிட மிருந்து வாங்கி மகிழ்ந்தார்கள். 1895-ல் 36 லக்ஷரூபாய் மதிப்புள்ள அவுரிச்சாயத்தைப் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தோம்; 1910-ல் இரண்டு லக்ஷ ரூபாய் மதிப்புள்ள பொருள்தான் சென்றது. காரணமென்ன? ஜெர்மனியிலே இரசாயனிகள் பல காலமாகச் சாயப் பொருள்களை ஆராய்வதில் ஈடுபட்டிருந்தனர். 40 வருஷகாலம் அல்லும்பகலும் கருமமே கண்ணாக உழைத்தார்கள்; சுமார் நாலு லக்ஷ ரூபாய் அந்த ஆராய்ச்சியில் செலவாயிற்று; 1897-ல் கரைகண்டார்கள்; முதலாளிகளும் இஞ்சினியர்களும் பிரவேசித்தார்கள். இந்திய, ஜாவாச் செடிகள் மறையத் தொடங்கின. 1895-ல் நமது நாட்டில் 16,88,042 ஏகராக்கள் பயிராயின; 1925-ல் 10,000 ஏகராவே பயிராயின. 1895-ல் சுமார் 8400 டன் நீலச்சாயம் வெளி நாடுகளுக்குச் சென்றது; 1925-ஆம் வருஷத்திலோ 500 டன் கூட இல்லை. ஐரோப்பியச் சண்டைக் காலத்தில் நீலச் சாய உற்பத்தியில் அதிக ஆராய்ச்சியும் பரபரப்பும் சுறுசுறுப்பும் சலுகைகளும் தோன்றின; பிறகு பழைய கதைதான்.

மேல் நாடுகளிலே அடுப்புக்கும் வெளிச்சத்துக்கும் எரியக் கூடிய நிலக்கரி வாயுவை வெகுகாலமாக உபயோகித்தார்கள். அந்த வாயுவைச் செய்யுங்காலத்தில், பிறபொருள்களும் கிடைத்தன. அம்மோனியா ஒன்று; அது உரத்துக்கு வெகு சிலாக்கியமானது. தார் என்பது மற்றொன்று; அது நாம் கட்டைகளுக்கு அடிக்கும் கீல் எண்ணெய் போன்றது; கரிய பொருள்; பிசு பிசு என்றிருக்கும்; மலைபோலக் குவிந்து வந்தது. அதிலிருந்து நாப்தலின் முதலிய பொருள்களை அடையலாமென்று கண்டார்கள்; அவைகளிலிருந்து பற்பல புதிய சாய ரகங்களைத் தோற்றுவித்தார்கள். அவைகளே இப்போது அலிசரின், மாவ் என்று பல ரகங்களாகத் தாண்டவமாடுகின்றன.

ஆபரண ஆராய்ச்சி

உணவும் உடையுமாய்விட்டால் நம்மவர்களுக்கு ஆபரணங்கள் வேண்டாமா? பொன்னும் வைரமும் முத்தும் ராஜரீகங்களல்லவா? அவைகளைப் போன்ற பொருள்களைச் செய்து அவைகளுக்கு ஈடல்ல, உயர்ந்தவையே என்று சொல்லிப் பிரமிக்கும்வண்ணம் இரசாயனிகள் செய்து வருகிறார்கள். ஜெர்மன் சில்வர், பாரிஸ்கோல்ட், புது வைரம், புதுச் சிவப்பு முதலிய தினுசுகளைப் பாருங்கள். "மிக மலிவு, நாள்பட்ட உழைப்பு, மங்காத நிறம், அழகுதரும் ஆபரணங்கள்" என்ற விளம்பரங்களை வாசியுங்கள். நகைக்கிறீர்களா, திகைக்கிறீர்களா? சிவப்பு, பச்சை, நீலம், வானவில் நிறங்களில் சிந்தடிக் கற்கள் வைத்த சங்கிலிகள் வேண்டுமா? சங்கிலி ஒன்றுக்கு ரூபா ஐந்தே விலை. உண்மைரகங்களை வாங்கினால் வட்டிமுடக்கமாயிருக்

கிறதே என்று யோசிக்கும் பணக்காரர்கள்கூட வாங்கி மகிழும் காலமாயிருக்கிறது. கலிகாலம்! இரசாயனஞானப்பயன் பாமரர்களையும் பரமானந்த மடையச்செய்யும்.

சுத்தச் சோதனை

ஜனசமூகத்துக்கு இரசாயனிகள் தக்க துணையாக விளங்குகிறார்கள். நம்மை ஏமாற்றித் திருடும் பேர்வழிகளைப்போன்ற வியாபாரிகள் உளர். ஜலத்தில் பாலையும், நெய்யில் கொழுப்பையும், நல்லெண்ணெயில் கடலைக் கொட்டை எண்ணெயையும் காபிப்பொடியில் சிக்கரியையும் கலக்க ஆசைப் படாத வியாபாரிகள் உண்டோ? இரசாயனிகள் அக்கலப்புகளைச் சோதித் தறிந்து அவர்கள் மோசத்தை வெளிப்படுத்தி அவர்களைத் தண்டனைக்குள் ளாக்குகிறார்கள். மேலும், துரைத்தனத்தார் தங்கள் உபயோகத்துக்கு வேண்டிய வார்னிஷ்கள், வர்ணங்கள், சிமெண்ட், உலோகங்கள், சவுக் காரம், ரப்பர் ஸாமான்கள், மருந்துகள் முதலியவைகளின் சுத்தத்தைச் சோதித்தறிந்து, பொதுப்பணத்தைக் கொடுத்து வாங்க இரசாயனிகள் உதவி செய்கிறார்கள். தபாலாபீஸ்களில் உபயோகமாகும் தோல்பைகளும், லேபில்களும், பத்திரங்களும் சரியான அமைப்புடன் இருக்கின்றனவா என்று இரசாயனிகள் தெரிவிக்கிறார்கள்; அதனால் பொதுப்பணம் வீணாகாமல் பாது காக்கப்படுகிறது.

இன்னும், இன்பத்தையும் துன்பத்தையும் தரும் ஒரே பொருளையும் இரசாயனிகள் ஆக்கக்கூடும். உதாரணமாக, பிக்ரிக் அமிலத்தை நீரில் கரைத்து உபயோகித்தால் புண்கள் ஆறும்; திடப்பொருளாய்க் குழலுக்குள் அடைத்து இடித்தால் பெருவெடியாகும். வேறு சில பொருள்கள் சாத்வீகர் கையில் சாயப்பொருள்களாகும்; துஷ்டர்கள் கையில் வினையாய் முடியும். இரசாயன அறிஞர்களின் சக்தி ஸ்ரீமந் நாராயணனைப்போல் மனிதர்களை ரக்ஷிக்கும்; பிரளயகால ருத்திரனைப்போல மனிதர்களை ஸம்ஹாரமும் செய் யும். எவ்விதத்திலும் இரசாயனிகள் மனித சமூகத்துக்குப் பேருபகாரிகளே ஆவார்கள். நாகரிக மேம்பாட்டுக்கும் சீரியவாழ்க்கைக்கும் இரசாயன அறிவு முதிர்ச்சி அவசியம் வேண்டற்பாலது.

7-1-39-ல் சென்னை ஸர்வகலாசாலையின் ஆதரவிற் செய்யப்பட்ட உபந்யாஸம்.

எங்கள் பாட்டி

'ஜோதி'

1

'பாட்டி, தலைவலி' என்றுசொன் னேன்அவள்
பட்டென்று சுக்கை அரைத்துப்போட்டாள்.
கேட்ட வியாதிக்குக் கீரை கிழங்கு
கிராம்பு கடுக்காய் மருந்துரைப்பாள்;
வீட்டில் எவருக்குக் காய்ச்சலா னாலும்
விடிவதற் குள்அவள் சொஸ்தம் செய்வாள்.
'நாட்டு மருந்துக்குப் புஸ்தகம் ஏதுக்கு?
நான்சொல்லும் சரக்கினைக் கேட்டி' டென்பாள்.

2

எங்கள் கிராமத்தில் மூப்பது வருஷமாய்
எத்தனை யோபிள்ளைப் பேறுகளைச்
சங்கட மின்றி விளக்கெண்ணெய் பூண்டினால்
சாமர்த் தியமாகச் செய்துவிட்டாள்.
அங்கொரு பேத்திக்கு நளிர்சுரக் கஷாயம்
அரைத்துக் கொடுப்பாள்; மறுகணத்தில்
இங்கொரு வீட்டிலே மாந்தத்திற் காகவோர்
எண்ணெய் வடிப்பாளெம் பாட்டியம்மா!

3

நோய்க்கு வயித்தியம் செய்வது தானு?நீ
நூதன மாகஓர் வேஷ்டி கட்டு:
வாய்க்கு வருவதெல் லாஞ்சோ திடமாக
வகுத்துரைப் பாள்;எதிர் ஓடினஅந்
நாய்க்கு நரிக்குச் சகுன பலன்சொல்வாள்;
நாளொடு நட்சத்தி ரங்கள்சொல்வாள்;
தாய்க்குக் குழந்தைக்கு மாமனுக் காகாத
சாத்திர மெல்லாம் விரித்துரைப்பாள்.

4

'பாட்டி! பாட்டி! ஓர் கதைசொல்ல மாட்டாயா?
படுத்துக்கொள் வோம்'என்று சொல்லிவிட்டால்

நீட்டி இனித்த சுவைக்கதை எத்தனை
நேரம்சொல் வாள்! அதில் ஈடுபட்டால்
வீட்டில் இருக்குமெங் கள்மனம் காட்டிலும்
விண்ணிலும் ஓடி விளையாடும்;
நாட்டிலில் லாதபுத் தம்புதுக் காட்சிகள்
நனவினி லேகன வாக்கிவிடும்.

5

மருத்துவம் சோதிடம் கதைசொல்வ தெல்லாமும்
வல்லவள் பாட்டி: இவைமட்டோ!
பெருத்த கணக்கெல்லாம் கைவிரல் காட்டிப்
பிரித்துப் பொருத்தியே போட்டுக்கொள்வாள்;
தெருத்திண்ணைச் சுவரிலே தயிர்க்காரி போட்ட
சிறுபொட்டு, பொய்யா நிசமாவென்று
கருத்தில் நினைந்து கணக்குப்பார்த் துப்பின்பே
காசினைக் கையிற் கொடுத்திடுவாள்.

6

எத்தனை பாட்டுக்கள் கேட்டாலும் பாட்டியின்
இனியதா லாட்டுக்கீ டாவதில்லை;
அத்தனை யும்மவள் நெஞ்சினி லேயிருந்
தவ்வப் பொழுது புறப்படுமாம்;
சுத்தமா கஅவள் செய்யுள் இலக்கணத்
தொந்தர வையறி யாதவள்தான்;
'வித்தையா பாடுதல்? எகனை மொகனைகள்
வேணுமென் றுல்வந்தி டாவோ?' என்பாள்.

7

அரிய மனுஷிஇப் பாட்டியைப் போல்பவர்
அகப்பட மாட்டார்கள்: கூடைபெட்டி
பெரிய நிரைச்சல்கள் கீற்று முடைவதில்
பேர்பெற் றவளெங்கள் பாட்டியம்மா;
புரியவில் லையவள் செய்கையெல் லாம்-சில
புள்ளிகள் போடுவாள்; ஓர்கணத்தில்
அரியசித் திரங்கள் கோலப் பொடியினல்
அமைத்து விடுகிறுள்—ஆச்சரியம்!

———

அடிவானத்துக்கு அப்பால்

—ஒரு நாடகம்—

கமலாகாந்த வர்மா

['கலைப்பித்தன்' மொழிபெயர்த்தது.]

(சென்ற இதழ் 52-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஐந்தாவது காட்சி

[ஆனந்த மந்திரத்தின் உத்யானவனத்தின் மற்றொரு பாகம். மஹாராஜா பாரிஜாதன் வருகிறான்.]

பாரிஜாதன்.—எப்பேர்ப்பட்ட சொப்பன தேசம்! வாழ்க்கையில், ஒரு கசப்பில்லை; சங்கோசமில்லை; பயமில்லை; வெறுப்பில்லை. இங்கே வாழ்க்கை ஸ்வர்க்கத்தின் அமர சங்கீதத்தைப் போல் பெருகுகிறது. அதில் மயக்கமில்லை; மகிழ்ச்சி இருக்கிறது. உலகத்தில் உள்ள எல்லாம் இங்கே புது உருக்கொண்டு பிரகாசிக்கின்றன. அவைகள் பழைய அர்த்தங்களை விட்டுப் புதிய அர்த்தங்களைக் கிரகித்துக்கொள்கின்றன. அவைகளின் எண்ணம் நூதனமாகிவிடுகிறது. உலகத்தின் இந்த உண்மைச் சௌந்தர்யம் பெண் உருவாக வந்ததுபோல் தோன்றுகிறது. வெகுநாட்களுக்குமுன் குழந்தைப்பருவத்தில் பார்த்திருக்கலாம். அது இன்று நவயௌவனத்தின் ஆதிபத்தியத்தின்கீழ் எதிர்வந்து நிற்கிறது. அவள் அறிகிறாள், ஆனால் பிரமையடைகிறாள். பிறகு.....

[மாதவி வருகிறாள்.]

மாதவி.—தனியாக எதைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருக்கிறீர்கள்?

ராஜா.—என் பாக்கியத்தைப்பற்றி.

மாதவி.—வன கன்னிகையின் மேல் காதல் பூண்டதில் வருத்தம் எற்படுகிறதா?

ராஜா.—இல்லை. இந்த வருத்தந்தான். நான் தனியாக இருக்கிறேன். வன கன்னிகைகள் பலர் இருக்கிறார்கள். நான்கூடக் கிருஷ்ணனைப் போல் ஆயிரம் உருவம் எடுக்கமுடியுமா?

மாதவி.—லவங்கா வருகிறாள். நான் செல்கிறேன்.

[அவள் செல்கிறாள்; லவங்கலதா வருகிறாள்.]

ராஜா.—வா, மனம் நிம்மதியாய்த்தானே இருக்கிறது?

லவ.—இப்பொழுது மாதவி இங்கே நின்று பேசிக்கொண்டிருந்தாளே, எங்கே சென்றுவிட்டாள்?

ராஜா.—எங்கே? இதோ வருகிறேனென்றாளே.

லவ.—ஆனால்; நான்கூடப் போகிறேன்.

ராஜா.—பொறு; அவள் இப்பொழுது வந்துவிடுவாள். இப்பொழுது மனம் எப்படி இருக்கிறது?

லவ.—நன்றாகத்தான் இருக்கிறது.

ராஜா.—முகம் வாடியிருக்கிறது. ஏதாவது வருத்தமா?

லவ.—ஒன்றுமில்லையே!

ராஜா.—இந்த வனதேவி ஸ்வரூபத்தில் உன்னைப் பார்ப்பவர்கள், உன் வாழ்நாளில் ஒருநாள்கூட ஆயுதத்தை எடுத்திருப்பாய் என்று சொல்ல முடியாது. வீரம் சௌந்தரியத்துடன் கலந்துவிட்டது. மின்னல் சந்திர கிரணமாக மாறிவிட்டது.

லவ.—(ஒரு முறை தலைநிமிர்ந்து பார்த்து மறுபடி கண்ணைத் திருப்பித் தலை குனிகிறாள்.)

ராஜா.—தேவி!

லவ.—மஹாராஜ்!

ராஜா.—உலகம் என்னை மஹாராஜன் என்று சொல்லுகிறது. அதற்காக நீயும் சொல்லவேண்டுமா?

லவ.—தாங்கள் எனக்கு மஹாராஜனைவிடச் சிரேஷ்டமானவர்கள். தாங்கள் என்னுடைய தேவதை.

ராஜா.—லவங்கா, நான் தேவதையாக விரும்பவில்லை. நான் உன்னுடைய பூஜையை விரும்பவில்லை; உன் காதலைத்தான் விரும்புகிறேன். நான் உன்னைப் பூஜாரிணியாக மதிக்கவில்லை. என்னுடைய வாழ்க்கைத்துணைவியாகவே மதிக்கிறேன். அப்படியே செய்ய விரும்புகிறேன். எனக்குக் கூறத் தகுந்த இம்மாதிரி இன்சொற்கள் உன்னிடம் இல்லையா?

லவ.—நான் யாரைத் தேவதா ஸ்தானத்தில் வைத்தேனோ அவரை எனக்குச் சமமான இடத்திற்கு இறக்க இஷ்டமில்லை.

ராஜா.—காதல் தண்ணீரைப் போல் ஒரே இடத்தை, சமமான இடத்தையே, தேடுகிறது.

லவ.—இருக்கலாம்.

ராஜா.—லவங்கா, ஒரு விஷயம்.

லவ.—என்ன?

ராஜா.—நீ என்மீது கோபிக்கமாட்டாயே?

லவ.—கோபமா? அது அபசாரமல்லவா?

ராஜா.—என் வார்த்தை உனக்குக் கஷ்டமாக இராதே?

லவ.—கஷ்டமானால் ஆகட்டுமே. பிறகு அதன் ஸ்வரூபத்தை மாற்றி விடலாம்.

ராஜா.—நீ என்னிடமிருந்து கொஞ்சம் விலகி இருப்பதாகத் தோன்றுகிறது.

லவ.—(வெட்கத்துடன்) அது உங்கள் பிரமை.

ராஜா.—இருக்கலாம். ஆனால் என் மனத்தில் என்னவோ உன்னுடைய சஞ்சலமற்ற சுதந்தர வாழ்க்கையில் நான் இடையூறுகப் பிரவேசித்துப் பெரிய குற்றத்தைச் செய்துவிட்டது போலவும், உன் சுகமயமான வாழ்க்கையின் இன்னிசையில் ஓர் அபஸ்வரத்தை உண்டாக்கியதுபோலவும் தோன்றுகிறது. உனக்கு நான் எவ்வளவு கொடுக்கமுடியுமோ அதைவிட அதிகமாகவே நான் கவர்ந்துகொண்டேன். என் ஆத்மா என்னவோ ஒரு குளிரால் துடிக்கிறது. லவங்கா, என்ன? அது உண்மையாக இருக்குமா?

லவ.—உண்மை என்றும் பொய் என்றும் தெரியாது. ஆனால் இது மாத்திரம் தெரியும்: தங்களுடைய ஸ்பரிசத்தால் நான் மிகவும் மேன்மை அடைந்திருக்கிறேன். என்னுடைய உலகம் கற்பனையானது. இப்பொழுது அதில் உண்மை வந்துவிட்டது. இந்த அற்பகாலத்திற்குள் நான் சில வற்றைக் கற்றுக்கொண்டேன். ஆனால் அதிகமாக மறந்துவிட்டேன். நடப்பது நடந்தேவிடுகிறது. என்னுடைய கற்பனை உலகம் இடிந்து போகவே கட்டப்பட்டது. அது தங்கள் ஸ்பரிசத்தால் இடிந்துபோயிற்று. இதற்காக நான் தங்களுக்கு எந்நாளும் கடமைப்பட்டவள். மாதவி வரவில்லையே; நான் போகட்டுமா?

ராஜா.—பொறு. அவள் இப்பொழுது வந்துவிடுவாள். யார் அங்கே?

[தாதி வருகிறாள்.]

தாதி.—மஹாராஜ்! ராஜகுமாரர் மந்தார் வந்திருக்கிறார்.

ராஜா.—மந்தார் வந்துவிட்டானா?

தாதி.—ஆம். இப்பொழுதுதான் வந்தார்.

ராஜா.—எங்கே இருக்கிறான்?

தாதி.—பூந்தோட்டத்தின் வாயிலில்.

ராஜா.—இங்கே அழைத்து வா: லவங்கா, மந்தார் வந்திருக்கிறான். உன்னைப் பார்த்து மிகவும் சந்தோஷமடைவான்.

[தாதி வருகிறாள்.]

லவ.—நான் போகட்டுமா?

ராஜா.—இரு இரு. மந்தார் உன்னைப் பார்க்கத்தான் வருகிறான்.

லவ.—என்னை இங்கே பார்த்தால் அவர் என்ன நினைப்பார்?

ராஜா.—(சிரித்து) நினைப்பதென்ன? வனத்தின் சௌந்தர்ய தேவதை தன்னைச் சந்திக்கப் புறப்பட்டதோ என்றுதான் நினைப்பான்.

லவ.—எனக்கு இதெல்லாம் பிடிக்கவில்லை.

ராஜா.—பார், அவன் வருகிறான்.

லவ.—என்னை விடுங்கள்.

ராஜா.—பொறு. அவனிடம் என்ன வெட்கம்?

[லவங்கா தலை குனிந்துகொள்கிறாள். மந்தார் வருகிறான்.]

ராஜா.—வா, மந்தார்.

[மந்தார் தமையனை வணங்குகிறான். ராஜா அவனைத் தழுவிக்கொள்கிறான்.]

ராஜா.—இதோ, உன்னுடைய மதனி.

[மந்தார் லவங்கலதையை வணங்குகிறான். அகஸ்மாத்தாக இருவர் கண்களும் சந்திக்கின்றன.]

லவ.—(ஆச்சரியத்துடன்) ஆஹா, நீரா!

[மந்தார் ஆச்சரியத்துடன் லவங்கலதையின் பக்கம் பார்க்கிறான். ராஜா ஆச்சரியமடைகிறான்.]

லவ.—என்னுடைய ஸ்வப்பன உலகத்தின்...!

[மூர்ச்சையடைந்து கீழே விழுகிறாள். ராஜா அவளைத் தாங்கிக்கொள்கிறான். மந்தார் ஸ்தம்பித்து நிற்கிறான். மாதவி ஓடி வந்து லவங்கலதையைத் தன் மடியில் எடுத்து வைத்துக்கொள்கிறாள்.]

ஆறுவது காட்சி

[பூமாலை தொடுத்துக்கொண்டே அபராஜிதா வருகிறாள். ஒரு தாதிப் பெண்ணும் வருகிறாள்.]

அபரா.—என்ன விசேஷம்?

தாதி.—ராஜகுமாரர் மந்தாரிடமிருந்து கடிதத்துடன் ஒரு வீரன் வந்திருக்கிறான்.

அபரா.—கடிதமா? எங்கே? (தாதி கடிதத்தைக் கொடுக்கிறாள்; கடிதத்தைப் படித்துவிட்டு) வீரன் எங்கே? அவனை இங்கே அழைத்து வா.

[தாதி செல்கிறாள்.]

அபரா.—(கடிதத்தைப் படிக்கிறாள்) 'அபராஜிதா! உன்னிடம் செய்த பிரதிக்ஞையை நிறைவேற்றவே இந்தக் கடிதம் அனுப்பியிருக்கிறேன். இன்றே என் வாழ்க்கையில் காதலென்பதை முதல் தடவையாக உணர்ந்தேன். இதுவே கடைசித்தாமுமாகும். வாஸ்தவமாய் இது ஒரு கண் மூடித்தனம். நான் யாரைக் காதலித்தேனோ அவளே என் தமையனின் வாழ்க்கைத் துணைவியாகிவிட்டாள். இதன் முடிவு என்ன ஆகுமென்பதை அறிய முடியவில்லை. நீ என்னை மறந்துவிடு.—உன்னுடைய மந்தார்.'

[வீரன் வருகிறான்; அபராஜிதாவை வணங்குகிறான்.]

அபரா.—நீதான் இந்தக் கடிதம் கொண்டுவந்தாயா?

வீரன்.—ஆம்.

அபரா.—நீ புஷ்பாவிலிருந்தா வருகிறாய்?

வீரன்.—ஆம்.

அபரா.—அங்கிருந்து எப்பொழுது புறப்பட்டாய்?

வீரன்.—இன்று காலையில்.

அபரா.—இங்கிருந்து எத்தனை நாழிகைதூரம் இருக்கிறது?

வீரன்.—ஆறு நாழிகை தூரத்தில்.

அபரா.—விவாகம் எப்பொழுது நடந்தது?

வீரன்.—இன்றுதான்.

அபரா.—இன்று?

வீரன்.— ஆம்; விடியற்காலை மூன்றும் ஜாமத்தில்.

அபரா.—ராஜகுமாரரும் அங்கிருந்தாரா?

வீரன்.—ஆம்.

அபரா.—நல்லது. பிறகு?

வீரன்.—ராஜகுமாரரின் சித்திரம் ஒன்று வனத்தில் கிடைத்தது. அது யாருடையது, யார் எழுதினார்கள் என்ற தகவல் கிடைக்கவில்லை. ராஜகுமாரர் அதைத் தங்களுக்குப் பரிசாக அனுப்பியிருக்கிறார்.

அபரா.—எங்கே பார்க்கலாம்? (சித்திரத்தைப் பார்த்து) ஆச்சரியம்! யாரோ எதிரில் உட்கார்ந்து எழுதியதைப்போலவே தோன்றுகிறது. யாரோ தேர்ந்த கலைஞனின் வேலை; ராஜகுமாரர்கூட இதைப் பார்த்து ஆச்சரியப்பட்டாரா?

வீரன்.—மொம்ப மொம்ப. கடிதத்திற்குப் பதில் கிடைக்குமா?

அபரா.—இல்லை. நானே வருகிறேன்.

வீரன்.—தாங்களா?

அபரா.—ஆம். நீ என்கூட வரலாம். தாதியை நோக்கி இவன் இளைப்பாற வேண்டிய ஏற்பாடு செய்.

[தாதியுடன் வீரன் செல்கிறான்.]

ஏழாவது காட்சி

[விசாகா நதிக்கரை. சந்திரன் பிரகாசித்துக்கொண்டிருக்கிறான். தூரத்தில் மங்களவாத்தியத்தின் ஓசை கேட்கிறது. தேவதாரு ஒரு கல்லின் மேல் உட்கார்ந்திருக்கிறான். மந்தார் ஒரு காலைக் கல்லின்மேல் வைத்துச் சந்திரனைப் பார்த்துக்கொண்டிருக்கிறான்.]

மந்தார்.—இது என்ன! எங்கேயோ கேட்ட அந்தக் கீதம், மறந்து போன அந்தக் கீதம், இப்பொழுதும் காதுகளில் ரீங்காரமிட்டுக்கொண்டிருக்கிறதே. ஏதோ ஸ்வப்பனம்; அதனுடைய மங்கினசாயை இப்போது விழித்துக்கொண்டிருக்கும் சமயத்தில் வந்து சுற்றுகிறது. ஒரு தெரிந்த வியாகூலம்; தூக்கம்போன்ற ஒரு வேதனை; எதையோ இழந்துவிட்ட ஞாபகம். இவைகளெல்லாம் என்ன?

தேவதாரு.—குமார, இந்தப் பாவனைகளெல்லாம் வீண்பிரமைதான். ஏதோ ஸ்பஷ்டமில்லாத பிரத்தியக்ஷமில்லாத ஒரு சற்பனைக்கு ஜீவனளித்து அதன்பேரில் இவ்வளவு வியாகூலமும் துக்கமும் வேகமும் எதற்கு?

மந்தார்.—இல்லை. இல்லை. தேவதாரு, வார்த்தைகளால் அளக்க முடியாத உண்மையினும் உண்மை அது. மறதியின் அந்தகாரத்தில்

வெகு நாட்களுக்குப் பின் ஒரு பிரகாசம். ஆனல் மீண்டும் பரிசயம் என்னும் கிரணம். மீண்டும் அதே மறதி; அதே ஞாபகம்; அதே எக்கம்; அதே அந்த காரம். எல்லாம் அதுவே. இது என்ன?

[அபராஜிதா வருகிறுள்.]

அபரா.—மந்தார், இதைத்தான் காதல் என்று சொல்வது?

மந்தார்.—யார்? அபராஜிதாவா?

அபரா.—ஆம்.

மந்தார்.—நீ இங்கே .. .. ?

அபரா.—ஆம். நான் இங்கே. .. ..

மந்தார்.—நீ கொஞ்சம் போகமுடியுமா, தேவதாரு?

[தேவதாரு செல்கிறுன்.]

மந்தார்.—நீ எப்பொழுது வந்தாய்?

அபரா.—இப்பொழுதுதான் வந்தேன்.

மந்தார்.—எதற்காக வந்தாய்? எப்படி வந்தாய்?

அபரா.—இவைகளெல்லாம் கேட்க மீண்டும் சமயம் கிடைக்கும்.

மந்தார்.—அபராஜிதா, நீ வந்தது நல்லதாயிற்று. ஆனல் நீ என் வந்தாய்? சொல்லு.

அபரா.—நீ அழைத்தாய்; அதற்காக.

மந்தார்.—நானு? நான் அழைக்கவில்லையே.

அபரா.—அழைக்கத்தான் அழைத்தாய்; சப்தங்களால் அல்ல, உன் உள்ளத்தினுல்.

மந்தார்.—அபராஜிதா, நீ இவ்வளவு அருகில் வந்திருக்கிறுயென்றும் என் ஹ்ருதயத்தைத் தொட்டுப்பார்த்திருக்கிறுயென்றும் நான் அறியவில்லை.

அபரா.—இவ்வளவு தினங்களாக அறியாததை இன்று அறிந்து என்ன செய்யப்போகிறுய்?

மந்தார்.—உண்மையை அறிய ஸமயம் அஸமயம் என்று உண்டா?

அபரா.—அஸமயந்தான் உண்மையைப் பொய்யாக்குகிறது. தள்ளு. அதனல் என்ன லாபம்? நான் உன் காதலிக்கு என் கையால் சிங்காரம் செய்வதாகப் பிரதிக்ஞை செய்தேனே; அதை நிறைவேற்றவே வந்திருக்கிறேன்.

மந்தார்.—என் காதலியா! அபராஜிதா, இந்த வார்த்தையைக் கேட்ப தாலேயே பாவம் எற்படுகிறது.

அபரா.—நான் பாவம் புண்யம், தர்மம் அதர்மம் இவைகளைப்பற்றித் தெரியாதவள். புருஷன் எந்த ஸ்திரீயைக் காதலிக்கிறுனே அவள் அவனுடைய காதலி என்ற விஷயம்மாத்திரம் தெரியும்.

மந்தார்.—அபராஜிதா, அவள் யார் தெரியுமா? அதோ கேள்: விவாஹ மண்டபத்தில் மங்களவாத்தியம் முழங்குகிறதே. இப்பொழுது அக்கினி

சாகூயாக விவாகம் நடந்தேறியிருக்கும். நாளைத்தினம் சூரியோதயத்திற்குள் அவள் ராணியாவாள். நந்தன நாட்டின் ராணி; என் தமையனின் மனைவியாகிய அவளை நீ என் காதலி என்று சொல்லலாமா?

அபரா.—நான் வார்த்தைகளுடன் சண்டைபோடவில்லை. ஆனால் இதைமாத்திரம் அறிவேன். உன்னுடைய ஹ்ருதயத்தில் எந்தப் பாவம் உண்டாகி இருக்கிறதோ அதற்குத்தான் காதலென்று பெயர்.

மந்தார்.—பொறு. அபராஜிதா, காதல் என்ற வார்த்தையைக் கேட்டாலே பயமாக இருக்கிறது. ஒன்று கேட்கிறேன்: உண்மையைச் சொல்; காதல் புரிவது பாவமா?

அபரா.—குமார, 'காதல்புரிவது பாவமா?' என்ற இந்தக் கேள்வியை ஒரு தினம் எனக்குள் நானே கேட்டுக்கொண்டேன். ஆனால் நான் எவ்வளவோ ஆராய்ந்தும் பதில் கிடைக்கவில்லை. கடைசியில் நீதான் எனக்குப் பதில் அளித்தாய்.

மந்தார்.—நானா?

அபரா.—ஆம். மந்தார், நீதான். நீதான் முதன் முதலில், இந்தக் கேள்விக்கு அர்த்தமே இல்லை, இது தப்பு என்றாய்.

மந்தார்.—நான் அறியவில்லை. நீ என்ன செய்துகொண்டிருக்கிறாய்?

அபரா.—'காதல் செய்வது பாபமா?' என்று உலகம் கேட்கிறது. நான் அதனிடம், 'காதல் சிருஷ்டி பண்ணப் படுகிறதா? அதற்கு ஏதாவது கடமை இருக்கிறதா? சுதந்திரமாய் ஆழ்ந்து யோசித்துத் தராதரம் பார்த்து எல்லாம் அறிந்தபின் காதல் ஏற்படுகிறதா? காதல் ஒரு வியாபாரமா?' என்றெல்லாம் கேட்கிறேன்.

மந்தார்.—சொல்லிக்கொண்டே போ. நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

அபரா.—இங்கே இந்தக் கேள்வி தப்பாகிறது. காதல் புரிகிறோம் புரியவில்லை என்பது விஷயமல்ல. அது ஆகும்போது ஆகும். நிற்காது. அது நமது வசப்பட்ட விஷயமல்ல. அதற்கு எந்தக் கடமையும் கிடையாது. கடமை இல்லாத விஷயத்தில் பாவம் தர்மம் என்ற கேள்வியே எழ நியாயமில்லை.

மந்தார்.—சரியாகத்தான் சொல்லுகிறாய்போலும்.

அபரா.—காதல் கொள்வது பாவம் என்று யார் சொல்லுகிறார்களோ அவர்களிடம் நீ இந்தக் கேள்வியைக் கேள்: ஜன்மம் எடுப்பது பாவமா? பிழைத்திருப்பது பாவமா? இறப்பது பாவமா? இவைகள் பாவமல்ல வானால் காதல் புரிவது எப்படிப் பாவமாகும்? காதலென்பது மனத்தில் ஏற்படும் ஓர் உணர்ச்சி. அது பால, தருண, விருத்தர் முதலியவர்களைப் போன்று வளர்ந்து உருப்பெறுகிறது. சரீர மாறுபாட்டில் பால, தருண, விருத்தாவஸ்தைகளாகிய மாறுபாடுகள் ஏற்படுவதுபோல மனத்தின்

உணர்ச்சியிலும் மாறுபாடுகள் ஏற்படுகின்றன. அவைகளெல்லாம் பாவ மல்ல எனின் இது மாத்திரம் எப்படிப் பாவமாகும்?

மந்தார்.—அபராஜிதா, இதற்கு வேறொரு சிறப்புக்கூட இருக்கிறது.

அபரா.—ஆம்; நிச்சயமாக இருக்கிறது. காதலின் சம்பந்தம் ஒருபுறம் ஆத்மாவுடன்; மற்றொருபுறம் சமூகத்துடன். எதுவரைக்கும் இதற்கு ஆத்ம ஸம்பந்தம் இருக்கிறதோ அதுவரைக்கும் தர்மம், பாவம் என்ற கேள்வி எழுவதில்லை. காதல், வாழ்க்கையின் விகாச நாடகத்தின் காட்சி. அது முக்திமார்க்கத்தின் ஸாதனையில் முடிவு பெறுகிறது. ஆனால் மற்றொன்று: இந்தக் கபட சமூகத்திடம் அது கட்டுப்பட்டிருக்கிறது. அப்போது தர்மம், பாவம் ஆகியவற்றின் கதையும் ஆரம்பமாகிறது.

மந்தார்.—அபராஜிதா, உன் வாயிலிருந்து நான் இந்த அபூர்வமான தத்துவங்களைக் கேட்டு ஆச்சரியமடைகிறேன்.

அபரா.—இது ஒரு ஸாதாரணமான விஷயம் என்பதை மறந்துவிட்டாய். ஹ்ருதயத்தில் காதல் உண்டாகும்போது யாரையும் கேட்டு உண்டாவதில்லை. அது வெள்ளத்தைப் போலப் பெருகுகிறது; அலைபோல் கொந்தளிக்கிறது. அப்பொழுது விவேகம் அதைத் தடை செய்ய முடிவதில்லை. சமூகத்தால் அதை நிறுத்தமுடிவதில்லை. அதனுடைய அலைகளுக்கு அணைபோட முடிவ தில்லை. காதல் வெள்ளம் வரும்போது நியமம், ஜாதி என்கிற மேடு களின்மீது மோதி அடித்துக்கொண்டு கடைசியில் தன் லக்ஷ்யமாகிய ஸாகரத்தில் கலக்கிறது. இது யுக யுகாந்தரத்தின் கதை; அமரத்வ மானது; சாச்வதமானது. மந்தார், ஒருவேளை இதை நீதான் எனக்குச் சொன்னாய் என்பது உனக்குத் தெரியாதிருக்கலாம்.

மந்தார்.—நான் இதை உனக்குச் சொல்லவில்லை. அபராஜிதா, நான் யோசித்தேன்; நீ சொன்னாய். நான் இழந்தேன்; நீ பெற்றாய்.

அபரா.—நான் அறிந்தேன். நீயும் ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் இதை அடைவாயென்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அந்தத் தினமும் வந்துவிட்டதாகத் தெரிகிறது.

மந்தார்.—அபராஜிதா, நான் உன் ஸகாயத்தை விரும்புகிறேன். எனக்குப் பலம் கொடு; தைரியம் கொடு: நம்பிக்கையைக் கொடு. இவை எல்லாவற்றையும்விட வாழ்க்கையின் சிறிய தியாகம், ஸாதாரண ஸாதனை யைச் செய்வதற்குரிய உணர்ச்சியை உண்டாக்கு.

அபரா.—மந்தார், நாம் இருவரும் ஒரு வழியில் பதிதர்கள்.

மந்தார்.—மறுபடியும் நீ என்னை முந்திவிட்டாய். நீ என்னுடைய காதலியைச் சிங்காரிக்க வந்தாய். செல். புதுத் தம்பதிகளை ஒரு முறை பார்த்து நம் கண்களைப் பரிசுத்தமாக்கிக்கொள்வோம்.

அபரா.—அவசியம் செய்கிறேன். நந்தன நாட்டின் புது ராணியிடம் அதிகமாகப் பேசவேண்டி இருக்கிறது. இருக்கட்டும். இந்தச் சித்திரம் உனக்கு எங்கிருந்து கிடைத்தது?

மந்தார்.—எனக்கல்ல; ஒரு வீரனுக்குக் கிடைத்தது.

அபரா.—எங்கே கிடைத்தது?

மந்தார்.—வனத்தில்.

அபரா.—அந்தச் சித்திரகாரன் யார்? உனக்குப் புலப்பட்டதா?

மந்தார்.—ஒன்றும் புலப்படவில்லை.

அபரா.—கண்டுபிடிக்க முயன்றாயா?

மந்தார்.—முயன்றேன். தகவல் கிடைக்கவில்லை.

அபரா.—இதனால் நீ ஆச்சரியமடைந்தாயா?

மந்தார்.—உலகம் ஆச்சரியத்தில் நிறைந்திருக்கிறது. எவ்வளவு ஆச்சரியப்படட்டும், மறுபடியும் ஆச்சரியமே உண்டாகிறது.

[இருவரும் செல்கிறார்கள்.]

எட்டாவது காட்சி

[கலியாண ஆடைகள் அணிந்து லவங்கலதை வருகிறாள். ரத்னபரணங்கள், கால் விரல்களில் நத்து, பீலி முதலிய விவாஹ சின்னங்களுடன் அவள் வருகிறாள். கூட மாதவியும் வருகிறாள். ஒரு தாதி பிரவேசிக்கிறாள்.]

மாதவி.—என்ன சமாசாரம்?

தாதி.—ஒரு பெண்மணி ராஜகுமாரியைச் சந்திக்க விரும்புகிறாள்.

மாதவி.—யார் அவள்?

தாதி.—கேட்டால்கூட அவள் தன்னை யார் என்று சொல்வதில்லை.

மாதவி.—ஆனால் போகச் சொல். ராஜகுமாரியை இப்பொழுது சந்திக்க முடியாது.

தாதி.—அவள் கேட்கமாட்டே னென்கிறாள்.

மாதவி.—இப்பொழுது ராஜகுமாரி இளைப்பாறிக்கொண்டிருக்கிறாள். பிறகு வரச்சொல். போ.

[அபராஜிதா பிரவேசிக்கிறாள்.]

அபரா.—மஹாராணி லவங்கலதா, தங்களுடைய தாதிகளிடம் என்னைத் தடுக்கும் சக்தி கிடையாது. என்னுடைய இந்தத் துஷ்டத்தனத்தைப் பொறுக்கவேண்டும்.

லவ.—தாங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?

அபரா.—முதல் கேள்வி நான் யார் என்பது. நான் தங்களுக்குப் பதில் சொல்லுகிறேன். ஆனால் தனிமையில் சொல்கிறேன்.

[லவங்கா ஜாடை செய்கிறாள். மாதவியும் தாதியும் செல்கின்றனர்.]

லவ.—இப்பொழுது தாங்கள் யாரென்பதை நான் அறியலாமா?

அபரா.—நான் அஸாத்யமானவள் இல்லை. ஒன்றுமில்லாதவள். நீங்கள் சுருக்கமாய் நான் மந்தாரின் சிநேகிதை என்பதை மாத்திரம் தெரிந்து கொள்ளுங்கள்.

லவ.—ராஜகுமாரரின் சிநேகிதையா?

அபரா.—ராஜகுமாரரின் சிநேகிதையாவதில் ஆச்சரியப்படக்கூடிய விஷயம் என்ன?

லவ.—இல்லை. ஒருகால் இதற்கு, தங்கள் இருவருடைய நட்பு ஸாதாரணமானது என்றுதான் அர்த்தமா? அல்லது தாம்பத்ய...

அபரா.—எங்கள் நட்பு நீங்கள் நினைப்பதைவிட அதிகமானது.

லவ.—இதனுடைய அர்த்தம் என்ன?

அபரா.—நான் அவரைக் காதலிக்கிறேன்.

லவ.—தங்களுக்கு அவரிடம் காதல் ஏற்பட்டிருக்கிறது. அவர் உங்களுடைய—என்னுடைய துணிவிற்கு மன்னிக்க வேண்டும்—அவர் உங்களுடைய...

அபரா.—ஒன்றுமில்லை. அவரே எனக்கு எல்லாம். ஆனால் நான் அவருக்கு வெறும் சிநேகிதைதான்.

லவ.—தங்களைச் சந்தித்ததால் நான் சந்தோஷமடைகிறேன். தாங்கள் யாரென்று தெரிந்துகொள்ளலாமோ?

அபரா.—என் பெயர் அபராஜிதா. உங்கள் வாயால் தாங்கள் தாங்கள் என்று கேட்பதைப்பார்க்கிலும் நீ என்று கேட்டால் எனக்குச் சந்தோஷமாக இருக்கும். சகோதரி, நான் நந்தன மஹாராணியைச் சந்திக்க வரவில்லை; மந்தாரின் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட ஒருத்தியை, அவர் ஆத்மாவை, சந்திக்க வந்திருக்கிறேன்.

லவ.—ஆனால் அவரா என்னைச் சந்திக்கும்படி உங்களை—உன்னை—அனுப்பினர்.

அபரா.—இல்லை. அவர் அனுப்பவில்லை, நானேதான் வந்தேன்.

லவ.—ராஜகுமாரர் உன்னிடம் ஏதாவது சொன்னரா?

அபரா.—என்ன சொல்ல வேண்டுமோ அதைச் சொன்னர்.

லவ.—என்ன சொன்னர்?

அபரா.—அவர் எதைச் சொன்னரோ அதற்கு அர்த்தம் இதுதான்: அவர் ஸரஸ்வதியின் அருளால் ஊமையாகிவிட்டார். லக்ஷ்மியின் கிருபை பால் அபாக்யவான் ஆகிவிட்டார். அவருடைய காதல் தேவதை அவரைப் பனிசூழ்ந்த கைலாசபர்வதத்தின் ஒற்றையடிப்பாதையில் நிற்கவைத்து விட்டது.

லவ.—இது எவ்வாறு ஆயிற்று?

அபரா.—எனக்கு உன் ஆச்சரியத்தைப் பார்த்து ஆச்சரிய முண்டாகிறது. இதைக் கூடச் சொல்லவேண்டுமா?

லவ.—அதனுடைய அபிப்பிராயந்தான் என்ன வென்பதை நான் அறிய விரும்புகிறேன்.

அபரா.—அபிப்பிராயத்தைச் சொல்லலாம். ஆனால் அதில் பொருள் கிடையாது. அவருடைய வழி எது? உனக்குத் தெரியுமா?

லவ.—எதுவோ அது.

அபரா.—இதற்குப் பதில் இப்பொழுது சொல்லமுடியாது. ஆனல் அவருடைய வழிக்கு மூடிவுமாத்திரம் இல்லே என்பது தெரிகிறது: உலகத்தின் இக்கரையில் இல்லே என்பது மட்டும் நிச்சயம்.

லவ.—நீ என்னைச் சந்திக்க வந்திருப்பது அவருக்குத் தெரியுமா?

அபரா.—அவரிடம் சொல்லிவிட்டுத்தான் வந்தேன்.

லவ.—அவர் அறிவாரா? ...அ.....அ.....?

அபரா.—என் தடைப்படுகிறது?

லவ.—அவருக்கு எல்லாம் தெரியுமா?

அபரா.—அனுமானத்தால் எவ்வளவு தெரிந்துகொள்ள முடியுமோ அவ்வளவு தெரியும்.

லவ.—அனுமானம்! அனுமானத்தால் உண்மையும் தெரிகிறது; சில சமயம் பிழையும் நேருகிறது.

அபரா.—அவருடைய மனப்பூர்வமான கோரிக்கை வெறும் அனுமான மாகவே இருக்கட்டும்; தப்பாகவே இருக்கட்டும்.

லவ.—அப்படியா? என் அப்படி?

அபரா.—நெருப்பு எவ்வளவு தூரத்தில் இருக்கிறதோ அவ்வளவு நல்லது.

லவ.—ஆனல் அவருடைய அனுமானம் உண்மையே ஆகும். இதற்கு ஏதாவது ப்ரமாணம் இருக்கிறதா அவரிடம்?

அபரா.—அனுமானம் வேறு ப்ரமாணம் இல்லாதபோதுதான் ஏற்படு கிறது. அன்றியும் பிரமாணத்தைவிட அதிக நம்பிக்கை அவர் ஹ்ருதயத்தில் இருக்கிறது.

லவ.—அவருக்கு மனம் பிரமையடையவில்லேயென்றும் ஹ்ருதயத் தின் உணர்ச்சியில் தப்பில்லே என்றும் தெரியுமா?

அபரா.—இதை நீ உன் மனத்தையே கேட்டுக்கொள்.

லவ.—என் ஹ்ருதயத்தில் என்ன உணர்ச்சி இருக்கிறது? அது உனக்கு எப்படித் தெரிந்தது?

அபரா.—எனக்கு எல்லாம் தெரியும். உதாரணமாக இதை அறிந்தேன்: உன் வாழ்நாட்களில் ஒரு முறைகூடப் பார்க்காமல் அவருடைய சித்திரத்தை எழுதினுய். அது அவருடைய உண்மையான பிரதிபிம்பமாக இருக்கிறது.

லவ.—அந்தச் சித்திரம்! உனக்கு அந்தச் சித்திரம் எங்கே கிடைத்தது?

அபரா.—மந்தாரிடமிருந்து.

லவ.—அவருக்கு அது எப்படிக் கிடைத்தது?

அபரா.—வனத்தில் கிடந்தது.

லவ.—அதை நானே எழுதினேனென்று அவர் அறிவாரா?

அபரா.—இல்லே. அவர் அறியவில்லே,

லவ.—பின் நீ எப்படி அறிந்தாய்?

அபரா.—நானும் ஒரு ஸ்திரீ. ஆகையால் காதல் அந்தகாரத்தில் நான் வெகுதூரம் பார்க்கமுடியும்.

லவ.—அந்தச் சித்திரத்தைப் பார்த்து அவர் ஆச்சரியமடைந்தாரா?

அபரா.—ரொம்ப. அவர் ரொம்ப விசாரித்தார். ஆனாலும் அந்தச் சித்திரகாரர் யாரென்று அவருக்குத் தெரியவில்லை.

லவ.—அவர் அது சரியாக இருக்கிறது என்றாரா?

அபரா.—இது ஒரு வேதனையைத் தரும் வார்த்தை. என்னிடம் சொல்லாதே.

லவ.—ஹோ!

அபரா.—இன்று நான் உன்னை அலங்காரம் செய்ய வந்திருக்கிறேன்.

லவ.—என்னையா! அலங்காரம் செய்யவா?

அபரா.—ஆம். உன்னை ராஜலக்ஷ்மியைப்போல்—இல்லை—வனதேவியைப்போல் அலங்காரம் செய்ய. இன்றை ஞாபகம் எனக்கும், ஒருகால் உனக்கும், வாழ்க்கை அந்தகாரத்தில் யுகயுகாந்தரத்திற்கும் ஆகாசதீபமாகப் பிரகாசிக்கும். இன்று நம் இருவருக்கும் ஒரு ஸௌபாக்கியமான தினமாகும்.

லவ.—இதற்காக அலங்காரம் செய்யவேண்டிய அவசியம் என்ன?

அபரா.—பைத்தியமே! சிங்காரந்தான் பெண்களின் ஜீவன். நான் என்னுடைய வெகுநாளைக் கோரிக்கையைப் பூர்த்திசெய்யப் போகிறேன். செல்.

[இருவரும் செல்கிறார்கள்.]

ஒன்பதாவது காட்சி

[விசாகா நதிக்கரை. நதி ஜலம் அலைமோதிப் புரண்டோடுகிறது. மந்தாரும் ராஜா பாரிஜாதனும் வருகிறார்கள். அவர்களுடன் சேவதாருவும் வருகிறான்.]

பாரிஜாதன்.—மந்தார், நீ இம்மாதிரி எங்களை விட்டுப் போவாய் என்கிற எண்ணம் எங்களுக்கு இல்லை. பிறந்ததுமுதல் இன்றுவரை நீ என்னைப் பிரிந்து சென்றதில்லை. இன்று ஒரேயடியாக இவ்வளவு தூரம் செல்லப்போகிறாய். இதை நினைக்கும்போது என் ஹ்ருதயம் நடுங்குகிறது.

மந்தார்.—வீடுவாசல், பந்துக்கள், எல்லாம் மனிதவாழ்க்கைக்கு உகந்த அழகுகள். ஆனால் இந்தப் பந்தங்களை உதறித் தள்ளிச்சென்றால் மனித சமூகத்திற்கு நன்மை செய்யலாம். மனிதத் தன்மை அன்பில் ஆரம்பமாகிறது. சேவையில் ஈடுபடுகிறது. அண்ணா, நான் மனித சமூகத்திற்குச் சேவைசெய்ய என்னை ஆசீர்வாதம் செய்யுங்கள்.

பாரி.—மந்தார், நான் உன் ஹ்ருதயத்தையும் உன் புத்தியையும் அறிவேன். நீ எதைச் செய்யவேண்டுமோ அதைத் திறம்படச் செய்ய

முடியும். ஆனால்...நான் என் ஹ்ருதயத்தை எப்படிச் சொல்லுவேன்? எப்படி இதற்குச் சம்மதிப்பேன்?

மந்தார்.—தாங்கள் என்மேல் வைத்த அன்பைக் கொஞ்சம் மனித சமூகத்தின்மேல் சிதறவிடுங்கள். பிறகு தங்கள் மனத்திலும் என்போன்ற உணர்ச்சி ஏற்பட்டுவிடும்.

பாரி.—சகோதரா, நான் கவியுமல்ல. தீர்க்கதரிசியுமல்ல. வாழ்க்கையில் எப்பொழுது அத்தகைய உணர்ச்சி உண்டாகுமோ? உண்டாகுமென்ற நம்பிக்கை இல்லை. என்னைப் பொறுத்தமட்டில் நீ நீதான், உலகம் உலகந்தான். நீ செல்கிறாய். ஆனால் நீ எனக்குக் குறிப்பிட்ட ஸமயத்தில் செய்தி அனுப்பிக்கொண்டிராவிட்டால் நானும் உன் வழியைப் பின்பற்றுவேன்.

மந்தார்.—அம்மாதிரியான சந்தர்ப்பம் வராது. ஏற்பாட்டின்படி குறிப்பிட்ட தருணத்தில் செய்தி அனுப்புகிறேன்.

பாரி.—மந்தார். போகத்தான் போகிறாயா?

மந்தார்.—நான் போய்க்கொண்டே இருக்கிறேன். எனென்றால் நான் போகவே விரும்புகிறேன்; சென்றே தீரவேண்டும். அண்ணா, எனக்கு இந்தச் சமயம் தைரியம், சக்தி ஒன்றும் அவசியமில்லை. தங்களுடைய சுபஸௌபாக்யமே என் அந்தகாரத்தின் வானவிளக்காக இருக்கும்.

பாரி.—மந்தார், ஆனால் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. மாந்தரின் சேவைக்காக ஒரு சோகமான வாழ்க்கையைவிட்டுச் செல்கிறாய். ஆனால்... மறுபடியும் என் மந்தார், எல்லோரையும்விட்டு அந்தக் கண்ணுக்கெட்டாத தூரத்திற்குச் செல்கிறாயே ..... ஒருகால் எப்பொழுதும் .... மந்தார்.....

[கண்ணீர்தும்ப அழுகிறான். புஷ்பங்களை அணிந்த லவங்கலதையும் அபராஜிதாவும் வருகிறார்கள்.]

அபரா.—இவ்வளவு சீக்கிரமா? மந்தார், செல்கிறாயா?

மந்தார்.—ஆம்.

அபரா.—உண்மையாய்ச் செல்கிறாயா?

மந்தார்.—மறுபடியும் ஒருதரம் இந்தக் கேள்வியைக் கேட்கிறாயா? அபராஜிதா.

அபரா.—அன்று சென்றேவிட்டாய்.

மந்தார்.—இன்றும் அப்படியே செல்வேன்.

அபரா.—எங்கே?

மந்தார்.—உலகத்தின் அக்கரைக்கு.

அபரா.—ஆனால், நான் எங்கே இருப்பேன்?

மந்தார்.—உனக்கு வேண்டிய இடம் இருக்கிறது. உனக்கு உலக பந்தம் என் போன்ற அவ்வளவு கொடுமை உள்ளதாக இல்லை.

அபரா.—அறிந்தேன், மந்தார். ஆனால் நான் உன்னை எதிர்பார்ப்பேன்.

மந்தார்.— எதுவரை என் ஸாதனை பூர்த்தியடையவில்லையோ அதுவரை நான் எப்படி வரமுடியும்?

அபரா.—உன் ஸாதனை பூர்த்தியாகட்டும். உன் தவம் ஸித்தியடையட்டும். நான் யுக யுகங்களுக்கும் ஜன்ம ஜன்மாந்தரங்களுக்கும் உன்னை எதிர்பார்ப்பேன்.

மந்தார்.—இப்பொழுது விடைபெற்றுக்கொள்கிறேன்.

[ராஜனை வணங்குகிறான். ராஜா அவனை மார்புடன் தழுவுகிறான். பிறகு லவங்கலதையை வணங்குகிறான். லவங்கலதை எழுந்திருக்கிறாள்.]

மந்தார்.—(லவங்கலதையிடம்) செல்கிறேன்.

லவ.—உன் ஸாதனை பூர்த்தியாகட்டும், கடவுள் உம்மை...உம்மை.... உங்களுக்குச் சுகமளிக்கட்டும்.

மந்தார்.—அபராஜிதா!

அபரா.—நாம் சந்திப்போம். அங்கே சந்திப்போம். உலகத்தின் அந்தக் கரையில் சந்திப்போம்.

[மந்தார் எல்லோரையும் வணங்கிப் படகில் ஏறிக்கொள்கிறான். அவனுடன் தேவதாரும் இருக்கிறான். படகு செல்கிறது.]



'காணுமற் போன கூஜா'

'அநுஷம்'

"எங்கள் பத்திரிகையில் இந்த மாதிரி விஷயங்கள் வெளி வருவதேயில்லை. இது பண்டிதர்களே படித்து ஸந்தோஷிக்கக் கூடிய விஷயம். இதிலே வந்தால் ஒருவர்கூடப் படிக்கமாட்டார். எதற்காக இதை வீண் படுத்துகிறீர்கள்? ஏதாவது உயர்ந்த பத்திரி கைக்குக் கொடுத்தால் வெளியிடுவார்கள். நாலுபேர் படித்துப் பார்த்து மெச்சுவார்கள்" என்று 'மத்தாப்பு'வின் பத்திரிகாசிரியர் சொன்னார். மயிலப்ப முதலியார் விட்டபாட்டைக் காணும்.

"என்ன ஐயா, இப்படி அவையடக்கம் பேசுகிறீர்களே? உங் கள் பத்திரிகை உயர்ந்ததல்லவென்று எந்த மூட்டாள் சொன்னது? அருமையான பத்திரிகையாகிய இதைக் காட்டிலும் தமிழ் நாட்டில் எந்தப் பத்திரிகை சிறந்ததாக இருக்கிறது?" என்றார் அவர்.

ஆசிரியர் அவருடைய கட்டுரையைச் சிலாகித்து மெதுவாகத் தப்பித்துக் கொள்ளலாமென்று எண்ணினால் அவர், பத்திரிகையை வானளாவப் புகழ்ந்து தட்டிக் கொடுத்து ஏமாற்றப் பார்த்தார்.

"உங்களுடைய அபாரமான புலமையை இந்தச் சாக்கடையிலே ஏன் கொட்டிவிடவேண்டும்? எங்கள் பத்திரிகை ஒரு பலசரக்குக் கடை. அதிலும் மூன்றுந்தரத்துச் சரக்கு. ஒருதரம் படித்துத் தூக்கி எறிந்துவிடுவதுதானே? அப்புறம் இதை யார் படிக் கிறார்கள்? உங்கள் கட்டுரையோ நூறுதடவை படித்தாலும் மேலும் படிக்கவேண்டியிருக்கும் நிலையிலுள்ளது. அதை இத்தகைய குப்பைக் கடதாசியிலே போட என் மனம் இடம் கொடுக்கவில்லை."

"என்ன ஐயா! மறுபடியும் சொல்லுகிறீர்கள். உங்கள் பத்திரி கையை எவ்வளவு பேர் 'கட்டி' வைத்துக் கொண்டிருக்கிறார்கள் தெரியுமா? மற்றப் பத்திரிகைகளைப் போல இதை லேசாக நினைக்கக் கூடுமா?"—கட்டிவைப்பதென்றால் 'பைண்டு' செய்வ தென்று அர்த்தம்!


213405

"சரி. வீணை முகஸ்துதி வேண்டாம். எங்கள் பத்திரிகைக்கு ஏற்றபடி ஏதாவது எழுதிக்கொண்டு வாருங்கள்; போடுகிறேன்."

முதலியார் முகத்தில் இருந்த ஸந்தோஷக் குறிப்பை அப்பொழுது பார்க்கவேண்டுமே!

"அப்படிச் சொல்லுங்கள் 'ஸார்'! ஒரேயடியாக மறுத்து விட்டால் அப்புறம் நாங்கள் என்ன செய்வது?" என்று முதலியார் பல்லை இளித்தார். அவர் 'ஸார்' என்ற பதத்தைத் தம்மை யறியாமல் உற்சாகத்திலே உபயோகப் படுத்திவிட்டார். 'ஐயா' என்றுதான் சொல்லுவது வழக்கம்.

அடுத்த தடவை—அடுத்த நாளே வந்துவிட்டார் ஒரு கட்டுரையோடே. பதிறு பக்கம் நெருக்கி எழுதப்பட்ட விஷயம். அதைப் பார்க்கத் தனியே பூதக்கண்ணாடி ஸம்பாதித்து வைத்துக் கொள்ளவேண்டும்.

"என்ன விஷயம் எழுதிக்கொண்டு வந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார் பத்திரிகாசிரியர்.

"குரங்குக் குட்டி யென்ற ஹாஸ்யக்கட்டுரை எழுதியிருக்கிறேன். உங்கள் பத்திரிகைக்கு மெத்தப் பொருத்தமாக இருக்கும். சங்க நூலிலிருந்து காட்சிகளை எடுத்திருக்கிறேன். படங்கள் போடுவதாக இருந்தால் மிகவும் அழகாக இருக்கும். நான்தான் எழுதினேனு வென்று எனக்கே ஆச்சரியமாயிருக்கிறது. அவ்வளவு அருமையான விஷயம். படித்துப் பாருங்களேன்." ஆசிரியருடைய அபிப்பிராயத்தை எதிர்பாராமல் அவரே தீர்ப்புச் சொல்லியபோது என்ன சொல்ல முடியும்?

"சரி, பார்க்கிறேன். போய்வாருங்கள்" என்று சொல்லி அவரை அனுப்புவதற்குள் ஆசிரியருக்குப் போதும் போதுமென்றாகிவிட்டது.

பத்திரிகை உதவியாசிரியர் அதைப் படித்துப் பார்த்தார்; "என்ன ஸார், ஒரே தலைசுற்றலாய் இருக்கிறதே! இந்தக் கட்டுரையிலே குரங்குக் குட்டியைத் தேடிப்பார்க்கிறேன், காணவில்லையே!" என்றார். அவர் அதிகமாகத் தமிழ் படித்ததில்லை. இங்கிலீஷில் படித்ததைத் தமிழில் எழுதிவருபவர்.

ஆசிரியர் படித்துப் பார்த்தார். குரங்குக் குட்டி 'முசுவின் குருளை' என்னும் ரூபத்தில் அந்தக் கட்டுரையில் இருந்தது. முசுவின் குருளையும் குரங்குக் குட்டியும் ஒன்றென்பது உதவியாசிரியருக்குத் தெரியவில்லை. முதலியார் மேல் என்ன தோஷம்?

அந்தக் குரங்குக் குட்டிக்கு 'மத்தாப்பு' இடங்கொடுக்கவில்லை. முதலியாருக்கு வந்த கோபம் அவ்வளவு இவ்வளவு இல்லை



"காத்தான் தீத்தான் எழுதுகிறதெல்லாம் போடுகிறீர்கள். இதைப் போட மாட்டேனென்கிறீர்கள். காலம் கலிகாலம். நல்ல பொருளுக்கு மதிப்பில்லை" என்று சொல்லித் தம்முடைய 'குரங்குக் குட்டி'யை வாங்கிக்கொண்டு போய்விட்டார்.

* * * * *

மறுநாள் அகஸ்மாத்தாகக் 'கோபாலகிருஷ்ண லஞ்சுஹோமி'ல் ஒரு மூலையில் உட்கார்ந்து மெதுவடையை ஸம்ஹாரம் செய்து கொண்டிருந்தார் ஆசிரியர். பல மேஜைகள் அந்த 'ஹாலில்' இருந்தன. கூட்டம் நெரிந்தது. அந்தக் கூட்டத்திலிருந்து கேட்ட சப்தத்தின் இடையே "மத்தாப்பு" என்ற பெயர் கேட்டது. 'இதேது, நம்முடைய பத்திரிகையின் பெயர் இங்கே இழுபடுகிறது?' என்று ஆசிரியர் கவனித்துக் கேட்கலானார்.

"மோசம், முழுமோசம்! வழியிலே போகிறவனெல்லாம் எழுதினால் பத்திரிகை எப்படி உருப்படும்? ஊர்ப்பட்ட தப்பு; இலக்கணப் பிழை. ஒரு கதையாவது ரஸமாக இருக்கிறதா? பெயர் மட்டும் 'மத்தாப்பு'; விஷயமோ எல்லாம் வர்ணமில்லாத சப்பை" என்றது ஒரு குரல்.

"ஏன் நீங்கள் அதற்கு எழுதுவதில்லையோ?" என்றது மற்றொரு குரல்.

"அதற்கா? அதற்கு மனுஷன் எழுதுவானா? கேவலத்திலும் கேவலம். எழுவாய் பயனிலை தெரியாத பயல்களெல்லாம் எழுதும் பத்திரிகையிலே நாமும் எழுதுவதா?" இந்த அருமையான மதிப்புரையை வெளியிடுபவர் ம-ரா-ரா-ஸ்ரீ மயிலப்ப முதலியாரவர்களே என்பதை ஆசிரியர் தெரிந்துகொண்டார்.

மறுவாரம் முதலியார் ஒரு கதையை எழுதிக்கொண்டு வந்தார். அவரைக் கண்டபோதே பத்திரிகாசிரியருக்கு ஆத்திரம் பொங்கியது. ஆனால் அடக்கிக்கொண்டார். முதலியார் ஓர் அத்தியாயம் பத்திரிகையைப் புகழ்ந்து பேசினார். "இதோ ஒரு கதை. இதைப் படித்துப் பாருங்கள். இதில் எதையாவது அடித்தாலும் சரி; கூட்டினாலும் சரி. உங்கள் இஷ்டப்படி செய்யலாம். எப்படியாவது உங்கள் பத்திரிகையிலே வெளி வந்தாற் போதும்" என்று அவர் பணிவோடு கூறினார்; கெஞ்சாத தோஷந்தான்.

"ஆகட்டும்; பார்க்கிறேன்" என்று ஆசிரியர் வழக்கம் போலவே சொல்லிவிட்டு அனுப்பினார். அவர் கொடுத்த கதையின் பெயர் 'காணுமற் போன கூஜா' என்பது.

'மத்தாப்பு' என்ற பத்திரிகையில் ஒவ்வொரு வாரமும் அடுத்த வாரம் வெளிவரும் கதைகளிலே சிலவற்றின் பெயர்களை முன்னரே அறிவிப்பது வழக்கம். அந்த வாரப் பத்திரிகையிலே 'காணுமற் போன கூஜா' என்ற கதை மறுவாரம் வருவதாகத் தெரிவித்திருந் தார்கள். அதைக் கண்டவுடனே முதலியாருக்குத் தலைகால் தெரிய வில்லை. அந்த ஏழு நாளும் அப்பத்திரிகையைப் பற்றிய புகழுரை களையே பரப்பிக்கொண்டிருந்தார்.

"பத்திரிகையென்றால் இதுதான் பத்திரிகை. அதுவும் இந்த நான்கு வாரங்களாக முதல்தரமான கதைகள், கட்டுரைகள் வருகின்றன. அடுத்த தடவை வாங்கிப் படியுங்கள். எவ்வளவு அருமையாயிருக்கிறது பாருங்கள்!" என்று ஒரு நண்பரிடம் சொல்வார்.

"எந்தப் பத்திரிகைக்கும் இந்தமாதிரி விஷயங்கள் அமைவ தில்லை. எழுத்தாளர்களைப் பிடித்து எழுதச் செய்து அழகுபடுத் தும் முயற்சியிலே 'மத்தாப்பு'விடம் எல்லோரும் பிச்சை வாங்க வேண்டும்" என்று மற்றொருவரிடம் சொல்வார்.

"நீங்கள் ஏன் 'மத்தாப்பு'வை வரவழைக்கக்கூடாது? வீணாக உபயோகமற்ற பத்திரிகைகளை ஏன் வாங்குகிறீர்கள்? இதை வாங் குங்கள்" என்று ஒருவரிடம் பிரசாரம் செய்தார்.

இப்படி ஒரு வாரமுழுவதும் அவர் அப்பத்திரிகையைப் பற்றியே அதிகமாகப் பேசினார்.

சனிக்கிழமை வந்தது. இரண்டணாக் கொடுத்துப் பத்திரிகை வாங்கினார். அவரோடு இரண்டு சிநேகிதர்களையும் கூட்டிக் கொண்டு போயிருந்தார். பத்திரிகையைப் பிரிக்கும்போதே முதலியாருக்கு வாயெல்லாம் பல்லாக இருந்தது. 'காணுமற் போன கூஜா' என்ற கொட்டை யெழுத்திலிருந்த தலைப்பு அவர் கண்ணிலே பட்டது. "ஆஹா!" என்று குதூகலத்தோடு படிக்கத் தொடங்கினார். அதன் கீழே 'முதலியார்' என்று பெயர் போடப் பட்டிருந்தது. 'ஏன் முழுப் பெயரையும் போடவில்லை? தோஷ மில்லை' என்று படிக்க ஆரம்பித்தார். முகத்திலே இருந்த ஸந்தோ ஷம் சிறிது மாறியது. ஆரம்பமே வேறுக இருந்தது; 'சரிதான்; எப்படி வேண்டுமானாலும் மாற்றிக் கொள்ளலாமென்று சொன் னோமே. அதனால் முதலிலே பத்திரிகையின் தோரணையிலே மாற்றி யிருக்கலாம்' என்று எண்ணி மேலே படித்தார். எல்லாம் புதிய விஷயம்! அவருடைய கதையே இல்லை; அவர் கதை எழுதியதைப் பற்றிப் பரிஹஸித்து எழுதிய கதையாக இருந்தது! முழுவதும் படித்து முடித்தார். உதவியாசிரியர் ராமசாமி முதலியார்,

மயிலப்ப முதலியாரை நன்முகப் பரிஹாஸம் பண்ணியிருந்தார். அதைப் படித்துப் பார்க்கப் பார்க்க முதலியாருக்குக் கோபம் எறியது. படித்து முடித்தார்; "சீ, சுத்தமோசம்! போக்கிரிப் பயல்கள்!" என்று பத்திரிகையை வீசி எறிந்தார். உடன் இருந்த நண்பர்கள் சற்று நேரத்துக்கு முன் அந்தப் பத்திரிகையைப் புகழ்ந்து கொண்டிருந்த மயிலப்ப முதலியார் அவ்வளவு வெறுப் படைந்து அதை வீசி எறிவதற்குரிய காரணத்தைத் தெரிந்து கொள்ள முடியவில்லை.

முதலியார் கொடுத்த கதையை ஆசிரியர் கோபத்திலே எங்கோ போட்டுவிட்டார். "அவர் வந்தால் தொந்தரவு படுத்து வார்" என்று அப்பால் அவர் கவலைப்பட்டார். "நான் அந்தப் பேர் வைத்து முதலியாரென்பவர் எழுதியதாக ஒன்று எழுதிவிடு கிறேன்" என்று ராமசாமி முதலியார் சொன்னார். அதன் விளைவு தான் இது.

மயிலப்ப முதலியார் மறுபடி வந்து தம்முடைய கதையைக் கேட்டால் என்ன செய்வது? 'காணுமற் போன கூஜா'வை இன்றும் பத்திரிகாலயத்தார் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.



பிரசாதம்

ரா. ஸ்ரீ. தேசிகன், எம். ஏ.

அழகு பழுத்தொழுகும் ஒரு வெண்ணிலா இரவு. சுமார் ஒன்பது மணியிருக்கும். சென்னைக் கடற்கரை நாடகசாலை கலைந்துவிட்டது. அதில் நடித்த பலவிதமான பாத்திரங்களும், நடிப்புக் காட்சிகளைக் காணவந்த மாந்தர்களும் எங்கேயோ மறைந்து விட்டனர். ஜன அலைகளின் அரவம் அடங்கி விட்டது. ஆனால் உலகத்தின் உதயம் முதற்கொண்டு தன் தனி இளமை மாறாது மாறிமாறித் தோன்றிமறையும் விநோதங்களைக் கண்துஞ்சாது கண்ணுறும் கடலின் முரசொலிமட்டும் சதா ஒலித்துக் கொண்டிருந்தது.

இந்தச் சுந்தரமான வேளையில், தண்ணீர் ஓரத்திலுள்ள ஒரு கட்டை மீது ஒருவர் அசைவற்று உட்கார்ந்திருந்தார். அவர் நிலவை அள்ளிப் பருகுகிறாரா? அல்லது சமுத்திரகோஷத்தில் பிரபஞ்ச உற்பத்தியின் கானத்தை உணர்கிறாரா? அல்லது அடிக்கிற அலைகளில் தம்முடைய பிறவிக் கடலின் தரங்கங்களைப் பார்க்கிறாரா?—ஒன்றும் தெரியாது. ஒருவர் உட்கார்ந்திருக்கிறார்; அதுமட்டும் விளங்குகிறது.

சூழ்ந்துள்ள அமைதியில் திடீரென்று ஒரு குரல் எழுந்தது.

"யார் அங்கே?" என்று ஒருவர் வினவினர்.

"வாருங்கள். நான்தான் சந்திரசேகரன்."

"என் தனியே உட்கார்ந்திருக்கிறீர்கள்? நான் உங்கள் கிருகத்திற்குப் போயிருந்தேன். நீங்கள் கடற்கரைக்குப் போயிருக்கிறீர்களென்று அகத்தில் சொன்னார்கள். உங்களிடத்தில் என் மனத்திலுள்ளவற்றையெல்லாம் கொட்டி, என்னை அப்படியே ஆழ்த்துகிற பாரத்தைத் தணித்துக் கொள்ளலாமென்று வந்தேன்" என்றார் விசுவநாதையர்.

"அப்படி மனத்தை வாட்டுகிற செய்தி என்ன?" என்று கேட்டார் சந்திரசேகரையர்.

"என்ன அக்கிரமமான உலகம்! என்ன அநீதியான வாழ்வு! உலகமில்லை இது: இது ஒரு பயித்தியக்கார ஆஸ்பத்திரி. தெய்வத்திற்குக் கண் கெட்டுப்போய்விட்டது. கண்ணில் சதை படர்ந்திருக்கிறதென்றே சொல்லுவேன். ஆபரேஷன் கூடத் தேவை" என்று கயந்து பேசினார் விசுவநாதையர்.

"இப்படி வார்த்தைகளை உதிர்த்துக்கொண்டே போனால் என்ன பிரயோசனம்? நீங்கள் சொல்லுவது ஒன்றுமே விளங்கவில்லை. பதட்டமில்லாமல் விஷயங்களைச் சொல்லுங்கள். அழகும் அமைதியுங் கொஞ்சுகிற வேளையில் உங்களுக்கென்ன உள்ளக்கொதிப்பு? எவ்வளவு பெரிய உலக ஓலங்களும் இச்சாந்தத்தில் கரைந்துவிடும் போலிருக்கிறதே. சாந்தம் உள்ளும்

புறமும் ததும்பி ஒரு தனி மோன வெளியாய் விளங்குகிறதே. அதை நேரில் காணவில்லையா?''

''உமக்கு இருக்கும் அப்படி; நீங்கள் பக்கத்தில் நடக்கிற அக்கிரமங்களையும், அட்டூழியங்களையும் கவனித்தால்தானே.''

''விஷயத்திற்கு வராமல் வார்த்தைகளைக் கொட்டுவதனால் என்ன லாபம்?''

''ஜானகிராமுக்குச் சூப்பிரண்டு வேலை ஆகிவிட்டதே.''

''யார்? எந்த ஜானகிராம்? அநேக ஜானகிராமர்கள் ஆபீசில் வந்திருக்கிறார்கள்.''

''அவர்தான். அமுதாச்சாரியாருக்குக் குழிபறித்து வயிற்றிலே மண்ணள்ளிப் போட்டாரே, அந்தத் தர்மப் பிரபுதான்.''

''அவர்தான் அவர் வயிற்றில் அடித்தவரென்று நிச்சயமாய்ச் சொல்ல முடியுமா?''

''அதைப் பற்றிச் சந்தேகப் படுகிறீர்களா?''

''எனக்கு நேரில் தெரியும், எல்லா விஷயமும். ஆனால் நான் ஒரு பேடி; என் சுயநலம் நல்ல காரியத்தில் குறுக்கே நின்றது. மேலதிகாரிகளை எதிர்ப்பதற்குத் தைரியமில்லை. நிரபராதியான அமுதாச்சாரியார்மீது திருட்டுப்பட்டம் கட்டினார்; துரையைக் கையில் போட்டுக் கொண்டார். அமுதாச்சாரியாருக்கு வேலையும் போய் விட்டது. அவருக்கு வரவேண்டிய சூப்பிரண்டு வேலையையும் இவர் சம்பாதித்துவிட்டார். இப்போது ஜானகிராமின் குற்றங்களெல்லாம் குணமாகிவிட்டன துரைக்கு. ஜானகிராம் வைத்தது சட்டமாயிருக்கிறது ஆபீசில்.''

''உண்மையைச் சொல்லாததனால் நீரும் அமுதாச்சாரியாருக்குத் துரோகஞ் செய்தவராகிறீர்.''

''இன்னும் பத்துத்தரஞ் சொல்லுங்கள். நான் ஒரு பெரிய குற்றவாளிதான். என் நெஞ்சு பதைபதைக்கிறது; உள்ளம் வெதும்புகிறது, நினைக்கிற போதெல்லாம். அவருக்குச் சூப்பிரண்டு வேலை எப்படிக் கிடைத்தது தெரியுமா?''

''என்னவோ பலவிதமாய்ச் சொல்லிக் கொள்ளுகிறார்கள். அவை பொறுமையினால் எழுந்த அபவாதங்களாக இருக்கலாம்.''

''பொறுமையா? ஊரில் சமாசாரம் வெடித்துக் கொல்லென்று போய் விட்டது. ஜானகிராம் வீட்டில் இல்லாதபொழுது துரை அடிக்கடி வருகிறார். எல்லாம் ஓர் அம்மா மூலந்தான் இவ்வளவு வைபவமும்.''

''அந்த அம்மாள் யார்?''

''அவர் உடன்பிறந்தாள்தான். அவர்கள் மூவரும் சேர்ந்து மோட்டாரில் போவதை நான் பார்த்திருக்கிறேன்.''

''வண்டியிலே போனால் கெடுதலா? நம் நாட்டில் மனத்தில் வஞ்சனையில்லாமல் சரசமாய் மற்றொரு பெண்ணோடு பேசினால் போதும்: பெயர் கட்டி விடுவார்கள்.''

"உமக்கெனன உலசத்தைப் பற்றித் தெரியும்? இந்த மாதிரித்தான் பெரும் பெரும் பட்டங்களைப் பெற்றுவிடுகிறார்கள். படிப்பு வேண்டாம்; யோக்கியதைவேண்டாம். நீச மார்க்கத்தில் கைதேர்ந்திருந்தால் போதும்."

"நீங்கள் யாரை மனத்தில் வைத்தக்கொண்டு சொல்லுகிறீர்களென்று எனக்குத் தெரியும். இவ் விஷயங்களில் யார் என்ன செய்துகொள்ள முடியும்? எல்லாம் அவரவர் கர்மங்களுக்குத் தக்க பலனுயிருக்கிறது."

"கர்மம்! என்ன கர்மம் செய்தார் ஏசுநாதர் சிலுவையிலேற? என்ன கர்மம் செய்தார் சாக்ரடிஸ் (Socrates) விஷத்தைக் குடிக்க? என்ன கர்மம் செய்தாள் உலகமாதாவான சீதை சிறைவாசஞ் செய்ய?" என்று கர்ஜித்தார் விசுவநாதையர்.

சந்திரசேகர ஐயர் மௌனமாயிருந்தார்.

"ஏன் பதில் சொல்லாமலிருக்கிறீர்கள்?" என்று கேட்டார் விசுவநாதையர்.

"எனக்கென்ன தெரியும்? ஒன்றும் தெரியவில்லை. ஆனால் எல்லாம் நல்லதற்குத்தான் என்று நான் நம்புகிறேன்."

"நான் கண்டதை உங்களுக்குச் சொல்லுகிறேன், கேளுங்கள்" என்று ஆரம்பித்துப் பேசலானார் விசுவநாதையர். உலகம் நடக்கிறது ஒரு குருட்டுச் சக்தியினாலோ அல்லது உலகத்துயரில் களிக்கிற இரக்கமற்ற பிசாசாலோ, இவைகளில் ஒன்றுயிருக்க வேண்டும். அந்த விஷயத்தைப்பற்றிப் பேச வேண்டாம். அது சொற்கடந்தது; மனந் தடுமாடுகிற நிலை. பிரத்தியக்ஷமாய் நாம் பார்க்கிறோம், பரமசாதுவான அழுதாச்சாரியார் கஷ்டப் படுகிறதை; இவரைப் பாலியத்திலிருந்து எனக்குத் தெரியும். நாங்களிருவரும் சேர்ந்து விளையாடியிருக்கிறோம். ஈச்வர பக்தி யுள்ளவர். வேதாந்த காலக்ஷேபஞ் செய்திருக்கிறார். மனப்பூர்வமாக ஒரு பிராணிக்குத் தீங்கிழைத்தவரல்ல. பரோபகாரத்திற்கே சரீரம் ஏற்பட்டதென்று கருதியவர். இவருக்கு வேலை போவானேன்? சம்சாரம் சாவானேன்? அருமந்த குழந்தைகள் ஒன்றன் பின் ஒன்றாய் வைசூரியில் மடிவானேன்? கஷ்டதசையில் கூடப் பிறரை யாசிக்கிறதில்லை. சமையற்காரராயிருந்தார். இப்பொழுது அதுகூட இல்லை. இவருக்கு மீதியிருந்த ஒரு பெண்ணும் வைசூரியால் இந்த வருஷம் படுத்துவிட்டது; தொத்துவியாதி என்று ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய் விட்டார்கள். முன்னே சொன்ன மஹான்களை நாம் நேரில் பார்த்ததில்லை. அவர்களெல்லாம் கவிகளின் சிருஷ்டிகளோ, அல்லது அவர்களைச் சுற்றி யெழுந்த கதைகள் பொய்கள் பொதிந்த கட்டுக் கதைகளோ, நமக்குத் தெரியாது. இவர் குணத்தைப்பற்றி எந்தக் கோவிலிலும் நான் சத்தியஞ் செய்வேன்."

சந்திரசேகர ஐயர் ஒன்றும் பதிலுரைக்கவில்லை. அவர் மௌனமும் வெளி மௌனமும் ஒன்றாய் விட்டன. நிலா வீசிக்கொண்டிருந்தது.

அதே நிலவில் மற்றொரு காட்சி. ஒரு தொத்து வியாதி ஆஸ்பத்திரி. ஒரு கணம் அழுகை; ஒரு பொழுது முனகல்; ஒரு சமயம் பிதற்றல். குழந்தைகளைச் சமாதானஞ் செய்கிற தாய்மார்கள்; கணவர்களுக்கு ஆறுதல்

செய்கிற மனிவிமார்கள்; தெய்வங்களைத் தொழுகிறவர்கள். சிலர் "பாழுந் தெய்வமே, உனக்குக் கண்ணில்லையா?" என்று வெறுத்துச் சொல்வர், மற்றுஞ் சிலர். "செய்த வினை யிருக்கத் தெய்வத்தை நோவதேன்?" என்று வேதாந்தம் கூறுவர் இன்னுஞ் சிலர்.

அம்மைப்பால் நாற்றத்திற்குமேல் மூத்திரநாற்றம்; இவ்விருநாற்றங்கள் வேப்பம்பூவின் மணத்தோடு கலக்கின்றன. மின்சார விளக்கொளி நிலவில் மறைகிறது. ஆஸ்பத்திரி நடுவிலுள்ள மாரியம்மன் கோயிலின் வாசலில் ஒரு தீபம் தெரிகிறது.

ஓர் அறையில் அதிகமான பிதற்றல். அம்மை பூட்டிய பெண்ணிற்கு வயது பன்னிரண்டிருக்கும். ஜன்னி பிறந்திருக்கிறது. பிதற்றலெடுத்தவுடன் அழுதாச்சாரிக்குப் பழைய ஞாபகங்கள் வருகின்றன. பிதற்றல் வந்தால் மரணம் நிச்சயமென்று அவர் கருதுகிறார். இப்படித்தான் அவர் குழந்தைகள் மண்ணோடு மண்ணாய்ப் போயின. அவருக்கொன்றும் தெரியவில்லை. இந்த மாதிரி வேளைகளில் யார்தாம் என்ன செய்யமுடியும்? குழந்தைக்குக் கண்கள் சுழல்கின்றன; உதடுகள் சுளிக்கின்றன. கேட்ட குரலுக்குப் பதிலில்லை.

கண்கள் நீர் மல்க அவர் பிரார்த்தனை செய்கிறார்: "உன் சொத்தை உனதாக்கிக் கொள்ளுகிறாய்; தருகிறாய்; எடுத்துக் கொள்ளுகிறாய். நான் வேதனையடைய இடமிண்டோ? என் உடலாவி உன்னுடையனவே. அவைகளை எப்பொழுது எடுத்துக்கொண்டு போகப் போகிறாயோ, அந்தக் காலத்தை நான் எதிர்பார்க்கிறேன். உன்னைச் சரணம் புகுந்து விட்டேன்."

இரவு தேய்கிறது; மங்கி அவிகிற நிலவின் ஒளியோடு ஓர் உயிரின் ஒளியும் அவிகிறது. இலைகள் முதலியன உதிர்ந்த ஒரு வெற்று மரம் பல மூலைகளிலிருந்து அடிக்கும் உலகப் பகைப்புயலைத் தாங்கத் தயாராயிருக்கிறது.

சில வருஷங்கள் புரண்டு போகின்றன. ஸ்ரீரங்கம் காவிரிக் கரையிலுள்ள ஒரு தோப்பு. பொழுது சாய்கிற வேளை. ஒருவர் பாடுகிறார்:

"ஊரிலேன் காணி யில்லை உறவுமற் றொருவ ரில்லை
பாரில்நின் பாத மூலம் பற்றினேன் பரம மூர்த்தி
காரொளி வண்ண னே! நற் கண்ணனே கதறு கின்றேன்
ஆருளர்? களைகண் அம்மா! அரங்கமா நகரு ளானே!"

அவர் உருவம் ஒரு பயித்தியக்காரர் உருவம்; மாசுபடிந்த எண்ணெய்ப பிசுக்குள்ள உடை; கை நகங்கள் நீண்டு வளர்ந்திருக்கின்றன. நீண்ட தாடி மார்பைத் தொடுகிறது. கோயில் அநேகமாய் மூடுகிற சமயம் பார்த்துக் கோவிலுக்கு வருவார்; ஒருவரோடும் பேசுகிறதில்லை. எங்கேயாவது ஒரு கவளம் சாப்பிட்டுவிட்டுத் திரிவார். சதா அரங்கனைத் தியானம் பண்ணுகிறார். எங்கே தலை சாய்க்கிறார்? எங்கே தங்குகிறார்? அது ஒருவருக்கும் தெரியாது. அது ஒரு மந்திரம்.

அவரைப்பற்றி அநேக விதவார்த்தைகள் கிளம்பி விட்டன: பித்தன்; அவன் ஒரு யோகி; அவன் யோகியா? எத்தனை ஊரைக் கொள்ளையடிக்க

வேஷம்போட்டுத் திரிகிறானே? அர்ச்சகனும் அவரைச் சந்தேகித்து விட்டான்.

ஒரு காளிரவு. கோவிலில் ராத்திரி காலமாயிற்று. அர்ச்சகன் கதவை மூடிக்கொண்டு போய்விட்டான். அப் பைத்தியக்காரருக்குக் கதவு சாத்தினது தெரியாது. தூணோடு தூணாக நின்ற அவரை அர்ச்சகன் காணவில்லை. கோயில் கர்ப்பக்கிருகத்தில் அகப்பட்டுக் கொண்டுவிட்டார்.

மறுநாட் காலை ஸ்ரீரங்கம் முழுவதும் ஒரே இரைச்சல். கோவிலில் திருட்டு, கோவிலில் திருட்டு என்ற முழக்கம் அலையடிக்கிறது. ஊர்முழுவதும் ஜனங்களிடத்தில் ஒரு பரபரப்பு. அங்குமிங்கும் அவர்கள் தலைவிரி கோலமாக ஓடுகிறார்கள். போலீஸார்கள் வந்துவிட்டார்கள், திரு திருவென்று.

நூலோடு ஒன்றுந் தெரியாது திகைத்து நின்ற பைத்தியக்காரனைக் காண்கிறார் அர்ச்சகர். கல்தா கொடுத்துத் தள்ளிக்கொண்டு வந்து, "இதோ இவன்தான் திருடன்" என்கிறார்.

"ஊரைக் கொள்ளையடிக்கவா வந்திருக்கிறாய்? உன்னைப் போலப் பைத்தியக்காரர்கள் அநேகம் பேர் இருப்பார்களே. சொல்லுகிறாயா இல்லையா?" என்று இரத்தங்கட்ட அடிகளை அவர் முதுகின் மீது பெய்கிறார்கள்.

"பாருடா, திருட்டு முழியை! அப்பவே சொல்லவில்லையா, இவன் ஒரு போக்கிரியென்று?" என்று கையை ஓங்குகிறார் அர்ச்சகர். அவர் பதில் பேசவில்லை; கை கூப்பியவண்ணம் இருக்கிறார்.

சிறையில் ஓர் அறை. "அப்பா, இதுவா உன் பிரசாதம்? உன் அருளா இது!" என்று கைபூட்டுப் போட்டவண்ணம் நிற்கிறார் அமுதாச்சாரியார்.

சென்னையில் ஒரு பங்களா; மலர்களின் மணம் 'கம்' மென்று வீசுகிறது. காந்த விளக்குகள் மின்னுகின்றன. ஓரழகிய சோபாவில் ஒரு துரை சாய்ந்துகொண்டிருக்கிறார். வாயில் உயர்ந்த சுருட்டு; புகை சிறு மேகங்களாக உயரக் கிளம்புகிறது. கோப்பைகள் நிறையச் சாராயம்; மேஜை முழுவதும் பிஸ்கோத்துகள், ரொட்டித் துண்டுகள், பலவிதமான பக்ஷணங்கள். ஜானகிராம் உட்கார்ந்திருக்கிறார், துரைக்கு நேராக. அவர் தங்கை, முகத்தில் புன்னகை அரும்பத் துரையைப் பார்க்கிறாள். ஒரு பத்திரிகை மேஜையிலிருக்கிறது. அதை உடைக்கிறார் ஜானகிராம்.

'ஸ்ரீரங்கத்தில் திருட்டு, ஸ்ரீரங்கத்தில் திருட்டு' என்ற தலையங்கம்.

"திருடினவர் ஆபீசு வேலையிழந்த அமுதாச்சாரியார்!" ஜானகிராம் துரைக்கு வாசித்துக்கொண்டே, "அப்பொழுதே உங்களுக்குச் சொல்லவில்லையா?" என்றார். "ஆம் ஆம்" என்கிறார் துரையவர்களும். மூன்று பேருஞ் சிரிக்கிறார்கள். அன்பில் ஊறின ஆண்டவன் அறத்தைப் பரிகசித்து வாதுக்கழைக்கிறது போலிருக்கிறது அவர்கள் புரியும் நகை.

———

ஜடை பில்லை

'ராகோ'

விமலா பிறந்தகம் சென்று மூன்று மாதங்களுக்குமேல் ஆயின. தகப்பனாரைப் பார்க்கப்போனவள் டைபாயிட் ஜ்வரம் கண்டு படுக்கையாய்க் கிடந்தாள். அவள் கணவன் ராஜாராமன் அவளுக்கு ஜ்வரம் கடுமையாயிருந்தபொழுது அவளைப் பார்த்து விட்டு வந்தான். அதன் பிறகு வேலைத் தொந்தரவினால் போக வில்லை; வாரந்தோறும் தேக நிலையைப்பற்றி அவள் தகப்பனார் எழுதும் கடிதங்களைப் படித்து ஒருவாறு ஆறுதலடைந்தான்.

தீபாவளியும் நெருங்கிற்று. ராஜாராமனுக்குக் கலியாணமாகிச் சுமார் இரண்டு வருடங்கள் சென்றன. இதுதான் இரண்டாந் தீபாவளி. தலை தீபாவளியின்போது நடந்த சம்பவங்கள் அவன் ஞாபகத்துக்கு வரவே, அவை அவனுக்கு இன்பக் கனவாய்த் தோன்றின.

விமலாவிடமிருந்து ராஜாராமனுக்கு ஒரு கடிதம் வந்தது. தலைக்கு ஜலம் விட்டாகிவிட்டதென்றும் தீபாவளிக்குக் கட்டாயம் வரவேண்டுமென்றும் அதில் எழுதியிருந்தது. மனைவியின் விருப்பப்படியே ராஜாராமன் புறப்படத் தீர்மானித்தான்.

ஆபத்தான ஒரு வியாதியினின்றும் விமலா பிழைத்ததால், அவளுக்கு மகிழ்ச்சி தரும்படி ஏதாவது ஒரு சாமான் வாங்கிக் கொண்டு போகவேண்டுமென்று எண்ணினான்.

ராஜாராமனும் விமலாவும் தனிக்குடித்தனம் செய்தபொழுது, விமலாவின் தலை நிறைய மயிர் கன்னங்கரேலென்று அடர்ந்து பின்னங்கால் வரையில் தொங்கும். அதை அழகாக வாரிப் பூக்கள் வைத்துப் பின்னிவிட்டுக்கொள்வாள்.

"புது வைரத்தில் ஜடை பில்லை வந்திருக்கிறது. அடுத்தகத்துக் கமலா ஒன்று வாங்கியிருக்கிறாள். அதுபோல் எனக்கு ஒன்று வாங்கிக்கொடுங்களேன்" என்பாள் விமலா.

"ஆகட்டும்."

"இப்படித்தான் எப்பொழுதும் சொல்லுகிறீர்கள்."

"சற்றுப் பொறேன், விமலா; வாங்கித் தருகிறேன்."

இம்மாதிரி சம்பாஷணைகள் அநேகந் தடவை அவர்களுக்குள் நடந்திருக்கின்றன.

சம்பளம் முக்கியமான செலவுக்கே போதாமல் இருக்கையில் நகை எங்கிருந்து வாங்கமுடியும்? ஆகையால் அவன் வார்த்தைகள் வெறும் ஆசை வார்த்தைகளாகவே அது வரையில் இருந்தன. எனவே, அவள் ஆசைப்பட்ட ஜடை பில்லை ஒன்று வாங்கிக் கொண்டு போக நிச்சயித்தான்.

ராஜாராமனுக்குப் பண நிலைமை அப்பொழுது ஒன்றும் பிரமாதமாக உயர்ந்துவிடவில்லை. அவன் கையில் ஐந்து ரூபாய் தான் இருந்தது. நண்பர்களிடம் கடன் வாங்கியிருந்தபடியால் மறுபடியும் அவர்களைக் கேட்க அவனுக்கு விருப்பம் இல்லை. ஆகையால் தன் கையில் போட்டிருந்த கடியாரத்தை நாற்பது ரூபாய்க்கு விற்றான். அந்த ரூபாய்க்கு ஓர் அழகான ஜடை பில்லை வாங்கினான்.

"தீபாவளியன்று விமலா இதைத் தலையில் வைத்துப் பின்னிக் கொண்டு எவ்வளவு சந்தோஷமாயிருப்பாள்!" என்று அடிக்கடி தன் மனக்கண்ணால் தன் மனைவியின் சுந்தர முகத்தைப் பார்த்து அகமகிழ்ந்தான்.

வேட்டகம் சேர்ந்ததும் ராஜாராமனை அவன் மாமனார் வெகு பரிவுடன் வரவேற்றார். இவனை விமலாவைக் கண்டு அவளிடம் தான் வாங்கிவந்த ஜடை பில்லையைக் கொடுக்கவேண்டுமென்று துடித்தான்; அவரோ ஊர் க்ஷேமம் விசாரித்துக்கொண்டே போனார்!

அப்போது காமரா உள்ளேயிருந்து ஒரு பெண் உருவம் தென்பட்டது. அதைப் பார்த்ததும் ராஜாராமனுக்குத் தன் கண்களையே நம்பமுடியவில்லை. "என்ன! விமலாவா இப்படியாகி விட்டாள்?" என்றான்.

உடம்பு மெலிந்து கன்னங்கள் ஒட்டிப்போய், தலை மயிரெல்லாம் உதிர்ந்து ஒரு சவம்போல் காணப்பட்டாள் விமலா.

"ஏதோ பிழைத்தது புனர் ஜன்மந்தான்" என்றார் மாமனார்.

ராஜாராமன் தான் வாங்கிவந்த பரிசைப் பற்றி ஒரு க்ஷண நேரம் நினைத்து வருத்தப்பட்டான்.

"எனக்கு மத்தாப்பு வாங்கி வந்திருக்கிறீர்களா?" என்று எட்டு வயது மைத்துனி கமலம் அவனைக் கேட்டாள்.

மத்தாப்புப் பெட்டியையும் பட்டாசுகளையும் அவள் கையில் கொடுத்தான். அவளுக்கு வெகு சந்தோஷம். மறுபடியும் என்னவோ நினைத்துக்கொண்டு, "அக்காவுக்கு என்ன வாங்கி வந்திருக்கிறீர்கள்?" என்றாள்.

அவனை அறியாமலே அவன் கைகள் ஜடைபில்லைப் பெட்டியை அவளிடம் எடுத்துக்கொடுத்தன.

விமலா அதை வாங்கித் திறந்துபார்த்தாள். பளிச்சென்று கண்களில் ஒளியொன்று வீசிச் சிறிதுநேரம் அவள் முகம் புன்முறுவல் செய்தது. ஆனால் மறுநிமிஷம் அவள் கண்களிலிருந்து ஜலம் தாரைதாரையாகப் பெருகிற்று. தலைமயிர் எல்லாந்தான் கொட்டிப்போயிற்றே! ஜடை பில்லையை எப்படி வைத்துக்கொள்ள முடியும்?

அதைக் கண்ட அவள் தகப்பனார், "வருத்தப்படாதே, அம்மா. கொஞ்ச நாட்களில் தலைமயிர் வளர்ந்துவிடும். அப்பொழுது ஜடை பில்லையை வைத்துக்கொள்ளலாம்" என்று அவளைத் தேற்றினார்.

பிறகு, "மாப்பிள்ளை! விமலா வியாதியாய்ப் படுத்துவிட்டதால் இந்தத் தீபாவளிக்கு ஒன்றும் சரியாய்ச் செய்யமுடியவில்லை. இருந்தாலும், இரண்டு பவுனில்—" என்று சொல்லி விமலாவை நோக்கி, "அதை எடுத்துக்கொண்டுவா" என்று சொன்னார்.

விமலாவும் உள்ளே சென்று ஒரு சிறு பெட்டியைத் தன் தகப்பனார் கையில் கொண்டுவந்து கொடுத்தாள்.

"விமலாதான் சொன்னாள், உங்களுக்கு ரொம்பவும் உபயோகமாயிருக்குமென்று. உங்கள் கையில் போட்டுக்கொள்ளும் கடியாரத்துக்கு இரண்டு பவுனில் ஒரு சங்கிலி செய்திருக்கிறேன். இதோ பாருங்கள்" என்று சொல்லிக்கொண்டே சங்கிலியை அவன் கையில் கொடுத்தார்.

"கடியாரத்துக்குச் சங்கிலியா!" என்றான் ராஜாராமன் ஆச்சரியத்துடன். பிறகு அவன் மௌனமாய் உட்கார்ந்திருப்பதைக் கண்ட மாமனார், "சங்கிலியை உங்கள் கையில் போட்டுக்கொள்ளுங்கள். சரியாக இருக்கிறதா பார்ப்போம்" என்றார்.

"கடியாரத்தை விற்றுவிட்டேன்" என்று அவன் சொன்னதும் இப்படி எதிர்பாராத விதமாய் ஒருவர் பரிசு ஒருவருக்கு உபயோகமில்லாமற்போனதைக் குறித்து அவர்கள் விசனப்பட்டார்கள்.

அப்பொழுது விமலாவின் தாயார் அங்கு வந்தாள். அவர்களுடைய முகவாட்டத்தின் காரணத்தை அறிந்ததும், "நன்றாயிருக்கு! இதற்காக ஒருவர் வருத்தப்படுவாரா? வாங்கியிருக்கிற சாமான் என்ன ஊசிப்போயிடுமா? நாளைக்கு விமலாவுக்குத் தலைமயிர் வளர்ந்தவுடன் பில்லையை வைத்துக்கொள்ளுகிறாள். மாப்பிள்ளைக்கு ஒரு கடியாரமும்கூட வாங்கிக்கொடுத்தால் போச்சு. சமையல் ஆகிவிட்டது. எல்லோரும் எழுந்திருந்து சாப்பிடவாருங்கள்" என்று அழைத்தாள்.

சங்கறுக்கும் சந்து

வே. ரா. சுந்தரராமன், எம். ஏ.

டாக்காவிலுள்ள நான்கு ஆபீஸ்களும் ஒரே அடியில் பரிசோதிக்கப்படவேண்டியிருந்ததால் அங்கே ஒரு மாதம் முழுவதும் தங்க நேர்ந்தது. அதுதான் நான் டாக்காவுக்கு முதன்முதல் போகும்படி கிடைத்த சந்தர்ப்பம். டாக்கா என்றதும் எனக்கு மயிர்க்கூச்சல் எடுக்கத்தான் செய்தது. ஏனெனில் அதிலுள்ள நெசவுக்காரர்களன்றோ ஓர் ஊசியின் காதுவழியாக நூழைக்கும் படியாயுள்ள நூறு கஜமுள்ள 'மஸ்லின்' துணிகளைச் செய்யக் கூடிய சாமர்த்தியம் உள்ளவர்கள் என்று சரித்திரத்தில் புகழப்பட்டிருக்கிறார்கள்?

பகலில் நான் செய்யவேண்டிய வேலைகள் முடிந்து மாலையில் சற்று ஓய்வு நேரம் கிடைத்தது. உடனே என்னுடைய பங்களா சகாக்களுடன் ஊர் பார்க்கவேண்டிக் கிளம்பினேன். முக்கியமாக அவ்வூரில் பார்க்கவேண்டியது மணிப்பூர் வியவசாயப் பண்ணை என்றனர். வியவசாயப்பண்ணை என்றதும் எனக்கு ஒரு தனி உத்ஸாகம் ஏற்பட்டது. கோயம்புத்தூரிலுள்ள சர்க்கார் வியவசாயப் பண்ணைக்கும் எனக்கும் சிறிது காலம் சம்பந்தம் ஏற்பட்டிருந்தது. ஆகையால் இம் மணிப்பூரில் நிர்மாணிக்கப்பட்டிருப்பது எத்தகைய பண்ணை, கோயம்புத்தூரிலுள்ளதுடன் எவ்வாறு ஒப்பிடக்கூடியது என்பவைகளைக் காண வேண்டுமென்ற ஆசை எனக்கு ஏற்பட்டது. அப்பண்ணையை நோக்கிச் செல்லலாமேம்.

கோயம்புத்தூரிலுள்ள பண்ணையைப் பலவிதத்தில் இம்மணிப்பூர் வியவசாய சோதனைச்சாலை ஒத்திருந்தது. முதன்முதலாக, கோயம்புத்தூருக்கு நான்கு மைல்களுக்கு அப்பால் பண்ணை நிறுவியிருக்கும் இடமாகிய 'லாலி ரோட்டு' என்பது இருப்பது போலவே மணிப்பூர்ப் பண்ணையும் டாக்கா என்னும் நகரத்திலிருந்து நான்கு மைல்களுக் கப்பாலுள்ளது.

பண்ணையிலுள்ள பல நிர்மாணங்களுக்குள் என் மனத்தைக் கவர்ந்தது கரும்புச் சோதனை செய்யப்படும் பகுதியே. கோயம்புத்தூரில் கரும்பை நட்டுப் பயிராக்கி விளைப்பதுடன் நிறுத்திக்

கொண்டிருக்கும் ஆராய்ச்சியை இங்கு அதற்குமேலும் தொடர்ந்து செய்கின்றனர். கருப்பஞ்சாற்றைக் காய்ச்சி வெல்லம், கற்கண்டு முதலியவைகளை உண்டுபண்ணுவதில் இங்கே கவனம் செலுத்துகின்றனர். ஆகையால் இப்பகுதியில் நான் பார்த்தன வெல்லாம் புதியனவாகவே இருந்தன. மற்றப் பகுதிகளில், அநேகமாய்க் கோயம்புத்தூர்ப் பண்ணையிலுள்ளதுபோலவேதான் இருந்தன.

கரும்புச் சோதனைப் பகுதியிலிருந்து அகல்வதற்குமுன் எங்களை அழைத்துச்சென்ற உத்தியோகஸ்தரைக் கேட்டு, எனக்குத் தோன்றிய சந்தேகம் ஒன்றை நீக்கிக்கொள்ள விரும்பினேன்; "ஐயா! இக்கரும்பாலைச் சோதனைக்குக் கழிகள் எங்கிருந்து வரவழைக்கிறீர்கள்? கோயம்புத்தூர்ப் பண்ணையிலிருந்தா?" என்று கேட்டேன்.

அவர் ஆச்சரியத்துடன், "கோயம்புத்தூரிலிருந்தா? சீ சீ. எங்களுக்குத் தேவையான பொருள்களையெல்லாம் நாங்கள் இங்கேயே உண்டாக்கிக் கொள்ளுகிறோம். அதோ இங்கிருந்து ஐந்து வயல்களுக் கப்புறம் ஆறுவது வயல் இருக்கிறதல்லவா? அதிலே போய்ப் பாருங்கள். நாங்கள் பயிரிட்டிருக்கும் கருப்பங் கன்றுச் செடிகளைக் காணலாம்" என்றார். அவருடைய பதிலில், அந்நிய மாகாணங்களின் உதவியை அப்பண்ணையில் நாடவில்லை யென்பதை வெளியிடுவதிலே அவருக்கிருந்த உத்ஸாகமும் பெருமிதமும் தொனித்தன.

அவர் குறிப்பிட்ட வயல் நாங்கள் ஊருக்குத் திரும்பிவரும் வழியிலிருந்தபடியால் அதையும் பார்த்து விடுவதென்று தீர்மானித்து அதை அணுகினோம். அங்கே சென்று பார்த்ததில் ஒவ்வொரு செடியின் அருகிலும் ஒவ்வொரு மூங்கில் கழியை நாட்டி அதில் ஒரு துண்டுக் கடிதத்தைக் கட்டி அக்கடிதத்தில் ஏதோ சில எழுத்துக்களைக் குறித்திருந்தனர். ஒரு குறிப்பை நோக்கினேன். அது 'Co-267' என்றிருந்தது. அதனை அடுத்திருந்த பாத்தியிலுள்ள குறிப்புகளில் 'Co-272' என்று கண்டிருந்தது. இதே மாதிரி அங்குள்ள குறிப்புகள் எல்லாவற்றிலும் 'Co' என்னும் இரண்டு ஆங்கில எழுத்துக்களும் அவற்றுடன் ஏதாவது ஓர் எண்ணும் எழுதியிருந்தன. எங்களுடன் வந்த உத்தியோகஸ்தரை இந்த அக்ஷரங்களும் எண்களும் எவற்றைக் குறிக்கின்றன என்று கேட்டேன்.

"இவை விதைத்திருக்கும் விதைகளின் சங்கை. பல ரகங்களைக் கொண்டு சோதனை நடப்பதால் ஒன்றுக்கொன்று மாறுடாமல் இருப்பதற்காக வேண்டி இம்மாதிரி ஏற்பாடு செய்யப்பட்டது.

அவைகளைப் பிரத்தியேகமாகக் குறிப்பிடுகிறோம்" என்று சொன்னர்.

"ஏதோ ஒருவித அடையாளத்திற்காகத்தான் இம்மாதிரி குறித்திருக்கிறீர்கள் என்பது சொல்லாமலேயே விளங்குகிறது. (ஏன், கோயம்புத்தூரிலும் உள்ள இம்முறை எனக்குப் பரிசயம் உண்டே!) நான் உங்களைக் கேட்டது 'Co' என்னும் எழுத்துக்கள் எதைக் குறிக்கின்றன என்பதுதான்" என்று மறுபடியும் அவரைக் கேட்டேன்.

இக்கேள்வியை அவர் விரும்பவில்லை யென்பதை அவர் முகம் காட்டிவிட்டது. எனவே, "இதைப்பற்றி எங்களுடைய ஆபீஸில் தான் விசாரிக்கவேண்டும்" என்று அவர் பதிலளிக்குமுன்னரே அவரைத் தொந்தரவு செய்ய இஷ்டமின்றி அருகிலுள்ள ஆபீஸை நோக்கி நடந்தோம்.

ஆபீஸில் கிடைத்த வரலாறு நான் எதிர்பார்த்தபடியே இருந்தது. "Co" என்பது கோயம்புத்தூரைத்தான் குறித்தது. கருப்பங்கழிகள் தென்னிந்தியாவிலிருந்து வரவில்லை என்று ஒரு பெருமிதத்துடன் சொன்னவர், விதைக்கழிகள் மட்டும் கோயம் புத்தூர் ஆராய்ச்சிச்சாலையிலிருந்து வந்தவைகளே என்பதை ஒப்புக்கொள்ள விரும்பாதது இயல்புதானே என்பதும் எனக் குப் பளிச்சென்று விளங்கிற்று!

வங்காள அரசாங்கத்தின் முக்கிய வியவசாயப் பண்ணையுள்ள மணிப்பூரும் நம்முடைய தென்னிந்தியா தேசத்துடன் நெருங்கிய உறவு வைத்துக் கொண்டிருக்கிற தென்பதைக் கண்டு சற்றுத் திருப்தியடைந்தவனாய் டாக்காவை நோக்கித் திரும்பினேன்.

பொழுது சாய்வதற்கு இன்னும் கொஞ்ச நேரம் இருந்த படியால் உடனே எங்கள் விடுதியை அடைய எங்களுக்கு விருப்ப மில்லை. அவ்வூரில் சென்னைக் கடற்கரைக்குச் சமமான ஓர் இடம் இருக்கிறதென்றும், வேண்டுமானால் அங்கே சென்று உலாவி வரலாமென்றும் என் கூட்டாளிகள் சொன்னார்கள். எல்லோரும் அவ்விடத்தை நோக்கிக் கிளம்பினோம்.

குறிப்பிட்ட இடத்திற்குச் சென்றதும் நான் சற்று ஏமாற் றமே அடைந்தேன். டாக்காவில் ஒரு நதி ஓடுகிறது. அதிலிருக்கும் ஜலத்தின் ஆழத்தை உத்தேசித்துத்தான் அதை நதி யென்று சொல்லலாம். அகலத்தில் அது ஒரு கால்வாய் போலத்தான் இருந்தது. தோற்றத்தில் அது சென்னைக் கருகிலிருக்கும் 'பங்கிங்ஹாம்' கால்வாயை ஒத்திருந்தது. அதன் கரையோரம் ஒரு ரஸ்தா உண்டாக்கி அதன் இருபுறங்களிலும் சிமிட்டியினல்

செய்த 'பெஞ்சு'களை வைத்திருக்கின்றனர். இதைத்தான் நம் மூர்க் கடற்கரையைப் போலிருக்கும் இடம் என்று என் நண்பர் கள் குறிப்பிட்டனர்!

இந்த நதிக்கு வேறு ஒரு பெயர் இருந்தாலும் அவ்வூரார் இதுதான் ஆதியில் கங்கையாயிருந்தது என்று சொல்லிக் கொண் டது வங்க தேசத்தாருடன் நெருங்கிப் பழகிய எனக்கு வியப்ப ளிக்க வில்லை. இது வங்க மாகாணம் முழுவதும் பொதுவாக உள்ள ஒரு சம்பிரதாயமே. ஆங்காங்கு ஓடும் ஒவ்வொரு சிற்றாற் றையும் அவர்கள் 'புரான் கங்கா' அல்லது 'புடி கங்கா', அதாவது 'பழைய கங்கை', அல்லது 'கிழக் கங்கை' என்று குறிப்பிடுவார்கள். கங்கையின் ஜலம் தங்கள் ஊரையும் புனிதமாக்குகிறது என்று சொல்லிக்கொள்வதில் அவர்களுக்கு ஒரு பிரியம். காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சேயல்லவா!

சிறிது நேரம் இக்கடற்கரையில் உலாவி விட்டு எங்கள் ஜாகைக் குத் திரும்பலானோம். வந்த வழியே போகாமல் வேறு மார்க்கமாய்ச் சென்றால் அவ்வூரின் வேறுசில பாகங்களையும் பார்த்துக்கொண்டே செல்லலாம் என்று என்னுடைய நண்பர்கள் கூறியதன்மேல் அப்படியே சென்றோம். சிறிது தூரம் நடந்தவுடன் எங்கிருந்தோ எங்கள் காதுகளைத் துளைக்கும்படி "கிர்," "கிர்" என்னும் சத்தம் கேட்டது. அது என்ன சத்தம் என்று விஞ்சியதில் அருகிலிருக் கும் ஒரு சந்திலிருந்து உண்டானது என்று புலப்பட்டது. என் னுடைய தூண்டுதலின்மேல் நானும் என்னுடைய நண்பர்களும் அச்சந்தினுள் நுழைந்தோம். அங்கே நான் கண்ட காட்சி நெடு நாளாக என் மனத்தில் இருந்துவந்த ஒரு சந்தேகத்தைப் போக்கி எனக்கு அளவிலா மகிழ்ச்சியை அளித்தது.

தருமிக்குப் பொற்கிழி யளித்த திருவிளையாடலில் இறைய னரின் வாக்காகக் குறிப்பிக்கப் பெறும்,

> "அங்கங் குலுங்க அரிவாளின் நெய்தடவிப்
> பங்கப் படவிரண்டு கால்பரப்பிச் - சங்கதனைக்
> கீர்கீர் எனவறுக்கும்"

என்னும் வர்ணனையை அதுகாறும் நான் மானஸிகமாகத்தான் அனுபவித்து வந்தேன். பாலியர்களும் விருத்தர்களும் சங்கை அறுத்து அதிலிருந்து பலவித அணிகலன்களைச் செய்வதை அன்றுதான் கண்கூடாகக் கண்டேன்.

பண்டைத் தமிழ் நூல்களில் குறிக்கப்பட்டிருக்கும் இச் சங் கறுக்கும் தொழிலைக் கவிதைகளில் காணப்படும் "அன்ன நடை" போன்ற உவமைகளின் கோஷ்டியில்தான் சேர்க்கவேண்டும்

என்பது என் கருத்து. ஆனல் அன்றிரவு நான் கண்ட காட்சி, இது ஒரு காலத்தில் தமிழ் நாட்டிலும் பரவியிருந்தது என்னும் ஞாபகத்தை உண்டாக்கியது.

சங்கிலிருந்து இவர்கள் செய்யும் அணிகலன்களுக்குள் கைவேலையல்களும் மோதிரங்களும் அவைகளில் செய்யப்படும் வேலைப் பாடுகளும் என் மனத்தைக் கவர்ந்தன. சங்கவேலையல்களுக்கு வங்கதேசத்தில் ஒரு தனிச் சிறப்புக் கொடுக்கின்றனர். கலியாணமான வுடன் பெண்கள் அவைகளைத் தாங்கள் மணமான ஸ்திரீகள் என்பதற்கு அறிகுறியாக அணிவது ஒரு சம்பிரதாயம். அது நம்மவர்கள் 'தாலி' என்னும் ஓர் ஆபரணத்தை அணிவது போன்றது. ஆனல் மேல் நாட்டுப் படிப்பும் நவநாகரிகமும் முதிர்ந்து வரும் இந்நாளில் பிராமணர்களின் உச்சிக் குடுமியும் திலகதாரணமும் அடைந்து வரும் கதியையே இச்சங்கவேலையல் களும் அடைந்து வருகின்றன!

சங்கறுப்பவர்களில் ஒருவனை அணுகி அவர்கள் செய்யும் ஆபரணங்களுக்குத் தேவையான சங்கங்களை எங்கிருந்து தருவிக் கின்றனர் என்று கேட்டேன்.

"உங்கள் ஊராகிய தென்னாட்டில் தூத்துக்குடி யென்னும் ஊரிலிருந்து" என்று பதில் வந்தது. தென்னாட்டிற்கும் வங்கப் பிரதேசத்திற்கும் ஏற்பட்டுள்ள மற்றொரு தொடர்பை இதனல் அறிந்தேன்; "சங்கு முழங்குந் தமிழ்நாடன்" என்று எப் பொழுதோ படித்த தமிழ்ப் பாட்டு ஞாபகத்துக்கு வந்தது.

நாங்கள் எங்கள் விடுதியை நோக்கித் திரும்புகையில் அச்சந் தின் பெயர் ஒரு வீட்டின் சுவரில் அடித்துள்ள இருப்புத் தகட்டில், "சக்காரிபாராச் சந்து" என்று பொறிக்கப்பட்டிருந்ததைக் கண் டேன். இச்சந்தின் பெயரும் "சங்கறுக்குஞ் சந்து" என்பது போலவே அமைந்திருக்கிறதே என்று எனக்குள் சொல்லி வியந்தேன்!

———



ஸ்ரீ சரத் சந்த்ர சட்டர்ஜி

(சென்ற இதழ் 92-ஆம் பக்கத் தொடர்ச்சி)

15

சைத்ரோத்ஸவம் ஓர் இடையூறுமின்றி முடிவெய்தியது. விழாவைப் பார்க்க வந்த ஜனங்கள் தத்தம் இருப்பிடங்களுக்குத் திரும்பிச் சென்றனர். கடைக்காரர்கள் கடைகளைக் கிளப்பிக் கொண்டு போய்விட்டனர். எண்ணெயில் சுடும் பக்ஷணங்களின் மணம் காற்று வாடையில் வருவது நின்றுவிட்டது. உத்ஸவ வேடிக்கைகளில் முக்கியமான வேலைகளையும் மறந்திருந்த குடிமக்கள் தம்முடைய தொழில்களில் இருமடங்கு ஊக்கத்துடன் இறங்கலாயினர். என்றும் போல இன்பதுன்பமென்னும் சுழலில் ஊராருடைய வாழ்க்கை ஊர்ந்து சென்றது. வேறுவிதமான புது மாறுதல் ஒன்றும் மக்களிடையே தென்படவில்லை. ஆனால் சண்டிகட் பைரவியின் கட்டான உடல் மட்டும் எதனாலோ மெலிந்து விளங்கியது. என்னவோ ஒரு மனவேதனையினால் அவள் உருக்குலைந்து போனாள். பழைய வனப்பு மீண்டும் அவளிடம் தோன்றவே இல்லை. மனவலிமை அழிந்து அல்லும் பகலும் அவள் ஒரு திகிலுக்கு ஆளானாள். உத்ஸவம் முடியும் வரையில் யாதொரு சச்சரவும் ஏற்படாதென்பதை மட்டும் ஷோடசி அறிவாள். அதற்குக் காரணம் கலகங்களுக்கு மூலகர்த்தாவாக நிற்கும் ஜனர்த்தன ராய் வீணாகத் தம்மேல் தெய்வக் குற்றத்தின் பொறுப்பைப் போட்டுக் கொள்பவரல்லவென்று அவளுக்குத் தெரியும். ஆனால் அதற்குமேல் என்ன நடக்குமென்பதை அவளால் எங்ஙனம் ஊகிக்க முடியும்? கலவரங்கள் மறைவில் குமுறுகையில் யாதோர் உபத்திரவமுமின்றி எல்லாம் சீரடைந்துவிட்டது போல் நாட்கள் மட்டும் கழிந்து கொண்டிருந்தன.

ஆனால் உண்மையில் எதுவும் சீர்படவில்லை. ரகஸ்யத்தில் தன் மேலுள்ள பகை விஷம் போல் பரவிக்கொண்டு வருவதைப் பற்றி ஷோடசிக்கு மாத்திரமா திகில்? எல்லோர்

மனத்திலும் இந்தக் கலவரம் ஊன்றி இருந்தது. தன்னைச் சேர்ந்த குடியானவர்களிடம் ஷோடசி செய்தியை எட்டவிட்டாள். கோயிலில் அந்திவேளைத் தீபாராதனைக்குப் பிறகு அவர்கள் வருவதாக இருந்தது. ஆனால் ஆராதனை முடிந்து இரவு மணி எட்டும் ஆயிற்று; ஒன்பதும் கழிந்து பத்தும் அடித்தாகிவிட்டது. எவரையும் காணவில்லை. தெய்வத்தைத் தரிசிக்க வந்தவர்கள் பிரஸாதத்தைப் பெற்றுக்கொண்டு ஒவ்வொருவராகப் போய்விட்டனர். வேளை அதிகமாகிவிடவே அர்ச்சகரும் மறைந்துவிட்டார். பணி செய்யும் ஆள் ஒருவன் மட்டும், தூக்கம் கண்களை அழுத்த, கொட்டாவி விட்டுக்கொண்டே ஷோடசியிடம் வந்து கோயிலைத் தாழிடச் சாவியைக் கேட்டான். 'இன்னும் காத்துக் கொண்டிருப்பதில் பிரயோஜனமில்லை. பயங்கரமானது என்னவோ நடந்திருக்கிறது. சந்தேகமில்லை' என்ற ஐயத்தினால் ஷோடசிக்கு நடுக்கமும் பரபரப்பும் ஏற்பட்டன. அதே சமயம் ஸாகர் அவள் எதிரே வந்து தோன்றினான். அவன் ஒருவன் மட்டுமே வந்திருப்பதைக் கவனித்து ஷோடசி ஆவலுடன், "இத்தனை நாழிகை ஏன், ஸாகர்? அவர்களெல்லாம் எங்கே? சமாசாரம் அவர்களுக்கு எட்டவில்லையா என்ன?" என்று கேட்டாள்.

"எட்டாமல் என்ன? அம்மா! ஒவ்வொருவர் வீட்டிற்கும் சென்று சொல்லிவிட்டு வந்தவனையிற்றே நான்" என்றான்.

ஷோடசிக்குச் சங்கை மூண்டது; "பின் ஏன் வரவில்லை அவர்கள்?" என்றாள்.

"இப்போதுதானே கொஞ்ச நாழிகைக்கு முன்பு கிராமப் பஞ்சாயத்துக் கூட்டம் கலைந்தது, அம்மா? அதனால்தான் சொன்ன சமயத்தில் அவர்களால் வரமுடியாமற் போயிருக்கக்கூடும். ஊரில் ஒருவர் பாக்கி இல்லை. எல்லோரும் போயிருந்தோம். விபின் கூடத் தன்னுடைய சிங்கக்குட்டிகளுடன் வேடிக்கை பார்க்கச் சென்றிருந்தான், அம்மணி. நான்கூடத் தூரத்திலிருந்தபடியே ஒரு சுவர் மேல் சாய்ந்தவண்ணம் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தேன்" என்றான் ஸாகர்.

"நீ அந்த மாதிரி ஒன்றியாகப் போயிருந்தது சுத்த முட்டாள் தனம். யாராவது உன்னைக் கவனித்திருந்தால்---?" என்றாள் ஷோடசி.

ஸாகர் சிரித்துவிட்டு, "நான் தனியாகப் போகவில்லை, அம்மா. இவன் என்கூடவே இருக்கும்போது எனக்கு என்ன பயம்?" என்று கூறிக்கொண்டே தன் இடது கையிலுள்ள பெரிய பாணத் தடியை ஆதரவுடன் வலது கரத்திற்கு மாற்றிக்கொண்டான்.

"ஆனால், ஸாகர், கோயிலில் அல்லவா பஞ்சாயத்துக் கூடுவ தாக இருந்தது?" என்றாள் ஷோடசி.

"ஆமாம், அப்படித்தான் சொல்லிக்கொண்டிருந்தார்கள், அம்மணி. ஜமீன்தாரின் போஜ்புரிப் பயில்வான்களுக்கும் இங்கேயே கூடவேண்டுமென்று ஆவல்தான். ஆனால் ஊரார் எவருக்கும் இஷ்டமில்லை. அவர்களுக்கு உள்ளுக்குள் உதைப்பு. நம்ம பக்கத்து ஆஸாமிகளுக்கு எங்களுடைய கைவரிசைகளைப்பற்றித் தெரியாம லிருக்குமா?" என்றான்.

கணநேரம் ஷோடசி பேசாமல் நின்றுவிட்டு அப்புறம் பேசத் தொடங்கினாள்:

"பஞ்சாயத்தார் என்ன முடிவுக்கு வந்தார்கள், தெரியுமா?"

"மங்களா என்ற அந்தப் பெண்ணுக்கு அபிஷேகம் செய்யப் போகிறார்களாம். உங்களுக்கும் இவர்கள் வஞ்சனை செய்யவில்லை. நீங்கள் காசிக்குப் போவதாயிருந்தால் செலவுக்கு ரூபாய் கொடுப்ப தாகவும் தீர்ப்பாயிற்று; அதுவும் நீங்கள் கேட்டுக்கொண்டால் தானும்" என்றான் ஸாகர்.

"யாரிடம் போய் யாசிக்க வேண்டுமாம் நான்?" என்று ஷோடசி விடுத்த கேள்விக்கு ஸாகர், "ஜமீன்தாரிடத்தில்தான் போலிருக்கிறது" என்றான்.

"அப்புறம் அவர்களுடைய கதி என்ன?—நிலங்களைப் பறி கொடுத்து நிற்பவர்களைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லையா பஞ்சா யத்தார்?" என்று கேட்டாள் ஷோடசி.

"அதைப்பற்றி நீங்கள் ஏன் அதைர்யப்படுகிறீர்கள்? இத்தனை நாட்கள் எப்படி நடந்து வந்ததோ அதற்கு மாறுக இனிமேல் நடக்கப்போவதென்னவோ இல்லை. அன்று குடிமக்க ளிடமிருந்து காணிக்கைத் தொகையை வசூலிப்பது கடினமான காரியமென்று கண்டுகொண்டு ஜமீன்தார் ஜனார்த்தன ராயிடம் விட்டுவிட்டான், அந்தப் பொறுப்பை. அவர் ஊரிலேயே இருப்ப வராயிற்றே; மெல்ல வசூல் பண்ணிக்கொள்ளுவார். அதைச் செய்ய ஸாமர்த்தியமும் உடையவர். ஜமீன்தாரனுக்கு என்னவோ கொஞ் சம் கைச்செலவுக்குக் கொடுத்துவிட்டுக் குடிகளிடமிருந்து அந்தக் காணிக்கை வரிக்காகப் 'பாண்டு' எழுதி வாங்கிக்கொண்டார். இல்லாவிட்டால் அவர்கள் இன்று பஞ்சாயத்தார் செய்த தீர் மானத்திற்கு உடன்படுகிறவர்களா என்ன?" என்றான்.

ஷோடசி இதைச் செவியில் கொண்டு சற்று நேரம் யோசனை யில் ஆழ்ந்துவிட்டு, "அப்புறம் நீங்கள் போகிற கதி?" என்றாள்.

ஸர்கார், "நாங்களா அம்மா?" என்று ஓர் அலக்ஷ்யச் சிரிப்புடன், "அந்தப் பெரிய மனுஷ்யர் இருக்கிறாரே, ஜனார்த்தனராய்; எங்களுக்குக்கூட ஏற்பாடு செய்திருக்கிறார், அம்மா! போலீஸ் இன்ஸ்பெக்டர் அவர் கைப்பிடியில்தானே! இந்த வட்டாரத்தில் எங்கேயாவது ஒரு கொலையோ, கொள்ளையோ நடந்து விட வேண்டும். ஆ! ஆளுக்குக் கொண்டாட்டந்தான். என்னையும் விபினையும் பிடித்து ஹிம்ஸை செய்ய வந்துவிடுவார்கள் போலீஸ் கிங்கரர்கள். அம்மணி, உங்களுக்குத் தெரிந்திருக்கலாம், நாங்கள் இரண்டு மூன்று தடவை 'மண்'ணுக்குப் போயிருப்பது. இந்தத் தடவை கட்டாயம் 'தண்ணீர்'மேலோ தூக்கிலோ எங்களை ஏற்றி விடுவார்கள். அவர்களும் எங்களை மாட்டிவிட என்ன சாக்குக் கிடைக்கும் என்றுதான் காத்துக்கொண்டிருக்கிறார்கள். சந்தர்ப்பம் கிட்டவேண்டியதுதான். நான் போனால் போகிறேன்; நல்ல வயசாள் நான். கிழவயதிலேனும் ஊருக்குத் திரும்ப முடியுமென்ற சிறு நம்பிக்கையாவது இருக்கும். ஆனால் கிழவனை விபின் தன் மக்களைப் பார்க்க வரவேண்டுமானால் மறு ஜன்மம் எடுத்தால்தான் முடியும்." இதைச் சொன்னதும் ஸர்கார் ஓயாமல் சிரித்தான்.

ஷோடசி பயந்துவிட்டாள். "ஏண்டாப்பா, ஆனால் இந்த மாதிரிகூடவா நடக்கும்? என்ன அநியாயம்?" என்றாள்.

"நடக்குமாவா? பட்டப்பகல்போலத் தெரிகிறதே, அம்மா, நெஞ்சிலுள்ள கரவு. சீக்கிரத்தில் நீங்கள் பார்ப்பீர்கள். ஜெயிலுக்கு வெளியே எங்களைப் பத்திரமாக வைத்துக்கொள்ள யாராலும் ஆகாது, தாயே. இன்னும் ஒரு மாஸந்தான். அவர்களுடைய சூழ்ச்சிகளுக்கு நாங்கள் ஆளாகவேண்டியவர்களே" என்றான் ஸர்கார்.

"ஆனால் பஞ்சாயத்துக் கூட்டத்திற்குச் சென்றவர்களின் நிலை என்னவாகும்?" என்றாள் ஷோடசி.

"ஐயோ, அதை ஏன் கேட்கிறீர்கள்? எங்களைவிட மோசமான நிலைமை அவர்களுக்கு ஏற்படப்போகிறது. அவர்களுக்கு அது வேண்டும், தாயே. சிறைக்குச் சென்றால் எங்களுக்கு இரண்டு உருண்டை களியாவது அகப்படுமென்ற நிச்சயமிருக்கிறது. அவர்களோ அதுகூட அகப்படாமல் தவிக்கப்போகிறார்கள். ஜனார்த்தனராயின் கீழ் எந்த ஆள்தான் வேலை செய்வான்? அவன் சம்பாதிக்கும் பணம் அவன் வயிற்றிற்கே பற்றாதே. வீடுவாசலைத் துறந்து அஸ்ஸாமிலுள்ள தேயிலைத்தோட்டத்திற்கோ, மலாய் நாட்டிலுள்ள ரப்பர்த் தோட்டத்திற்கோ கூலிகளாகச் சென்று செக்குமாடுகள்போல் உழன்று மடியவேண்டியதுதான். அவ்வளவு

சொல்வானேன்; நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம்: இந்த ஊரில் பழைய குடிகள் எத்தனைபேர் பயிர்செய்து சுகமாக வாழ்ந்திருந்தார்கள்? இப்போது அவர்கள் எல்லாரும் எங்கே? அவர்கள் வசித்து வந்த வீடுகள் குட்டிச்சுவர்களாக இன்னும் நிற்கின்றன. அவர்களில் சிலர் நிலக்கரிச் சுரங்கங்களில் வேலைசெய்ய ராஞ்சிக்கும், அஸ்ஸாம் தேயிலைத் தோட்டத்திற்கும் சென்றுவிட்டனர். எல்லாம் இந்த நயவஞ்சகப் பாவிகளினால்தான். சிறு வயதில் நான் பார்த்திருக்கிறேன்: ஒவ்வொருவருக்கும் நாலைந்து காணிகளுக்குக் குறைவில்லை. இரண்டு ஜதைக்குமேல் எருதுகள் உண்டு. வீட்டில் இரண்டு களஞ்சியங்களிலாவது நெல் இராது போகாது. ஆனால் இப்போது அவர்கள் இருக்கிற இடங்கூடத் தெரியவில்லை. பாதி ஏகதடி நந்தியும் பாதி ஜனார்த்தனராயுமே வாயில் போட்டுக் கொண்டார்கள், அம்மணீ!" என்றான்.

ஷோடசி நிலைத்துப்போய் ஸாகர் சொல்லும் வார்த்தை ஒவ்வொன்றும் உண்மையென்றே கண்டுகொண்டாள். அன்று கும்பலாகத் தன்னுடைய உதவியை நாடி வந்தவர்கள், இன்று மேலான பலசாலி ஒருவனுக்குப் பயந்து போய் அவளுக்கு விரோதமாகவே திரும்பிவிட்டனர். இன்று அவர்கள் ஆணையிட்டதெல்லாம் காற்றுகப் போய்விட்டது. பணக்காரனிடமிருந்தும், பலாத்காரம் செய்பவனிடமிருந்தும், நெறிதவறிய துன்மார்க்கர்களிடமிருந்தும் தப்பித்துக்கொள்ள மனவலிமை இழந்தவர்களால் முடியவே முடியாது. கஷ்டம் வரும்போது இவர்கள் முறையிட்டுக்கொண்டாலும் அது பயனற்றதாகும். ஆண்டவனை இவர்கள் எவ்வளவு உருக்கமாக அழைத்த போதிலும் அவர் காதில் கொள்ளார். உலகில் இம்மாதிரியான அடிமைகளை நிறைந்து விளங்குகிறார்கள். பலமுள்ளவன் பாதங்களில் தம்முடைய அறிவையும் தர்மத்தையும் பௌருஷத்தையும் பறிகொடுத்துவிட்டு, உயிர்வாழ்வதே பெரிய லக்ஷ்யமென்று திருப்தியுடன் திரும்பும் ஹீனர்களின் வாழ்க்கை மானக்கேடானது, அதமமானது. உலகத்தில் இந்தப் பலஹீனமே அதிகமாகத் தென்படுகிறது. மனிதனை வன்மையற்றவனாக்கிய இப்பெரிய அநீதியை வேரோடு ஒழிக்கச் சக்திவாய்ந்ததோர் கருவி பிரபஞ்சத்தில் கிடையாதா? இதே ஸாகர் ஒரு சமயம் பலாத்காரத்தினால் நசுக்கப்பட்டவர்கள் பக்கமாக நின்றான். பலவானை இம்மாதிரி அவமதித்ததற்காகத் தண்டனையும் கிடைத்தது அவனுக்கு.

ஷோடசி திடீரென ஸாகரை நோக்கி, "உனக்கு இதெல்லாம் எப்படித் தெரியவந்தது?" என்று கேட்டாள்.

"ஜமீன்தாரே சொல்லக் கேட்டேன், அம்மணீ" என்றான் ஸாகர்.

"எல்லாம் அவருடைய முன்யோசனையின்பேரில் நடக்கிறாப் போல் தெரிகிறது?"

ஸாகர் சற்று யோசனை செய்துவிட்டு, "எனக்கு எப்படித் தெரியும் அம்மா? ஜனார்த்தனராய்கூட இதில் கலந்திருப்பதாக எனக்குப் படுகிறது" என்றான்.

ஷோடசி கூகணநேரம் நிதானித்துவிட்டு, "சரி ஸாகர், ஜமீன்தார் என்னை ஏன் ஒன்றும் செய்யவில்லை? நான் ஓட்டைக் குடிசையில் யாதொரு துணையுமின்றி இருப்பது அவருக்குத் தெரியுமே; எனக்கு எந்தத் தீங்கையும் இழைக்கலாமே" என்றாள்.

"யார் சொன்னது அம்மா, உங்களுக்குத் துணையில்லை யென்று? என்னைப்பற்றி நானே பெருமை அடித்துக்கொள்ளக் கூடாதென்று எனக்கு வித்தை கற்றுக்கொடுத்தவர் சொல்லியிருக்கிறார், அம்மா!" இதைச் சொல்லும்போது ஸாகரின் கடின மான வலதுகையின் ஐந்து விரல்களும் பாணத்தடியை எஃகுக் குறடுபோல் அழுத்தமாகக் கவ்விக்கொண்டன. "இதற்கு அஞ்சிப் பஞ்சாயத்தார் கோயிலின் எல்லையைக்கூட மிதிக்கவில்லை அன்று. அம்மணீ! ஹரிஹர ஸர்தாரின் தம்பி பிள்ளையான ஸாகரைப்பற்றித் தெரியாதவனே இல்லை, இந்தப் பிராந்தியத்தில். உங்கள்பேரில் கை வைக்கக்கூடியவன் அக்கம் பக்கத்து ஐம்பது கிராமங்களில் தேடிப் பார்த்தால்கூட அகப்படமாட்டான்" என்றான்.

ஷோடசியின் இருகண்களும் சட்டென ஜ்வலித்தன; "ஸாகர், வாஸ்தவமாகவா சொல்கிறாய்?" என்றாள்.

ஸாகர் தரையோடு வணங்கி, தன் கையிலுள்ள நீண்ட கழியை ஷோடசியின் காலடியில் வைத்துவிட்டு, "தாயே, என் வார்த்தை பொய்யாகாதிருக்கும்படி ஆசீர்வாதம் செய்யுங்கள்" என்றான்.

ஷோடசியின் கண்களில் சிறிது நேரம் சாந்தமான பாவம் தோன்றி மறுகணமே மறைந்து முன்னிருந்த ஒளியே திகழ்ந்தது. "ஸாகர், நீ உயிரைத் திருணமாக நினைப்பவனென்று எனக்கு முன்னமேயே தெரியும்" என்றாள்.

"அதை நான் சொல்லவேண்டியதில்லை" என்றான் ஸாகர்.

"உயிரைவிடத்தான் உன்னால் முடியும். வேறு உயிரை வாங்க உன்னால் ஆகுமா?" என்றாள் ஷோடசி.

"உத்தரவு கொடுங்கள். இன்று இரவே எத்தனை தலைகள் உருள்கின்றன என்று பாருங்களேன்." இதைக் கூறியதும் ஸாகர் ஷோடசியையே ஊன்றிக் கவனிக்கும்போது வியப்பும் பயமும் ஒருங்கே குடிகொண்டவளாய் அவள் பேச்சற்று நின்றாள். ஸாகருக்கு இயல்பான அந்த இளகிய பார்வை எங்கோ போய்விட்டது.

ஒளியற்றுச் சுருங்கி ஆழ்ந்து விளங்கியது அவனுடைய கண்ணின் நோக்கு. முன்புள்ள ஸாகராக இராமல் வேறு எவனுகவோ தோற்றினன். அவனுடைய குரலில் கொடூரம் ஒலித்தது. "இன்னும் ராத்திரி அதிக நேரம் ஆகவில்லே. நாழிகை இருக்கிறது. அம்பிகையின் சந்நிதி இன்னும் திறந்தபடியே இருக்கிறது. உங்களுடைய கோரிக்கையைத் தெரிந்துகொண்டேன். அதன்படியே நடக்கத் தயார். இந்தப் பாபத்தைச் செய்தவர்களைத் தீர்த்துவிடுகிறேன். காலையில் உங்களுக்குச் சமாசாரம் வரும்; ஸாகர் ஸர்தார் வீண் வீரூப்புக்காகச் சொல்லவில்லே யென்று தெரிந்துகொள்வீர்கள்" என்றான்.

அவனுடைய மூதாதைகள் கைப்பழகிய அந்த நீண்ட பாணத்தடி ஷோடசியின் காலடியிலேயே அதுவரை வீழ்ந்திருந்தது. குனிந்து அதை எடுத்துக்கொண்டு நின்றது ஸாகரின் நெடிய வடிவம். ஷோடசி என்னவோ பேச ஆரம்பிக்கையில் அவளுடைய இதழ்கள் துடித்தன. விபரீதமான காரியத்திலிருந்து ஸாகரைத் தடுக்க வாயெடுக்கும்போது குரலே எழும்பவில்லே. பூகம்பகாலத்தில் கடல் அலேப்பதுபோல் ஷோடசியின் மார்பும் பொருமிற்று, பல கலவரங்களினுல். சுழலும் அவளுடைய மூளேக்கு எதிரே நிற்கும் ஸாகர் ஒரு பயங்கரக் கொலேயாளியாகவே தோற்றினன். ஷோடசியின் கண்களுக்குச் சுற்றியுள்ளவை யாவும் மெல்ல மங்குவதுபோலிருந்தன. ஸாகர் தனக்கு அடிபணிந்துவிட்டு வேகமாக வெளியே சென்றது மட்டுமே அவளுக்குத் தெரியும். அதுவரையில் தான் அவளுக்கு நினேவு இருந்தது.

16

ஷோடசிக்கு ஸ்மரணை வந்தபோது ஸாகர் அவ்விடத்தில் இல்லே.

கோயில் பணியாள் அவள் அருகில் வந்து, "அம்மா, கோயில் கதவை மூடிவிடட்டுமா?" என்றான் மெதுவாக.

"செய்" என்று உத்தரவிட்டு அவள் சாவியைப் பெற்றுக் கொள்வதற்காக அவ்விடத்தில் நின்று கொண்டிருந்தாள். சிறு வயது முதல் அவளுக்கு ஏதாவது ஒரு கவலே உண்டாகாமல் போகவில்லே. தொடர்ச்சியாகப் பத்துநாள் அவள் நிம்மதியுடன் காலம் கழித்தது கிடையாது. எந்த அசுப வேளேயில் பீஜ்காம் புதிய ஜமீன்தார் ஊரில் காலே எடுத்து வைத்தானே அப்பொழுதிலிருந்து ஒவ்வொன்றுக உபத்திரவங்கள் வந்து அவளுடைய அமைதியைக் கெடுத்து அவளேப் பல இக்கட்டுகளுக்கு உட்படுத்தின; போதாக

குறைக்கு இன்று ஸாகர் அவளை இன்னும் திகிலடையும்படி செய்துவிட்டான். இன்றிரவே ஏதாவது அடாத காரியம் அவன் செய்யமாட்டா னென்பது என்ன நிச்சயம்? கொலை, ரத்தக்களரி, ஹிம்ஸை எதையும் புரிவதற்குப் பல அனுகூலங்களும், ஆட்களும், ஆயுதங்களும் உடைய ஒரு மஹாபாதகனைத் தகர்த்தெறிய ஸாக ரின் பாணத்தடிக்கு வன்மை யுண்டென்று அவளுக்குத் தோன்ற வில்லை. எல்லா இடையூறுகளும் எதிர்பாராதவண்ணம் தெய்வ பலத்தினால் விலகுவதை அவள் அறிந்தும் அச்சத்தினால் அவளு டைய இதயம் திக் திக்கென்று அடித்துக் கொண்டது. கோயிற் கதவைப் பூட்டிவிட்டுப் பணியாள் சாவிக்கொத்தை ஷோடசியிடம் சேர்ப்பித்து, "இரவு வெகு நேரமாகிவிட்டதே. துணைக்கு நான் வரட்டுமா அம்மா?" என்றான்.

ஷோடசி வேறு மனத்தினளாய், "எங்கே?" என்றாள்.

"உங்களை வீட்டுவரை கொண்டுவிடத்தான்" என்றான் பணியாள்.

"கொண்டு விடவா? வேண்டாமப்பா" என்று கூறி ஷோடசி மெல்ல மெல்ல ஸ்வப்னத்தில் நடப்பவள் போல் வெளியே சென் றாள். வழியில் அதிக ஜாக்ரதையாக எப்போதும் செல்பவள் இன்று வேறு கவனமாகவே இருந்தாள். அந்தகாரம் இறுகிய இர வானாலும், மூன்றிய தினங்களில் இருந்த மப்பு மந்தாரமில்லை. பெரு வாரியில் அமிழ்ந்து ஈரக்கூந்தலுடன் மாசற்று எழுந்து நிற்கும் தெய்வப்பாவை யென விளங்கியது கிருஷ்ண பக்ஷத்தின் நிர்மலமான ஆகாயம். ஆலயத்திலிருந்து ஷோடசியின் குடில் கொஞ்சம் தொலைவுகூட இல்லை. கோணல் மாணலாகச் செல்லும் ஒற்றையடிப் பாதையின்மீது எண்ணற்ற நக்ஷத்திரங்களின் தண்ணொளி விழுந்து கொண்டிருந்தது. அதன் உதவியைக்கொண்டே சந்தடி செய்யாமல் ஷோடசி தன் அகத்தை அடைந்தாள்.

சித்திரை மாதக் கடைசி. ஊரில் கூலியாட்களே அகப்படாத காலம். இருந்தும் ஷோடசியினிடம் பற்று உடையவர்கள் சிலர் அவளுடைய குடிலைச் சீர்திருத்தி அதைச் சுற்றிலும் மூங்கிற் படல் வேலியும் அமைத்துச் சமையல் செய்வதற்குத் தனியாகவே ஒரு சிறு கூரையும் இறக்கிவிட்டுச் சென்றனர். கதவில் தொங்கிக் கிடந்த பழைய தாழ்ப்பாள் போய்ப் புதியதொன்று வந்தது. மண் சுவரில் இருந்த வெடிப்புக்கள் அடைபட்டு விளங்கின. குடிலின் உட்புறம் வசிப்பதற்குத் தகுதியுடையதாக்கப்பட்டது. தாழ்ப் பாளைத் திறந்துகொண்டு ஷோடசி உள்ளே நுழைந்து, சற்று நேரம் தயங்கிவிட்டு மண்விளக்கை ஏற்றித் தரை மீது வைத்தாள்.

என்றும் போல் அவள் செய்யவேண்டிய காரியங்கள் அநேகம் இருந்தன. இராத்திரி உணவு சமைத்துக் கொள்ளும் தொல்லை ஷோடசிக்கு இல்லை. கோயிலிலிருந்து கிடைக்கும் பிரஸாதமே போதுமானதாய் இருந்தது. ஆனால் கோயிலுக்குப் போய்த் திரும்பி வந்த பிறகுதான் சில பூஜாக்கிரியைகளைச் செய்ய அவளுக்கு அவகாசம் ஏற்படும். கோயிலில் இவற்றை முடித்துக்கொள்ளும் வழக்கம் கிடையாது. தன் சொந்தப்பூஜையைத் தனிமையிலும் கழிந்த நேரங்களிலும் நிறைவேற்றவேண்டுமென்பதே அவளது விருப்பம். அர்த்தராத்திரிவரை ஏதாவது கிரந்தத்தைப் பாராயணம் செய்து கொண்டிருப்பாள். இவை யாவும் அவளுடைய நித்திய நியமங்கள். இந்தப் பழக்கவழக்கங்களில் ஊறியவளானதால் இன்று தன் காரியங்களைக் குறையாக விட்டுவைக்க ஷோடசியின் மனம் இடம் கொடுக்கவில்லை. ஆனால் அவளுடைய அவயவங்கள் தம் சுறுசுறுப்பை மறந்து நின்றன. வாயிற் கதவு மூடப்படாமல் திறந்தபடியே இருப்பதைக் கவனித்தும் எழுந்து அதை மூடக்கூட அவளுக்குச் சோம்பலாக இருந்தது. ஜடம்போல், மூளையே வேலை செய்யாமல் விளக்கின் எதிரே உட்கார்ந்திருந்தாள்.

அவள் ஸாகரைப் பற்றி எண்ணமிட்டுக்கொண்டிருந்தாள். கோயிலுக்குச் சமீபத்தில் வசிக்கும் கீழ்ஜாதியைச் சேர்ந்த இந்த எளிய மக்களை அவள் பால்யகாலம் தொட்டு அன்புடன் நோக்கி வருகிறாள். பெரியவளாகியதும் வறுமையில் உழலும் இவர்களுக்கு எவ்வளவோ அனுகூலங்கள் செய்து இவர்கள் துக்கங்களைப் போக்கி இருக்கிறாள். ஒரு தாய் குழந்தையினிடம் காட்டும் ஆதரவுக்குச் சமமான பற்றுதல் இவர்களிடத்தில் கொண்டிருந்தாள். சண்டிகட்டின் பழைய குடிகள் இவர்களே. ஒருசமயம் வீடும் நிலமும் நீரும் வைத்துக்கொண்டு வாழ்ந்தவர்கள். ஆனால் இன்று இவர்களில் பெரும்பான்மையோர் ஓர் உரிமையும் இராது நிற்கின்றனர். பிறருடைய நிலங்களில் கூலிக்கு வேலைசெய்து பிழைத்து வருகிறார்கள். ஊரில் முக்கால்வாசி நிலங்கள் ஜனர்த்தனராய் அல்லது ஜமீன் காரியதரிசிகள் யாருக்காவது சொந்தமாக இருந்தன. முன்பு இருந்த பைரவிகளின் ஆட்சியில் சண்டிகாதேவிக்கு ஏராளமான பூஸ்திதி உண்டு. அவர்களெல்லாம் தங்கள் இஷ்டப்படி நிலங்களை வருஷந்தோறும் பலருக்குக் குத்தகைக்கு விட்டு வந்தார்கள். அதனால் குடியானவர்களிடையே அடிதடிச் சண்டைகூட ஏற்பட்டுவிடும். நிலங்களிலிருந்து மாசூலும் குறைவாகவே வரும். லாபம் கிட்டாது. குடியானவர்கள் பல சாக்குப் போக்குக்களைச் சொல்லித் தெய்வத்திற்குச் சேரவேண்டிய பங்கிலும் கொள்ளை இட்டனர். ஷோடசி, பைரவிப்பதவிக்கு வந்தவுடன்

பராதீனமான இந்த எளிய வகுப்பினரைக் கைதூக்கிவிட்டாள். பக்கிரி பாபாவின் யோசனைப்படி ஆளுக்குத் தகுந்தவாறு இவர்களுக்கு நிலங்களைப் பகிர்ந்து பயிரிடக்கொடுத்தாள். இந்த விஷயத்திலிருந்துதான் ஜமீன்தாரர்கள், ஏகதடி நந்தி முதலியோருக்கும் இவளுக்கும் விரோதம் முற்ற ஆரம்பித்தது. மேலும் மேலும் சூழ்ச்சிகள் பல புரிந்து ஷோடசியை இந்தக் கேடான நிலைக்குக் கொண்டு வந்து நிறுத்திவிட்டார்கள். பகைமூண்ட சமயம் ஸாகரும் ஹரிஹரனும் சிறையில் கிடந்தனர். விடுபட்டதும் முதன்முதலில் அவர்கள் ஷோடசியைக் காணக் கோயிலுக்கு ஓடிவந்து தலை தரையோடு படும்படி அவளை வணங்கி, "அம்மா, எங்களுக்கும் ஒரு வழி செய்யக் கூடாதா? நாங்கள் கரையேறுது இப்படியே எத்தனை நாட்கள் அழுந்திக் கிடப்பது? தாயே" என்று வேண்டிக்கொண்டனர்.

பெரிய குற்றங்களைச் செய்துதானே அவர்கள் சிறைக்குச் சென்றார்கள் என்ற கோபம் ஷோடசிக்கு. "உங்களுக்குக் கரையேறவா வழி இல்லை? ஜெயிலைப் பின் யாருக்காகக் கட்டிவைத்திருக்கிறார்கள், அப்பனே? உங்களைப்போன்ற புண்யாத்மாக்களுக்காகத்தான்!" என்றாள்.

ஸாகர் முகத்தை வேறு புறமாகத் திருப்பிக்கொண்டான். ஆனால் அவனுடைய சிரம்மட்டும் கர்வத்துடன், குனியாமலே நின்றது. ஆனால் கிழ ஹரிஹரன் கும்பிடுபோட்டு, "தாயே, நாங்கள்தாந் துஷ்டப் பிள்ளைகள். ஆனால் எங்களை ஆதரிக்கும் தாயான நீங்களுமா இரக்கமற்றவர்களாக இருக்கவேண்டும்?" என்று சமத்காரமாகக் கேட்டான்.

ஷோடசியின் மனம் சற்று இளகியது. "இந்தமாதிரியாகப் பேச எப்போது கற்றுக்கொண்டாய்? நீயோ கிழவன். காடு வாவா வென்று கூப்பிடுகிறது. உன்னுடைய கூட்டாளிக்கு மட்டும் இறுமாப்பு இன்னும் விடவில்லையே. மூஞ்சியை அந்தப் பக்கமே திருப்பிக்கொண்டிருக்கிறானே. என்றைக்குத்தான் அவன் ஸ்திதி அவனுக்குத் தெரியப் போகிறதோ?" என்றாள்.

ஹரிஹரன் உடம்பை ஒருதரம் பார்த்துக்கொண்டு, "கிழவனுகவா போய்விட்டேன்? அம்மா. ஆமாம், தலை நரைத்துவிட்டது" என்றதும் அவன் மறைவாக இளித்ததைப் பார்த்து ஸாகரும் சிரித்துவிட்டான். ஸாகரைக் கிழவன் நோக்கியபோது, "நான் எல்லாம் சரிப்படுத்திவிட்டேன். உன்னுடைய புஜபலம் எல்லாவற்றையும் சற்றுக் கட்டிவை, அப்பனே. அவளிடத்தில் அடங்கியொடுங்கித் தவற்றை ஒப்புக்கொள்வது உனக்கு நல்லது" என்று சொல்லும் குறிப்பைக் கொண்டன அவனுடைய கண்கள்.

"அவனுக்கு இறமாப்பு இல்லை, அம்மணி; ரோஷந்தான். ஸாகர் எப்போதும் ஒருவர் சொத்தைத் திருடியதோ பறித்ததோ கிடையாது. அவன் எந்தப் பாபத்தையும் அறியான். அனுவசிய மான பிகுவுகள் காட்டித்தான் இப்படிக் கெடுகிறான்" என்றான் கிழவன்.

ஷோடசிக்கு இந்தச் சமாசாரம் ஆச்சர்யத்தை விளைவித்தது. "ஆனால் குற்றம் எதுவும் செய்யாமலா தண்டனைக்கு ஆளானன்? சுத்தப் பொய். எல்லோருக்கும் தெரியும், அவன் செய்த காரியம். நீ எனக்குத் தெளிவிக்க வந்தாயோடா?" என்று கூறும்போது அவளுடைய குரல் மிகவும் கடினமாகவே தொனித்தது.

கிழவனை ஹரிஹரன் என்னவோ பேசப்போகையில், ஸாகர் அவனைத் தடுத்து, "ஏழைசொல் அம்பலமேறுமா, அம்மணி? நாங் கள் சொல்வது உண்மையாயிருந்தாலும் அதை நீங்கள் நம்பமாட்டீர் கள். பெரியமனுஷ்யர்களென்று சொல்லிக்கொள்பவர்கள் எங்களு டைய சொத்தையெல்லாம் அபகரித்துக்கொண்டார்கள். அவர்களு டைய பேச்சு வெளியாருக்கு உண்மையாகிவிட்டது. நீதிஸ்தலத்தில் மனமாறப் பொய் ஸத்யம் செய்தார்கள். எங்களை மண்ணுக்கும் அனுப்பினார்கள். ஜட்ஜ் துரை இருக்கும் நீதி ஸ்தலத்திலிருந்து இந்தச் சண்டி ஆத்தாள் கோயில்வரை ஈனர்களான எங்கள் வார்த் தைகளைச் சட்டைசெய்து கேட்பவர் எவரும் இல்லை, தாயே!—நாம் போகலாம் வா அண்ணே" என்று கூறிவிட்டு அவன் சட்டெனப் பைரவியின் தாள்களில் பணிந்து அவளுடைய பாததூளியைத் தலைமேல் வைத்துக்கொண்டு அகன்றான்.

ஹரிஹரனும் நமஸ்கரித்துவிட்டு வெட்கம் தோய்ந்த குரலில், "கோபித்துக்கொள்ளவேண்டாம், அம்மா. அவன் மட்டிப் பையன். அவன் பேச்சை யாரும் சகித்துக்கொண்டு கேட்கமாட்டார்கள். மூர்க்கம்! மூர்க்கம்!" என்று சொல்லி ஸாகரைப் பின்தொடர்ந் தான்.

இவர்கள் கீழ் ஜாதியைச் சேர்ந்தவர்களே; களவாடுபவர்களே. ஆனால் ஷோடசி இவ்விருவரையும் மறையும்வரை பார்த்துக் கொண்டே நின்றாள். வீர்யமற்று, அவமானம் அடைந்து, வீழ்ச்சி யுற்றிருக்கும் வங்காள தேசத்தில் திடகாத்திரத்துடன் எதற்கும் அஞ்சாத பலசாலிகள் இருவர் இருப்பதைக் கண்டு ஷோடசி அளவற்ற பூரிப்புக்கொண்டாள்.

மறுநாளே ஷோடசி ஸாகரை வரவழைத்து, "நேற்று உங்கள் இருவரையும் அநியாயமாக வைதுவிட்டேன். என்வசம் பத்துப் பன்னிரண்டு காணி நிலங்கள் இன்னும் யாருக்கும் விடாமல் இருக் கின்றன. நீங்கள் இருவருமாகப் பங்கிட்டுக்கொண்டு அவற்றை

உழுது பயிரிட்டு ஜீவியுங்கள். கோயிலுக்குச் சேரவேண்டியதை மட்டும் நியாயப்படி தந்துவிடுங்கள். இனிமேல் தீயவழிகளில் நீங்கள் செல்லக்கூடாது. இந்த நிபந்தனையின்பேரில்தான் நிலங்களை விடுவேன்" என்றாள்.

அன்றுதொட்டு ஸாகரும் ஹரிஹரனும் அவளுடைய அடிமைகளாயினர். எப்போதும் நிழலைப்போல் அவளைப் பின்பற்றி வந்தனர். ஆபத்து நேர்ந்த சமயங்களில், தங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல் அவளை ரக்ஷிக்க முன்வந்தனர். இந்தப் பாழும் குடிசையில், ஷோடசி தன்னந்தனியாக இருந்தாலும் எவரும் அவளை நெருங்க அஞ்சினர். எதற்குப் பயந்து பின் நின்றனரோ, ஷோடசி அதை அறியாள். அந்த ஸாகர், இன்று அவளுடைய கண்களுக்குத் தோன்றியவிதத்திலிருந்து அவளுக்கு அவன்பால் இருந்த விசுவாஸமெல்லாம் அடியோடு போய்விட்டது. அவன் கொள்ளை அடிப்பவனா இல்லையா என்பதைச் சொல்வது கடினம்; ஆனால் சந்தர்ப்பம் ஏற்பட்டால் அவனால் ஆகாதது ஒன்றுமில்லையென்றே சொல்லவேண்டும். அதற்குத் தக்க உத்ஸாஹமும் மூர்க்கமும் இன்று அவனிடத்தில் தெளிவாகத் தோன்றின. ஒரு வெறி வருவதுதான் தாமதம்; எந்த வேளையிலும் விபரீதங்களைச் செய்ய அவன் தயாராக நிற்பவன் என்பதில் ஷோடசிக்கு எள்ளளவும் ஐயமே இல்லை.

கிழிந்துபோன காகிதத்துண்டொன்று கீழே ஒரு மூலையில் கிடந்தது. வேறு விஷயங்களில் மனத்தைச் செலுத்தியவளாய் ஷோடசி அதை எடுத்துப்பார்க்கையில் விளக்கு வெளிச்சத்தில், அது அன்றுதான் ஹைமாவுக்குத் தான் முதலில் எழுதிய கடிதத்தின் ஓர் அம்சமென்று தெரிந்தது. என்ன விஷயம் எழுதுவதென்று தோன்றுதவளாய்த் தான் முதலில் எழுதிய அரைகுறையான கடிதத்தைக் கிழித்துவிட்டு மற்றொன்று எழுதித் தபாலில் அனுப்பிவிட்டாள். இரவு வெகுநேரம் கண்விழித்து எழுதிய கடிதத்தை மடித்து உறைக்குள் போடும்போது ஏனோ இதை எழுதினோமென்றுகூட அவளுக்குப் பட்டது. பிறரிடம் தன்னுடைய குறைகளைச் சொல்வது சரியல்லவென்று அவள் நினைத்தாள். ஆனால் அடுத்ததினம் தபாலில் அனுப்புகையில் அவள் திரும்பி ஒருமுறை அதைப் படிக்கவே இல்லை. ஒருவேளை படித்தால் அதையும் கிழித்து எறியவேண்டுமென்ற எண்ணம் வருமோ, அப்புறம் ஹைமாவுக்குக் கடிதம் எழுதவே முடியாமல் போய்விடுமோவென்ற திகில். அவள் இதுவரை மறந்துபோன அந்தக் கடித விஷயம், காகிதத்துண்டைப் பார்த்ததும் கவனத்திற்கு வந்தது. ஹைமாவுக்கு எழுதிய ஒவ்வொரு வாக்கியமும் தன்

அகக்கண்முன்பு வருவதைப் பார்த்து அவள் வெட்கம்கொண்டாள். விஷயத்தைப் பிரமாதமாக எண்ணிக்கொண்டு, தனக்கு உதவி செய்ய வந்துவிடப்போகிறார்களே என்ற அச்சம் ஒருபுறம். ஹைமவதியையும், அவள் கணவனையும் நினைக்கும்போதெல்லாம் ஷோடசி திடமழிந்து நிற்பாள். ஒழுங்காக அவர்கள் வாழ்க்கை நடத்தும் விதத்தை அவள் முற்றும் உணராதவள். இருந்தும் எப்படித் தன் எண்ணங்களைக் கடிதத்தில் எழுத முடிந்தது? எவ்வாறு தனக்கு இருக்கும் அளவற்ற காரியங்களின் நெருக்கத்தில் இந்த அபூர்வக் கற்பனைகளெல்லாம் மூண்டன? ஹைமாவைப் பற்றியும், நிர்மல் பாபுவைக் குறித்தும் சிந்தனை வெள்ளம் வரும் போது தனக்கு இயல்பாக உள்ள அடக்கத்தையும், கடினத்தையும் மீறி வெட்கம் தன்னிடம் என் குடிகொள்ளவேண்டும்?—இந்தக் கேள்விகளுக்கு அவள் மனம் யாதொரு ஸமாதானமும் தரவில்லை. தன் மனம் எதன்மேலோ மயல்கொண்டு திரிவதை அவள் உணர்ந்தாள். அதனால் அவளுக்கு அச்சமும் அதிகரித்தது. தனக்குள்ள சக்தியெல்லாம் உபயோகித்து மனம் வேறு திக்குச் செல்வதைத் திருப்பவும் முயன்றாள். உள்ளத்தில் பெருக்கெடுத்தோடும் பெரும் சுழலிலிருந்து மீளக் கீழே கிடந்த அந்தக் கடிதத்தின் பகுதியைச் சுக்கல் சுக்கலாய்க் கிழித்தெறிந்துவிட்டுத் தன்னை ஸ்திரப்படுத்திக்கொண்டாள் ஷோடசி.

'எதன்பொருட்டு ஹைமாவையும் அவரையும்பற்றி நான் ஸ்மரிக்கவேண்டும்? எதற்காக அவர்களுடைய உதவியை நாடுவது? அப்படி அவர்கள் உதவிபுரிந்தாலும் நான் அதைப் பெற்றுக் கொள்வது சரியன்று. இந்தப் பைரவியின் பதவியில் உயர்ந்தது என்ன இருக்கிறது? அதன் மோகம் என்னை ஏன் விடாமல் பிடித்துக்கொண்டிருக்கிறது? யார் வந்தால் என்ன, அந்தப் பதவிக்கு? எல்லோரும் கொள்ளை அடிப்பவர்களே. அதிகமான பலம் உடையவர்களே பெரிய திருடர்கள். சமயம் வாய்த்தால் ஏமாந்தவனுடைய நெஞ்சை அழுத்தியும் விடுவார்களே. இவ்வளவுதான் உலகம். மனிதனுடைய செயல்கள் யாவும் இப்படித்தான் இருக்கின்றன! ஹிம்ஸிப்பவனுக்கும், ஹிம்ஸிக்கப்படுவோருக்கும் இடையில் வளரும் விரோதமே எனக்கு இரவும் பகலும் பயத்தைத் தருகிறது! எதற்காக நான் இந்த விஷயங்களில் தலையிட்டுக்கொண்டு சிரமப்பட வேண்டும்? பைரவியின் பதவியைத் துறப்பது கடினமா என்ன?' என்று தன் நெஞ்சோடு சொல்லிக்கொண்டாள். பைரவியின் ஸ்தானத்தை விட்டொழிப்பது கடினமான காரியமல்லவா? அடுத்தினமே, ஜனார்த்தனராய்க்கும் ஏககடிக்கும் தான் பதவியைத் துறந்துவிடுவதைப்பற்றிக் கடிதமூலமாக அறிவிக்க உத்தேசித்தாள்.

பைரவிக்கு உள்ள சகல உரிமைகளையும் மனப்பூர்வமாகத் தன்னால் விடமுடியும், அதனால் தனக்கு யாதொரு கஷ்டமும் இல்லையென்ற உறுதி அவளுக்கு ஏற்பட்டது.

ஷோடசி எழுந்து நின்றாள். மூலையில் ஓர் இடத்தில் பேனு மசிக்கூடு காகிதமெல்லாம் வைத்திருந்தாள். கையை நீட்டி அவற்றைத் தன் சமீபமாக இழுத்துக்கொண்டு கடிதமெழுத முனைந்தாள். துரிதமாக இரண்டொரு வரிகளை வரைந்ததுமே அவளுடைய பேனு மேலே ஓடாமல் நின்றுவிட்டது. ஹரிஹரனும் ஸாகரும் அவளுடைய நினைவில் தோன்றினர். கொள்ளையிட்டு ஒருவரையொருவர் அடித்துத் தின்னும் இந்த உலகத்தில் திருடர்களாயிருந்தாலும் அவ்விருவருமே இன்னும் அவளை உதறிவிடவில்லை. உடனே தன்னுடைய நிலைமை கவனத்திற்கு வந்தபோது, 'அப்புறம் என் கதி என்னவாகுமோ? நிற்பதற்குக்கூட நிழல் இல்லையே' என்ற சங்கை மூண்டது. நேற்று அவளை எதிர்பார்த்து நின்றவர்கள் இன்று பஞ்சாயத்தாரின் மிரட்டலுக்குப் பயந்து விலகி விரோதிகளுடன் சேர்ந்து கொண்டார்கள். அது எப்படியாவது போகட்டும். இந்தச் சின்ன ஜாதியினர்மேல் அவளுக்கு யாதொரு மனக்கசப்பும் இல்லை; ஏகடி, ஜனர்த்தன ராய், சிரோமணி, சொந்தத் தகப்பனை தாராதாஸ், அந்த ஜமீன்தாரன் இவர்கள் பேரில்தான். அதுவும் போகட்டும். பழைய கதையைத் திரும்பவும் நினைத்துக் கொள்வதில் பலனில்லை யென்று அவளுக்குத் தோன்றியது.

இந்த மனக்கவற்சிக் கிடையில் அவளுக்குப் பக்கிரி பாபாவின் கவனம் வந்தது. அவர் என்ன எண்ணிக்கொண்டோ திடீரென மறைந்து விட்டார். அவர் எந்தக் காரணத்தைக் கொண்டும் யாரிடமும் விரோத பாவம் கொண்டதே இல்லை. யாருக்கும் எந்த விதமான தீங்கும் செய்தது கிடையாது. இதற்கு முன்பு அவர் சொல்லாமல் போயிருக்கிறார். எந்த அன்பர்களுக்கும் தாம் போவதை அறிவிப்பது அவர் வழக்கம் அன்று. அவர் திடீரென இப்படி மறைந்ததனால் ஷோடசியின் உள்ளத்தில் மட்டும் ஒரு வேதனை. இப்படிப் போவதைப்பற்றி ஷோடசி எப்போதாவது கேட்டால் அவர், "எனக்கும் என் சரீரத்திற்கும் உள்ள உறவை நான் வெட்டிவிட முயல்கிறேனே ஒழிய இதரர்களிடமிருந்தல்ல, அம்மா. உலகத்தவர் மேலுள்ள பாசத்தை என்னால் விலக்கிக் கொள்ள முடியவில்லை. மனிதர் மத்தியிலேயே நான் இருக்க விரும்புகிறேன். நீ கூட உன் உடலைத் தெய்வத்திற்கு அர்ப்பணம் செய்திருக்கிறாய். எதற்கும், முன்னால் இந்த வார்த்தையை நீ மனத்தில் கொள்ளவேண்டும்: எந்தக் காரணத்தினாலும் உடல்

உனக்குச் சொந்தமென்ற மருள்கொண்டு தவறு செய்யாதே. தெய்வத்திற்கு உடன்பட்டு ஆத்மவஞ்சனை செய்வதைக் காட்டிலும் தெய்வத்தின் தொடர்பை விட்டு விடுவதே மேல்" என்பார். தமக்குத் தாமே துரோகம் விளைவித்துக் கொள்ளுகிறோமென்ற எண்ணம் அவளை ஒரு வலைபோல் இறுக்கிக்கொண்டு வந்தது. பக்கிரிபாபா இன்று மட்டும் இருந்திருந்தால் அவள் அவருடைய காலடியில் தஞ்சம் புகுந்திருப்பாள். வெகு நாளைக்கு முன்பு அவர், "அம்மா, உனக்கு என்னைக் காணவேண்டுமென்ற அவா என்றைக்குப் பொங்கி வருகிறதோ, என்று என்னை உள்ளூற நினைக்கிறாயோ, அன்று எங்கிருந்தாலும் நான் உன் எதிரே வந்து தோன்றுவேன்" என்று சொல்லியிருக்கிறார். இன்று அத்தகைய அவசியம் ஏற்பட்டது அவளுக்கு.

அதே சமயம் வெளியிலிருந்து ஒரு குரல், "உள்ளே வரலாமா?" என்று கேட்டது.

ஷோடசியின் கலக்கமெல்லாம் இமைப்பொழுதில் பறந்தோடிவிட்டன. ஆனால் மறுகணம் அவள் திக்பிரமையடைந்து போனாள். தன் எண்ணம் உடனே பலிக்க இப்படியோர் அதிசயம் நிகழ்வதை அவளால் நம்பமுடியவில்லை. அவளுக்கு அதிகப் பரபரப்பினால் கை கால் ஆடவில்லை.

"உள்ளே வரலாமா?"

"வாருங்கள்" என்று மறுமொழி தந்து மரியாதை செய்யச் சித்தமாக நின்றாள். அதிகமான பரவசத்தினால் கண்களைத் திறக்காமலே வந்தவரின் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்துவிட்டு, உடல் குலைய எழுந்து நின்றாள். வெளிச்சத்தில் பார்க்கும்போது எதிரே நின்றது பக்கிரி பாபாவல்ல, ஜமீன்தார் ஜீவானந்த சௌதுரி என்று தெரிந்தது. ஷோடசியின் கண்ணிமைகள் அசையவே இல்லை. ஆள் யாரென்று புலப்படும்படி அகல் விளக்கு ஒளி தந்தது. பக்தியின் ஆர்வத்துடன் இப்படி வரவேற்பது தன்னை அல்ல, வேறு யாரையோவென்று ஜீவானந்தனும் உணர்ந்தான். அவளுடைய இந்த அதிசயப் போக்கு, நடுக்கத்துடன் உள்ளே வரும் அவனது அச்சத்தை விலக்கியது.

"இந்தமாதிரி ஒரு பக்தி சிரத்தை கலிகாலத்தில் காண்பது அரிது. எனக்கு அர்க்யாதி உபசாரம் ஒன்றையும் காணோமே?" என்றான். ஷோடசி பதுமைபோல் உணர்வற்று நின்றாள். தன் துரதிர்ஷ்டமான வாழ்வில் அவள் எத்தனையோ பேரைப் பார்த்திருக்கிறாள். அவள் ஜனார்த்தனராயைப் பார்த்திருக்கிறாள். ஏகதந்தியைப் பார்த்திருக்கிறாள். தன்னுடைய தந்தையை மிகவும்

நெருங்கிப் பார்த்திருக்கிறாள். ஆனால் ஜீவானந்தனைப்போல் ஒரு கல்நெஞ்சனைக் கண்டிராமையால் அவள் மனத்தில் ஓர் அதிர்ச்சி மூண்டது. அதை அவளால் சமாளிக்க முடியவில்லை. ஜீவானந்தன் உட்காரச் சௌகரியம் இராமல் இங்குமங்கும் அலைந்துவிட்டுக்



கடைசியில் தட்டியில் தொங்கும் ஒரு கம்பளத்தை எடுத்துப் பரப்பிக்கொண்டு அதன்மேல் அமர்ந்தான். கதவுப்பக்கமே அவனுடைய கண்கள் பதிந்திருந்தன. "கதவைத் தாழிட்டுவிடு. உனக்கு வேண்டியவனை அந்த ஸாகர் இங்கே எங்கேயாவதுதான் பதுங்கிக்

கொண்டிருப்பான். என்மேல் அவனுக்கு அவ்வளவாகப் பிரீதியில்லை யென்பது எனக்குத் தெரியும். அவன் வந்தால் ஏதாவது தவறுக நினைத்துக் கொள்வான். அதற்காகத்தான் இந்த எச்சரிக்கை யெல்லாம்" என்று கூறி நகைத்தான். ஷோடசியின் உடலெல்லாம் கொதிக்கத்தொடங்கியது. ஜமீன்தாரன் துணையிராது தன் இருப் பிடத்திற்கு வரமாட்டான். அவனைச் சேர்ந்த ஆட்கள் சமீபத்தில் தான் எங்கேயோ மறைந்து கொண்டிருப்பார்களென்று அவளுக் குத் தோற்றியது. ஜமீன்தாரும் ஷோடசி தனிமையாக அகப்பட மாட்டாளா வென்றுதான் கொஞ்ச நாளாக எதிர்பார்த்துக்கொண் டிருந்தான். இன்று சந்தர்ப்பம் வாய்க்கவே அவன் பயங்கரமான செயல் ஏதாவது நிகழ்த்தக்கூடும், தன்னைக் கொலை செய்தால் கூடக் கேட்பாரில்லை என்றெல்லாம் கலவரங்கள் தோன்றவே அவற்றை அடக்கிக்கொள்ளமுடியாமல் வெடுவெடுப்பாகவே, "நீங்கள் எதற் காக இங்கே வந்தீர்கள்?" என்றாள்.

"உன்னைக் காணத்தான். பயந்து போய்விட்டாயா, என்ன? நீ பயப்படத்தான் வேண்டும். ஏன் இப்படிக் கத்திப் பேசுகிறாய்? கைத்துப்பாக்கியைக் கூடவே கொண்டு வந்திருக்கிறேன். உன்னு டைய ஆட்களான அந்தப் பட்டிக்காட்டுப்பயல்கள் எத்தனை பேர் வந்தாலும் பொட் பொட்டென்று விழுந்து சாகவேண்டியதுதான். உன் ஜபம் ஒன்றும் பலிக்காது" என்று கூறியதும் தன் ஜேபியிலி ருந்து பிஸ்தலை வெளியே காட்டிவிட்டு மறுபடியும் அதனுள்ளேயே வைத்துக் கொண்டான்.

"நீ அந்தக் கதவை மூடி விட்டு வாயேன். கொஞ்ச நாழிகையா வது நிச்சிந்தையாய் இருக்கலாம்."—இதைச் சொன்னதும் அவன் ஷோடசியின் முகத்தைப் பார்த்துச் சிரித்தான். அவள் கதவைத் தாழிடாது நிற்கவே, தானே சென்று சங்கிலியைப் போட்டு விட்டான்; வீட்டுக்காரியின் சம்மதத்தைக்கூட அவன் எதிர்பார்க்க வில்லை.

ஷோடசியின் முகம் வெளுத்துவிட்டது. அவள் பேசத் தொடங்கும்போது தொண்டை அடைத்துக்கொண்டது. சற்று நேரம் கழித்தே நெஞ்சில் ஈரம் வந்தது. "ஸாகர்..... யாருமே இல்லையா ஆனல்?" என்றபோது அவளுடைய குரல் நடுங்கியது.

"அவர்கள் இராத சமயம் பார்த்துத்தான் வந்தேன். எங்கே போனர்களோ, உன்னைக் காப்பாற்ற வந்தவர்கள்?" என்றான் ஜீவா னந்தன்.

"ஆனல் நான் துணையின்றி இருக்கும் சமயம் பார்த்தா என்னைக் கொல்ல வந்திருக்கிறீர்கள்? உங்களுக்கு என்ன தீங்கு நான் செய்தேன்?" என்று ஷோடசி கேட்டாள்.

"என்னுடைய ஆட்களைக் கூட்டிக்கொண்டு கொல்லவா வந்திருக்கிறேன் நான்? அதுவும் உன்னையா? ஐயோ தெய்வமே! இந்தப் பாவத்திற்கு நான் எங்கே போய் முறையிட்டுக் கொள்வது? இப்படியெல்லாம் பேசினால் உன் மனம் திகிலடைகிறதா இல்லையா என்பதைத்தான் வேடிக்கை பார்த்தேன்" என்றான் ஜீவானந்தன்.

அதற்குமேல் ஷோடசி பேசுவதை நிறுத்திக்கொண்டாள். கண்களில் நீர் சோரப் புலம்பினாள். ஜீவானந்தனுடைய பரிஹாஸ மொழிகளினால் அவளுக்கு வந்த கண்ணீரும் மறுகூணமே மறைந்தது. வாடின விழிகளுடன் கட்டாந்தரையை நிச்சப்தமாக வெறித்துப் பார்த்தாள். எதிரே எட்டிய தூரத்தில் உட்கார்ந்துகொண்டு அந்த நயவஞ்சகன் அவளுடைய குனிந்த முகத்தையே ஆவலுடன் வேட்கை தணியாமல் பார்த்துக்கொண்டு மௌனமாக வீற்றிருந்தான்.

17

"அலகா!"

"என்ன?"

"ஏன் இப்படிக் கோபித்துக்கொள்கிறாய்? போட்டுக்கொள்ள வெற்றிலை பாக்கு ஒன்றும் இங்கே கிடையாதா?"

ஷோடசி ஒருதரம் நிமிர்ந்து ஜீவானந்தனை நோக்கிவிட்டு உடனே தலை குனித்து கொண்டாள். பதிலொன்றும் வராமற் போகவே ஜீவானந்தன் நெடுமூச்செறிந்து, "கொடுத்துவைத்தான விரஜேச்வரன். தேவி சௌதுராணி அவனைப் பிடித்துக்கொண்டுவிட்டாலும் அவனுக்கு உபசரணை செய்தாள். போட்டுக்கொள்ள அவனுக்கு யதேஷ்டமாக வாசனைப்புகையிலையை வெற்றிலை பாக்குடன் தந்தாள். சாப்பாடுமுடிந்ததும் தக்ஷிணையும் வழங்கினாள். அவன் விடைபெற்றுச் செல்லும் கட்டத்தை நான் வர்ணிக்க வேண்டிய அவசியமில்லை. நீ பங்கிம் பாபுவின் புஸ்தகங்களைப் படித்திருக்கிறாயோ இல்லையோ?" என்றான்.

இந்தக் கல்நெஞ்சன் என்ன வேண்டுமானாலும் ஏளனம் செய்யட்டும், அதற்குப் பதிலே சொல்லக்கூடாதென்று பிரதிக்ஞை செய்து கொண்டாள் ஷோடசி. ஆனால் ஜீவானந்தன் கடைசியில் பேசினவிதமும் அப்போது இருந்த குரலின் இளக்கமும் அவளுடைய திடசங்கற்பத்தைக் கூடப் பொடியாக்கின. அவளையும் மீறி இந்த வார்த்தைகள் வந்துவிட்டன: "உங்களைக் கட்டிப்பிடிக்க வழியிராமற் போகவில்லை" என்றாள்.

ஜீவானந்தன் நகைத்து, "அப்படியா! ஆனால் பிணைக்க வருபவன் புது மாதிரியான ஆளாகத்தான் இருக்கவேண்டும். மனிதர் கண்களுக்குத் தென்படாத ஒருவனை இருக்கவேண்டும். ஆமாம்

அலகா! அவனுக்கு ஒரு பேர்கூட உண்டே. அனங்கன் (உடலற்றவன்) அல்லவா? மகா சாமர்த்தியசாலியாயிற்றே அவன், இந்த விஷயங்களில்'' என்றான்.

ஷோடசியின் முகம் நாணத்தால் தாழ்ந்துவிட்டது. ''என்னவோ கேட்கலாமென்று வந்தேன். ஆனால் இன்றைக்கு முடியவில்லை. வேறொரு நாள் வருகிறேன். உன்னுடைய ஆட்கள் என்னைப் பார்த்துவிட்டால் மாப்பிள்ளைக்கு உரிய மரியாதைகள் நடவா. 'மாமியார் வீட்டிற்கு இத்தனை நாட்களுக்குப் பிறகு வராதவன் வந்திருக்கிறேன்' என்று சொன்னால்கூட நம்பமாட்டார்களே. உயிர்தப்புவதற்குத்தான் இப்படி வேஷம் போடுகிறானென்றே அர்த்தம் செய்துகொள்வார்கள்'' என்றான் ஜீவானந்தன். ஷோடசி இதற்குப் பதில் ஒன்றுமே பேசவில்லை. இந்தக் கேலி வார்த்தைகளினால் தனக்கு மூண்ட லஜ்ஜை தெரியப் போகிறதென்று அவள் முகத்தைத் தூக்காமலே இருந்தாள்.

ஜீவானந்தன் சற்று நேரம் அவளையே நோக்கிவிட்டு எழுந்து நின்றான்; ''சரிதான். வாசனைப் பாக்கு, புகையிலை ஒன்றும் இராது போகட்டும். வயிற்றிற்குக் கூடவா ஒன்றும் அகப்படாது? அது இராது போனால் நிற்கக்கூட முடியாது. அலகா! வாஸ்தவமாகச் சொல்லு: ஒன்றுமே இல்லையா?'' என்றான்.

ஷோடசி பதில் சொல்லாமலே இருந்திருப்பாள். ஆனால் தன்னைப் பெயரிட்டு ஜீவானந்தன் உருக்கமாக அழைக்கவே அவளால் மௌனம் சாதிக்க முடியவில்லை. முகம் நிமிர்ந்து, ''வேறு எது? சாராயமா?'' என்றாள்.

ஜீவானந்தனுக்குச் சிரிப்பு வந்தது. ''இந்தத் தடவை நீ தப்பிவிட்டாய். அதை எனக்குத் தர வேறு ஆள் இருக்கின்றான். உனக்கு அந்தக் காரியம் தகாது. உன்னை அறிந்துகொள்ள எவ்வளவு சந்தர்ப்பங்கள் கிடைத்திருக்கின்றன! நான் உன்னை வேண்டுவதெல்லாம் என்ன? மனுஷ்யனை உயிருடன் வைக்கும் படியான ஆஹாரந்தான்; இன்னும் விரைவில் என்னைச் சாவ அடிக்கும் அந்தத் திராவகம் அல்ல. பக்ஷணமோ பழையதோ; எது இருந்தாலும் தா. அவலாவது பொரியாவது கொடுத்தாலும் சரிதான். இரண்டு எடுத்துப் போட்டுக்கொண்டால்தான் என் வயிற்று வேதனை அடங்கும்; அலகா! எதுவும் இல்லையா?'' என்றான்.

ஷோடசி கண்கொட்டாமல் அவனையே நின்று கவனித்தாள். ''காலையில் எழுந்ததுமே எனக்கு மனம் ஒரு மாதிரியாக இருந்தது. என் உடம்பைப்பற்றி நான் சொல்லவில்லை; ஆரோக்கியத்தையே

நான்தான் ஒருநாளும் கண்டறிந்தது கிடையாதே. ஆற்றங் கரையோரமாக உலாத்தப் போனேன். எவ்வளவுதூரம் நடந் தேனே எனக்கே தெரியாது. திரும்பிவர எனக்கு மனமே இல்லை. சூரியனும் அஸ்தமித்துவிட்டது. தனியாகப் புல்வெளியின் நடுவில் நின்றுகொண்டிருக்கும்போது இயற்கையின் அழகு என்னைக் கவர்ந்தது. அதன்மேல் எனக்கு உண்டான ஆசையைச் சொல்லி முடியாது. அப்போது உன்னைப்பற்றி அடிக்கடி நினைத்துக் கொண்டேன். திரும்பி நேரே என் இடத்திற்கு நான் போகாமல் பசிதாகத்தோடு உன் குடிசையின் பின்புறமாகவுள்ள புதருக் கருகில் வந்து நின்றேன். வாயிற்கதவு திறந்திருப்பதைக் கவனித் தேன். உள்ளே வெளிச்சம் தெரிந்தது. கையில் பிஸ்தல் இராது இரண்டடிகூடக் காலை வெளியே வைக்கத் தைரியமிராதவன் நான். பிஸ்தல் என் ஜேபியிலேயே இருந்தும் எனக்கு உள்ளுக்குள் குளிர்தான், யாராவது என்னை மடக்கிக்கொள்வார்களோ வென்று. புதர் மறைவிலிருந்தபடியே பார்க்கும்போது நீ தரைமீது உட் கார்ந்த வண்ணம் அசையாமல் என்னவோ எண்ணமிட்டுக்கொண் டிருந்தாய். எனக்குப் பசி தாங்கமுடியவில்லை. வருவதுவாட்டு மென்று உள்ளே நுழைந்தேன், அலகா!" என்றான்.

ஷோடசி சற்றுத் தயங்கிவிட்டு, "உங்களுடைய இடத்திற் குப் போனால் எல்லாம் கிடைக்குமே" என்றாள்.

"ஓஹோ! என்னுடைய வீட்டின் அழகைப்பற்றி என்னை விட உனக்கு ரொம்பத் தெரியும்போலிருக்கிறது?" என்று கூறி அவன் சிரிக்க முயன்றான்.

ஷோடசி அப்போது, "நீங்கள் இன்றைக்கெல்லாம் ஒன்றுமே ஆஹாரம் பண்ணவில்லையா என்ன? உங்களுடைய மாளிகையிலே கூடவா சாப்பாட்டிற்குப் பஞ்சம்?" என்றாள்.

இருவர் குரல்களில் ஒன்று சற்று உத்வேகத்தைக் காட்டியது. மற்றொன்று அடக்கமாகவும் பெரியமனுஷ்யருக்குரிய அமைதி யுடனும் இருந்தது. "பஞ்சமில்லை. நான் சாப்பிடவரவில்லையே யென, வேதனையுடன் எனக்காக எதிர்பார்த்துக்கொண்டு பட்டினி கிடப்பவர் யார் இருக்கிறார்கள் சொல்லு, அலகா? அந்தமாதிரி பாக்கியம் எனக்கு இல்லையே. என்மேல் நீ கோபம் கொள்ளாதே" என்று சொல்லி மெதுவாகச் சிரித்தான். பிறகு, "ஆனால் நான் போய்வருகிறேன். அப்படி ஒருநாள் இராவிட்டால் ஒருநாள், எனக்குப் பசி தாங்க முடியாதுபோய் நான் உன்னை அடித்துவந்தே னானால், என்னை வெறுப்பாயா நீ?" என்றான் உடனேயே.

அவனுடைய ஒழுங்கீனமான வாழ்க்கையின் போக்கைத் தன் கண்ணுலேயே பார்த்துச் சும்மா இருந்திருக்கிறுள் ஷோடசி. இப் போது திடீரென்று என்ன மாறுதல் அவள் மனத்தில்! கெட்ட நடத் தையும் மதுவெறியும் குரூரமும் நிறைந்த மனுஷ்யனுக இப்போது ஜீவானந்தன் அவளுடைய கண்களுக்குத் தோன்றவில்லே. 'பொய் சொல்லித் தன் மானத்தை வாங்கிய அந்த ஜமீன்தாரா இவன்?' என்ற சந்தேகங்கூட ஏற்பட்டது. அன்று கோயிலில் தன்னேத் திரஸ் கரித்துச் சற்றும் தயையில்லாமல் வெளியே தூரத்தியவன் இவனு? பின் வேறு யாராவதா? இன்று இவ்வளவு தாழ்ந்து வருபவனு அந் தக் காரியத்தைச் செய்திருப்பான்?—ஷோடசி இவ்வாறு ஐயுற்றுள். மெதுவாகவே அவள், "கோயிலில் கிடைத்த பிரஸாதம் கொஞ்சம் இருக்கிறது. அதை நீங்கள் உண்பீர்களா?" என்றுள்.

"உண்ணமுடியுமாவா?" என்றதும் அவன் தான் முன்பு வீற்றிருந்த இடத்திற்கே சென்று சாப்பிடுவதற்குப் பதிய உட் கார்ந்துவிட்டான்; "பிரஸாதத்தையா வேண்டாமென்பேன்? சீக்கிர மாக இலேயில் வை. தெய்வத்தின்மேல் எனக்குள்ள நீவிர பக்தி யைக் காட்டுகிறேன் பார்" என்றுன்.

அவன் அமர்ந்திருக்கும் இடத்திற்கு எதிரே, தரையை ஜலம் தெளித்துச் சுத்தம் செய்துவிட்டுச் சமையல் விடுதியிலிருந்து கோயில் பிரஸாதங்களே இலேயில் எடுத்துக்கொண்டு வந்து அவன் முன்னிலேயில் வைத்து, "தின்னமுடியுமா பாருங்கள்?" என்றுள் ஷோடசி.

ஜீவானந்தன் தலேயை அசக்கி, "அதைப் பார்க்கவும் வேண் டுமா? அதிருக்கட்டும். உனக்கு.....?" என்றுன்.

"எனக்குக் கொஞ்சம் எடுத்துக்கொள்ளவில்லேயேயென்று கேட்கிறீர்களா?" என்றுள் ஷோடசி.

ஜீவானந்தன் புன்னகையுடன், "நான் அதைக் கேட்கவில்லே. இன்னும் இருக்கிறதா என்றுதான் கேட்டேன்" என்றுன்.

"இல்லே" என்று உரைத்தாள் ஷோடசி.

"ஆனல் உன் வயிற்றில் மண்ணேப் போட்டுவிட்டு இப்படி நான் உண்பது சரியா, அலகா?" என்றுன்.

"அந்தமாதிரி நீங்கள் செய்வது வழக்கமில்லேயா?" என்றுள்.

இதற்குச் சிரித்த முகத்துடன் மறுமொழி பகர அவனல் இயலவில்லே.

"என்னவோ இருக்கலாம், அலகா?" என்று கூறிப் பெரு மூச்செறிந்து, "அது கிடக்கட்டும். நீ என்ன சாப்பிடப் போகி றுய்? என் இலேயிலுள்ளதைப் பாதி எடுத்துவிடு" என்றுன்.

"இப்படிச் செய்தால் உங்கள் வயிறு நிரம்பினபாடுமிருக்காது, என் வயிறு நிரம்பியபாடுமிராது" என்றாள் ஷோடசி.

ஜீவானந்தன் வற்புறுத்தும் தொனியில், "கூடாது. என் வயிறு நிரம்பாதுபோனால் போகட்டும். ராத்திரி நீ வெட்டுவெட்டென்று பட்டினியாகத்தானே கிடக்கவேண்டும்?" என்றான்.

ஷோடசிக்கு உணவின்மேல் அவா இல்லை. ஜீவானந்தன் வராதிருந்தாலும் கோவில் பிரசாதம் தொடுவாரின்றியே கிடக்கும். அவளுக்கு ஆஹாரமே வேண்டியிருக்கவில்லை அன்றிரவு. ஆனால் அதைச் சொல்லாமல் அவள், "என்போன்றவர்களுக்குப் பசி பட்டினியிருந்து வாடிக்கை. ஒருநாள் ராத்திரி என்னக்கு ஆஹார மிராதுபோனால்தான் போகட்டுமே. அதற்காக நீங்கள் சுண்ட வேண்டுமா? என் இலையில் இருப்பதைத் தொடவே இல்லை? இதுதான் நீங்கள் தெய்வத்தின்மேல் கொண்டிருக்கும் பக்தியோ? ரொம்ப அழகு!" என்றாள்.

"உன் வயிற்றுக்கு வஞ்சனை செய்துவிட்டு எனக்குச் சாப்பிடப் பிடிக்கவில்லையே."

"பிடிக்காதுபோனாலும் கொஞ்சம் சாப்பிட்டுத்தான் வைக்க வேண்டும்" என்று கூறும்போது ஷோடசியின் முகத்தில் சிரிப்புத் தவழ்ந்தது. பிறகு, "என்னைப்பற்றி அற்பவிஷயத்திற்காக நீங்கள் இப்படித் தர்க்கமாடி என்னை அவமானப்படுத்தாதீர்கள். வாயை மூடிக்கொண்டு சாப்பிடுங்கள்" என்றாள்.

இதைக் கேட்டுக்கொண்ட பிறகுதான் ஜீவானந்தன் பேசாமல் உணவு கொள்ளத் தொடங்கினான். இரண்டொரு நிமிஷம் கழிந்ததும் அவன் முகம் நிமிர்ந்து அவளையே கவனித்தவண்ணம், "பதினைந்து வருஷமாயிற்று. இல்லையா, அலகா? இப்போது எல்லோரும் கௌரவிக்கும் ஒரு பெரிய ஆஸாமியாக இருக்கிறேன்" என்றான்.

ஷோடசி பேசாமல் அவனையே பார்த்தாள். பதினைந்து வருஷங்கள் என்ற குறிப்பில் அடங்கிய அர்த்தத்தை அவள் உடனே புரிந்து கொண்டாள். ஆனால் கடைசியில் சொன்னதன் பொருள் மட்டும் அவளுக்கு விளங்கவில்லை.

ஜீவானந்தன் கூறலுற்றான்: "எல்லாவற்றையும்விட நான் குடியனை கதையை எடுத்துக் கொள்ளேன். அது என்னைச் சாவளவிற்குக் கொண்டுவந்து விட்டிருக்கிறது. அதை நீயே ஒரு சமயம் பார்த்தாய். ஆனால் என்னை அந்தப் பழக்கத்திலிருந்து விடுவிக்க உன்னைப்போன்ற திடமான குணமுடைய ஓர் ஆள் என்

சமீபத்தில் அப்போது இல்லை. இப்பொழுதும் என்ன; வேண்டிய அவகாசம் இருக்கிறது, நான் தப்பிப் பிழைக்க. என்னைக் காப்பாற்றும் பொறுப்பை நீ ஏற்றுக்கொள்வாயா, அலகா?" என்றான்.

ஷோடசியின் உள்ளம் நடுக்குற்றது. கண்கள் மருண்டு மூடிக் கொண்டன. ஹைமவதி, அவளுடைய கணவன், அவளுடைய குழந்தை, அவளுடைய ஸம்ஸாரம், உலகத்தவர் நடத்தும் இல் வாழ்க்கை யாவும் ஒரு மந்திரவாதி ஏவும் மாயக்காட்சியைப்போல் அவள் மனக்கண் முன் விரைந்து வந்தன.

"என்னுடைய பாரத்தையெல்லாம் நீ வகித்துக்கொள், அலகா!" என்றான் ஜீவானந்தன் மீண்டும்.

இவ்வாறு ஜீவானந்தன் தன்னிடத்தில் தாழ்ந்து பேசுவதைக் கண்டதும் ஷோடசி மயிர்க்கூச்செறிந்தாள். இதுவரை அவளை இந்த மாதிரி யாருமே விரும்பி நெருங்கியதில்லை. இது முன்பின் நடக்காத ஒரு புதுமையென அவளுக்குத் தோற்றியது. ஆனால் பைரவி வாழ்வில் பயின்ற தன்னடக்கத்தையும் சுடினத்தையும் அவள் மறந்து நிற்கவில்லை. அவள் கூணைநேரம் நிதானித்து விட்டு, "அதாவது, ஏற்கெனவே ஊரார் என் மீது களங்கத்தைச் சுமத்தியதை உண்மையாக்க நயமாகவே முயற்சிகள் செய்கிறீர்களா என்ன? என்னுடைய அம்மாவைத்தான் ஏமாற்றிவிட்டீர்கள்; என்னை அப்படிச் செய்ய முடியாது" என்றாள்.

"அப்படி நான் ஒன்றும் செய்ய எண்ணவில்லை. பூர்ணமாகத் தெரிந்து கொள்ளாமல் உன்னைப் பற்றித் தவருகத் தீர்ப்புச் செய்ததென்னவோ வாஸ்தவம்; நான் அதை மறுக்கவில்லை. நான் உன் விஷயத்தைப்பற்றி விசாரணை நடத்தினேனே தவிர அதை நான் நம்பவில்லையே. இது மட்டும் எண்ணினேன்: இவ்வளவு மனோதிடம் உடைய ஸ்திரீயைத் தன்வசம் செய்து கொண்ட அத்தகைய மனுஷ்யன் யாராக இருக்குமென்று."

ஷோடசி வியப்புற்று, "அவர்கள் உங்களுக்கு அவன் இன்னனென்று சொல்லவில்லையா, ஆனால்?" என்றாள்.

"இல்லையே. நான் பலதடவை விசாரித்தபோதெல்லாம் அவர்கள் வாயைப் பொத்திக் கொண்டுவிட்டார்கள்."

"பேச்சு அப்புறம் ஆகட்டும். நீங்கள் முன்னே சாப்பிடுங்கள்" என்று கூறிவிட்டு ஷோடசி தரையில் ஒருபுறமாக உட்கார்ந்தாள். இரண்டு மூன்று கவளங்கள் உண்டதும் ஜீவானந்தன், "இதற்குமேல் என்னால் முடியாது" என்றான்.

"உங்களை வயிறு வெடிக்கச் சாப்பிடும்படி வற்புறுத்தவில்லையே. சாதாரணமாக மனுஷ்யன் சாப்பிடுகிற அளவுதானே சொன்னேன்? அதுகூட நீங்கள் சாப்பிடவில்லையே" என்றாள் ஷோடசி.

"அதுகூட என்னால் முடியவில்லை. எனக்கு இப்பொழுதே வயிறு நிரம்பி விட்டது, அலகா!" என்றான் ஜீவானந்தன்.

"பரவாயில்லை. இன்னும் கொஞ்சம் எடுத்துக் கொள்ளுங்கள். ஸ்வாமியின் பிரஸாதத்தை அலக்ஷ்யம் செய்தால் என்ன நேரும் தெரியுமோ? என்னுடைய படர்களைக் கூப்பிட்டுவிடுவேன். ஆமாம்!" என்று வேடிக்கையாக அவனைப் பயமுறுத்தினாள்.

ஜீவானந்தன் சிரித்து, "அந்தமாதிரி காரியம் நீ செய்யமாட்டாய். எனக்குத் தெரியும், உன்னுடைய சமாசாரம். அன்று மாஜிஸ்டிரேட் எதிரே உன்னுடைய சாமர்த்தியத்தில் ஒரு கோடியைப் பார்த்திருக்கிறேன். உன்னுடைய அம்மா உன்னை என் கையில் ஒப்புவித்துச் சென்றதை மறக்க உன்னால் முடியாதே, அலகா" என்றான்.

ஷோடசி பேசவில்லை; சும்மா இருந்தாள். ஜீவானந்தன் கைகளை அலம்பிக்கொண்டு திரும்பிவந்து பழைய இடத்திலேயே அமர்ந்தான்.

(தொடரும்)



அவந்தி சுந்தரி

ஜி. ஹரிஹர சாஸ்திரி

தமிழில் உள்ள அணியிலக்கணங்களுள் இப்போது வித்துவான்களாற் சிறப்பாகப் படிக்கப்பெற்று வருவது தண்டியலங்கார மென்னும் நூலாகும். அதற்கு முதல்நூல் வடமொழியிலுள்ள 'காவ்யாதர்சம்' என்பது. தண்டியலங்காரத்துக்கு மூன்பே காவ்யாதர்சதின் மொழிபெயர்ப்புத் தமிழில் உண்டு. வீர ராஜேந்திர சோழன் காலத்தில் இயற்றப் பெற்ற வீரசோழியம் என்னும் இலக்கண நூலிலுள்ள அலங்காரப் படலமே அம்மொழிபெயர்ப்பாகும்.

காவ்யாதர்சத்தை இயற்றிய தண்டியாசிரியர் மூன்று நூல்கள் இயற்றியிருக்கின்ருரென்று தெரிகின்றது. 'மூவுலகும் புகழ்பெற்ற தண்டியின் பிரபந்தம் மூன்றும்' என்னும் நூல் வழக்கு ஒன்றினால் இச்செய்தி தெரியவருகின்றது. காவ்யாதர்சத்தை யன்றி அவந்தி சுந்தரி என்னும் கதையொன்றும் தண்டியாசிரியர் இயற்றியுள்ளார். மேலே குறிப்பித்த வழக்கிலே கூறப்படும் மூன்ருவது நூல் இன்னதென்று இப்பொழுது விளங்கவில்லை.

அவந்தி சுந்தரியென்பது பட்டபாணனது காதம்பரியைப் போல் மிகவும் விரிவானதொரு வசனகாவியம். தண்டியாசிரியரே கூறியுள்ள இலக்கணப்படி, 'உச்சுவாஸம்' போன்ற பாகுபாடின்றித் தொடர்ச்சியாக நீண்டுவரும் இன்பக்கதை. இந்நூலின் சில பகுதிகளும், வெகுகாலத்துக்குமுன் இதைச் சுருக்கிச் செய்யுளாக அமைக்கப் பெற்ற 'அவந்தி சுந்தரி கதாஸாரம்' என்பதிற் சில பகுதிகளும் சென்னை அரசாங்க நூல் நிலயத்தில் உள்ளன. அவ்விரு நூல்களிலும் பல பகுதிகள் திருவிதாங்கூர் வடமொழி நூற் பிரசுரசாலையிலும் சேமித்து வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவை தண்டியாசிரியர் இப்போது வந்து நோக்கினும் தம் முடையன வென்று அறியவொண்ணுத நிலையில், அளவிறந்த பிழைகள் நிரம்பி உருமாறி உள்ளன. அதனால், சுத்தமான முழுப் பிரதி கிடைக்கும் வரையில் அவந்தி சுந்தரி கதையை அச்சிட்டு வெளிக்கொணர்தல் இயலாத காரியம்.

'தசகுமார சரிதம்' என்னும் நூலொன்று தண்டியாசிரியர் இயற்றியதாக இப்பொழுது வழங்கிவருகின்றது. அதன் முற் பகுதியும் பிற்பகுதியும் அவ்வாசிரியர் இயற்றியவை யல்லவென்று ஆராய்ச்சியாளர் பலர் கருதுகின்றனர். மலையாளத்தில் எழுதிய அந்நூலின் பழைய ஏட்டுப்பிரதிகளில் 'அவந்தி சுந்தரியில் தச குமாரசரிதத்தில் ராஜவாஹந சரிதம் முற்றிற்று' என்ற வாக்கியம் காணப்படுகின்றது. அவந்தி சுந்தரியில் கிடைக்கக்கூடிய வேறு பகுதிகளை ஆராய்ந்து நோக்கினாலும் அவ்வாராய்ச்சியாளருடைய கொள்கை அங்கீகரித்தற்குரியதாகவே இருக்கிறது. சுத்தமான முழுப்பிரதி கிடைப்பது அரிதாயிருந்தமையால் ஒரு பண்டிதர் தமக்குக் கிடைத்த அரை குறையான பிரதியை ஆதாரமாக வைத் துக்கொண்டு அதற்கு முன்பும் பின்பும் பலவற்றை எழுதிச் சேர்த் துப் பல உச்சுவாஸங்களும் அமைத்துத் தசகுமார சரிதம் என்னும் பெயர் குறித்து வெளியிட்டனர் போலும். இந்நிகழ்ச்சி இன்ன காலத்தில் நிகழ்ந்ததென்று தெரியவில்லை. ஆனால் நச்சினார்க் கினியர் சிந்தாமணி உரையில் தசகுமார சரிதத்தை மேற்கோளாகக் காட்டுவதால் அவந்தி சுந்தரி கதை அவ்வுரையாசிரியருடைய காலத்துக்கு முன்னமே மாற்றம் அடைந்திருக்க வேண்டுமென் பதில் யாதும் ஐயமில்லை. ஸுசீல குமார தே என்ற ஆசிரியரும், அவரைப் பின்பற்றிய ஆர்தர் பெரிடேல் கீத் என்ற ஆசிரியரும் அவந்தி சுந்தரியின் வசன நடையிலும் தசகுமார சரிதத்தின் வசன நடையிலும் வேறுபாடு காணப்படுகின்றதென்றும் அதனால் அவ் விரு நூலையும் ஆக்கியவர் தண்டியென்னும் பெயரையுடைய இரு வேறு ஆசிரியரென்றும் கூறுகின்றனர். அவர்கள், பிழைகள் செறிந்த ஒரு பிரதியை ஆதாரமாகக் கொண்டு அச்சிட்டு வெளி யிட்ட அவந்தி சுந்தரியின் தொடக்கத்தை மட்டும் நோக்கிக் கூறு வதால் அவர்கள் கூற்றுக் கவனிக்கத் தக்கதன்று.

தண்டியாசிரியர் தென்னாட்டினர். திராவிடமும் ஆரியமும் ஒருங்கே கலந்து பாய்ந்து தென்திசையை வளமுறச் செய்த பல்லவ அரசர்காலத்தில் காஞ்சிநகரிற் பிறந்து வளர்ந்து வாழ்ந்தவர். அவருடைய கொட்பாட்டனரான தாமோதரர் என்னும் கவி சிரேஷ்டர் பல்லவ அரசருள் சிறப்புற்றோங்கிய ஸிம்ஹ விஷ்ணுவின் ஸபையை அலங்கரித்தவர்; பாரவியென்ற மஹாகவியின் நண்பர்*; விஷ்ணுவர்த்தனன், துர்விநீதன் என்ற அரசர்களது சம காலத்தினர்.

---

* சிலர் இதனைப் பிழைபட உணர்ந்து பாரவியும் தாமோதரரும் ஒருவரேயென்றும் தண்டி பாரவியின் கொட்பேரரென்றும் கூறுவர்.

ஸம்ஸ்கிருத இலக்கிய சரிதையிலே காளிதாஸன் பவபூதி முதலியவர்களைப்போல் தண்டியும் ஒரு மஹாகவியாகக் கருதப்படுகின்றனர். கவிதை விஷயத்தில் காளிதாஸனுக்கும் தண்டிக்கும் விவாதம் நேர்ந்தபொழுது நாமகள் தோன்றித் தண்டியே கவியென்றும், காளிதாஸன் தன் அவதார மென்றும் கூறியதாக ஓர் ஐதிஹ்யமுண்டு. இதனினின்றும் நம் முன்னோர் தண்டியையும் காளிதாஸனைப்போல் ஒரு மஹாகவியாக மதித்தனரென்பது விளங்குகின்றது.

தண்டியின் வசனநடை ஒரு தனிப்பெருமை வாய்ந்தது. இவர் இன்பம் பயத்தலே மட்டுமே கவிதையின் முக்கிய லட்சியமாகக் கொண்டவர்; நல்லறிவூட்டுதல் இவரது தலையாய நோக்கமன்று. அவந்தி சுந்தரி கதையில் வரும் குமாரர்களின் துணிகரச் செயல்களை ஆராய்ந்தால் இது தெரியவரும். காஞ்சீபுரத்தில் படையெழுச்சி நேர்ந்தபொழுது தண்டியாசிரியர் நீண்டகாலமாக அன்னிய நாடுகளிற் சஞ்சாரம் செய்தனர். அந்நாட்களில் இவர் நேரிற் கண்டறிந்த விஷயங்களெல்லாம் அவந்தி சுந்தரியில் அழகாகச் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. இவர் தென்னிந்தியரைத் தமிழர், சோழர், பாண்டியர் என்று வேறுவேறாகக் கூறுவதால், இவர்காலத்தில் காஞ்சீபுரத்தைத் தலைநகராகக்கொண்ட நாட்டுக்கே திராவிடம் அல்லது தமிழகம் என்ற பெயர் வழங்கிவந்ததென்று தோற்றுகின்றது.

லலிதாலயன் என்ற சிற்பாசிரியன் ஸம்ஸ்கிருத இலக்கியத்திற் புகழ் பெற்ற சூத்ரக சரிதையைத் தமிழில் மொழிபெயர்த்தானென்ற செய்தியொன்று இதில் வருகின்றது. அந்த மொழிபெயர்ப்பு நூல் இப்பொழுது கிடைக்கவில்லை. தசகுமாரசரித்திரத்தில் வரும் காமினியின் கதை தமிழ்நாட்டுக் குடித்தனத்தைச் சரிவர வரைந்த சித்திரமாதலை ஸம்ஸ்கிருத விற்பன்னர் யாவரும் அறிவர். வடமொழிக்கும் தமிழுக்கும் பொதுவான 25 எழுத்துக்களால் அவந்தி சுந்தரியில் சோமதத்த சரிதம் என்னும் பகுதியமைந்திருப்பது அவ்விரு நாகரிகத்தின் நட்புக்கோர் அரிய சான்றாகும். நூலின் தொடக்கத்தில் தமிழிலக்கியவழக்குப்படி ஆசிரியர் தமது பூர்வோத்தரங்களையும் நூல் இயற்றுவதற்குக் காரணத்தையும் கூறுகின்றார். இன்னும் தமிழ்நாட்டுப் பழக்கவழக்கங்களும் தமிழாராய்ச்சிக்கு உபயோகப்படும் பல் வேறு விஷயங்களும் இதில் ஆங்காங்கே காணப்படுகின்றன.

மழை செய்யும் கெடுதி

கே. வரதாசாரி

பயிர்த்தொழிலுக்கு மழை இன்றியமையாதது என்பது சகலருக்கும் தெரிந்த விஷயம். மழை இல்லாமற்போனால் நதிகளும், ஏரிகளும், குளங்களும் ஜலம் இல்லாமல் வறண்டுவிடும். பயிர்களுக்குப் போதுமான ஈரம் மண்ணில் இராது. மழை அளவாகப் பெய்தால் பயிருக்கு அனுகூலமாக இருக்கும்; கனத்த மழையாகப் பெய்தால் பிரதிகூலமாக இருக்கும்.

பூமியின் மேல்பாகத்தில் அரை அடி ஆழத்துக்கு உழுது பயிரிடுகிறோம். இந்த மேல்மண்ணில்தான் செழுமை இருக்கிறது. இந்த மண்ணின்மேல் தாவர வர்க்கங்கள் இருந்தால் அவற்றின் வேர்கள் மண்ணைக் கவ்விப் பிடித்துக்கொள்ளும். மரம், செடி, கொடி, புல், பயிர்கள் இவை இருந்தால் மழை பெய்யும்போது மழைத்துளிகளின் வேகம் தடைப்படுகிறது. தரையில் வேகமாக அடித்து மண்ணை அரிக்கிறதில்லை. பொட்டலாக இருந்தால் வேகமாக மழைத்துளிகள் விழுந்து, சிறிய பொடியாக இருக்கும் மண் பெயர்ந்து ஜலத்தில் நகருகிறது. நிலம் எவ்வளவுக்கெவ்வளவு சரிவாக இருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு அரித்துக்கொண்டும் பள்ளம் செய்துகொண்டும் போய் ஏரியில் விழுகிறது.

இந்தமாதிரி மண்ணெல்லாம் போய்விடுவதால் ஏராளமான நஷ்டம் உண்டாகிறது. காடுகளில் புல் மூளைக்கப் போதுமான மண் இருப்பதில்லை. இப்பொழுது தரைக்காடுகளின் ஸ்திதி எப்படி இருக்கிறதென்றால் அங்கங்கே முட்செடிகள் உள்ள சில புதர்களே இருக்கின்றன. புதரின் நிழலினாலும், அதன் கீழே விழும் தழைகள் மக்குவதாலும், மழை ஜலம் சேரவும் தங்கவும் வசதியிருக்கிறது. ஆகையால் புதர்களைச் சுற்றிக் கொஞ்சம் மண் இருக்கிறது. இந்த மண் இருக்கும் இடத்தில் மாத்திரந்தான் புல் வளருகிறது. மற்ற இடங்கள் திறப்பாகவும் மண் அரிபட்டுக் கல்லும் மணலுமாகவும் இருக்கின்றன.

கால் நடைகள் கட்டுப்பாடில்லாமல், புல் மூளைத்தச் செழிக்கமுடியாதபடி தரையோடு ஓட்ட மேய்ந்து விடுவதாலும், அடிக்கடி அவை நடந்து நடந்து தரை இறுகி மழையில் அரிபட்டு

மண் போய்விடுவதாலும் மறுபடியும் போதுமான புல் வளர ஹேதுவில்லை. புன்செய் நிலங்களில் உழவுசெய்து, மண்ணை இளக்கிப் பிறகு சரிவுகளில் வரப்புகள் கட்டாமல் இருந்தால் மழை ஜலம் சுலபமாக மண்ணை வாரிக்கொண்டு போய்விடும். லேசான மழை பெய்யும்போது மழை ஜலம் பூமியில் ஊறுவதற்கு அவ காசம் இருக்கும். கனத்த மழையில் சன்னமான மண்ணெல்லாம் முதலில் ஜலத்துடன் பூமியில் இறங்கி மண்ணின் சந்துகளை அடைத்துவிடும். அதற்குமேல் ஜலம் ஊறமுடியாமல் மேலேயே அறுத்து ஓடுகிறது. இதனால் போதுமான மழை ஜலம் பூமியினுட் செல்வதில்லை. செழுமையான மேல்மண்ணும் போய்விடுவதால் பயிர்கள் தழைத்து வளர்ந்து நல்ல பலனைக் கொடுக்கமுடியாது.

மேலும், இந்தமாதிரி நஷ்டத்தைத் தவிர, ஏரியில் ஒவ்வொரு வருஷமும் மண் சேர்ந்து சேர்ந்து சில வருஷங்களில் ஏரி மேடிட்டு விடும். இப்பொழுதே பல ஏரிகளில் காய்ச்சல் காலத்தில் பார்த் தால் கீழ் மதகின் பக்கத்தில் கொஞ்சம் ஆழமாக இருக்குமே ஒழிய மற்ற இடங்களில் மண் சேர்ந்து மேடாக இருக்கும். இத னால் தேங்கும் ஜலத்தின் அளவு வரவர ஏரியில் குறைந்துபோகிறது. ஆறு அடி ஆழமுள்ள ஏரி சில வருஷங்களில் நான்கு அடி மூன்று அடி ஆழம் என்று மேடிட்டுப்போகிறது. இப்படி ஆழம் குறை வதால், கனத்த மழைக்காலங்களில் ஏரிகளில் அதிகமான ஜலம் தேங்குவதில்லை; அந்த ஜலம் கலிங்கல் வழியாக வெளியே போய்விடு கிறது. நான்கு மாதகாலத்துக்கு ஜலம் தரக்கூடிய ஏரிகள், மூன்று மாதம்கூட ஜலம் தரமுடியாமற் போவதால் இரண்டாம் போகப் பயிர்களுக்கு ஜல ஆதாரம் போதுமானதாக இருப்பதில்லை.

மண் நஷ்டம், ஏரி தூர்ந்துபோதல் இந்த இரண்டு கெடுதலைத் தவிர மற்றொரு கெடுதலும் உண்டு. மண்ணிற்குள் எவ்வளவுக் கெவ்வளவு ஜலம் ஊறிப் பூமிக்குள் செல்லுகிறதோ, அவ்வளவுக் கவ்வளவு பூமியின்மேலே ஓடும் ஜலம் குறைவுபடும். பூமிக்குள் ஜலம் ஊறவும், ஜலத்தை மண் கிரகித்துக்கொள்ளவும் வசதியில்லா மல், மேலேயே ஜலமெல்லாம் பிரவாகமாக ஓடுவதால் அநேக இடங்களில் பெரும் மழைகளில் திடீரென்று வெள்ளமும், வெள் ளத்தால் சேதமும், ரெயில் பாதைகளில் விபத்தும் ஏற்படுகின்றன. ஆனால் மழை ஜலம் சீராகப் பூமிக்குள் போய்விட்டால், பூமியின் நீர்மட்டம் உயர்ந்து, கிணறுகளுக்கும் நல்ல ஜல ஆதாரம் ஏற்படு கிறது.

இந்த மாதிரியான பலவகை நஷ்டத்தைத் தடுப்பதற்கு மழை ஜலத்தை நிலம் கிரகித்துக் கொள்ளும்படியும், மிஞ்சின ஜலம் வீணாகாமல் தேங்கும்படியும் ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

முதலில் மழையின் வேகத்தைத் தடுக்கவேண்டும். இரண்டாவது, பூமியின்மேலாக ஜலம் ஓடும் வேகத்தையும், ஓடும் தூரத்தையும் குறைக்கவேண்டும். மூன்றுவது, பயிர்களின் வளர்ச்சிக்குப் பிரயோசனப்படும்படி எவ்வளவு ஜலத்தை நிலம் கிரஹித்துக் கொள்ளலாமோ அவ்வளவையும் கிரஹித்துக்கொள்ளும்படி, மண்ணில் பூசாரத்தைச் சேர்த்து, ஜலத்தைப் பிடித்துக்கொள்ளும் சக்தியைக் கொடுக்கவேண்டும்.

தரைக்காடுகளில் தழைதரும் மரங்களை வைத்துப் பயிராக்க வேண்டும். பூவரசு, புங்கமரம், தூங்குமூஞ்சிமரம் முதலியவைகளை மழைக்காலத்தில் நடவேண்டும். தகுந்த அளவில் குழிகள் வெட்டி, வண்டல் சேர்த்து மழைக்கால ஆரம்பத்தில் நட்டுவிட்டால், மழைக்காலம் முடிவதற்குள் இவை வேர்விடவேரத்தைத் தேடி வேர் செல்லும். செடிகள் வளரவளர, நிழலினாலும் கீழேவிழும் தழைகளினாலும் பூமி ஈரம் காக்கும். மரங்கள் தங்கள் வேர்களினால் மண்ணை இறுக்கி மழை அடித்துக் கொண்டு போகாமல் பாதுகாப்பதன்றி, மேலே உதிர்ந்த தழைகள் முதலியன மக்குவதாலும், பூசாரம் சேர்ந்து ஜலத்தைப் பூமி கிரகித்துக்கொள்ளும்படி செய்கின்றன. பெரிய காடுகளில் உற்பத்தியாகும் நதிகளுக்கு மழைக்காலத்துக்குப் பிறகு கூடப் பூமியிலிருந்து சுரந்து சுரந்து ஜலம் வருவது இதனால்தான். பிறகு, பெரியனவாக அறுத்த ஓடைகளை ஒழுங்குபடுத்தவேண்டும். ஜலம் அறுத்துவிழும் முகத்வாரங்களைச் செடிகொடிகளை வளர்த்து அணைகட்டி மேலும் அறுக்கப்படாமல் பலப்படுத்தவேண்டும். சரிவு அதிகமாக இருக்கும் நிலத்தை வரப்புகளால் தடுத்து ஜலத்தின் வேகத்தை நிறுத்தி ஜலம் தேங்கும்படிசெய்தால், மண்ணெல்லாம் படிந்து நிலத்தில் ஜலம் சாவதானமாக ஊறி அதிகப்படியான ஜலம்மாத்திரம் வழிந்துபோகும்.

புன்செய் நிலங்களில் சரிவுக்குக் குறுக்கே உழுது வரப்புகள் கட்டுவது அவசியம். கொள்ளு, காராமணி முதலிய பசுந்தாள் உரப்பயிர்களை உற்பத்திசெய்து மண்ணில் மடித்து உழுது பூசாரத்தைச் சேர்த்து, நிலமானது ஜலத்தைக் கிரகித்துக்கொள்ளும்படி செய்யவேண்டும். மலையைச் சார்ந்த இடங்களில் படிப்படியாக வரப்புகள் பிடித்து ஜல ஓட்டத்தைத் தடுத்தால், மண் படிந்து, பிறகு புல்வளர ஹேதுவாக இருக்கும். இந்த இடங்களில் சாதாரணமாக அதிக ஆழம் மண் இராதாதலால் பயிர்த் தொழிலுக்கு லாயக்காக இராது. புல்லை வளர்த்துக் கால்நடைகளுக்கு மேய்காலாகச் செய்யலாம். முதல் வருஷங்களில் மேய்ச்

சலைக் கட்டுப்படுத்திவந்தால், நாளடையில் புல்வளர்ச்சி விருத்தி யாகும். அதற்கு அடுத்த கீழ் நிலங்களில் மழை ஜலம் ஓடும் கால்களை ஒழுங்குசெய்து அங்கங்கே பூமிமட்டத்தின் சரிவுக்கு ஏற்ப வரப்புகளைக் கட்டவேண்டும். தகுதியான இடங்களில் ஆறு கன அடியுள்ள குழிகளைவெட்டி ஓடைகளிலிருந்து அவைகளுக்குப் பாய்ச்சினால் வண்டலும் பூசாரமும் சேர்ந்த இந்தக் குழி களில் பிறகு மா, எலுமிச்சை, மாதுளை முதலிய ஜலம் அதிகமாகத் தேவையில்லாத பழச் செடிகளையும் வளர்த்துப் பயிராக்கலாம். வரப்புகளுக்கு நடுவே அங்கங்கே ஜலம் போக வழி ஏற்படுத்தினால் வண்டல் எல்லாம் படிந்தபிறகே ஜலம் ஏரியில்போய் விழுவதால் ஏரி தூர்ந்துபோகாமல், ஏரியின் ஜலத்தேக்கமும் அதிகரிக்கும். மழைக்காலத்துக்குப் பிறகும் கீழாகச் சுரந்து சுரந்து ஏரிக்கு ஜலம் வந்துகொண்டு இருக்கும்.

உழவுக்கும் கறவைக்கும் லாயக்கான மாடுகளைமாத்திரம் வைத்துக்கொள்ளவேண்டும். மிஞ்சின பலஹீன மாடுகளால் தீனி நஷ்டம்; காடு அழிகிறது; தவிர, கால்நடைகளின் தொத்து நோயும் பரவும். இவை தரும் எருவானது, இவை செய்யும் நஷ்டத்துக்கு ஈடாகாது. பசுந்தாள் உரப்பயிர்கள உற்பத்தி செய்தும், தழை, செத்தை, குப்பை முதலியவைகளை மக்கவைத்தும் எரு சேர்க்கலாம். காடுகளைப் பல பாகமாகப் பிரித்து, ஒவ்வொரு பாகத்துக்கும் ஓய்வுகொடுத்து, மற்றப் பாகங்களில் கணக்கிட்டபடி கால்நடைகளை மேய்த்தால் காடுகளும் விருத்தியாகும். இந்த விஷயத்தில் குடித்தனக்காரர்களும் அதிகாரிகளுடன் ஒத்து உழைக்கவேண்டும்.





சிறுவர் பகுதி

சட்டையும் முட்டையும்

த. உலகநாதன்

---

1. நன்முய் விளைந்த
நெல்வயலில்
நாளும் உழைத்த
ஒருழவன்
தன்ஓர் சட்டை
தனைக்கழற்றித்
தாழ்ந்த குடிசையில்
மாட்டிவிட்டான்.



2. காற்றில் பறந்த சிட்டொன்று
கண்டது சட்டையைக் குடிசைதனில்
வேற்றுமை யொன்றும்
பாராமல்
விரும்பி யதன்பையில்;
தங்கினதே.



3. சட்டைப் பையில் முட்டையிட்டுச்
சந்தோஷ மாக வாழ்ந்ததுவே;
சிட்டுக் குஞ்சுகள் தோன்றினவே;
சிறப்பாய்த் தாயுடன் இருந்தனவே.

4. ஒருநாள் பெருமழை
பெய்ததனால்
உழவன் சட்டை
தனையெடுக்கக்
குருவிக் குஞ்சுகள்
அதன்பையில்
குந்தி யிருப்பதைப்
பார்த்திட்டான்.



5. தாயும் அதற்குள் அங்குவந்து
தன்சிறு குஞ்சுகள் தமைக்கண்டு
பாயும் அருவி ஒலிப்பதுபோல்
பற்பல வாறு கத்தினதே.

6. குருவியின் அழுகை யொலிகேட்ட
குடியா னவன்மிக அன்புகொண்டு
"குருவியே, இந்தச் சட்டைதனைக்
கொடுப்பேன் உனக்கே கதறுதே.

7. "உன்றன் குஞ்சுக ளுடன்நீயும்
உவப்பாய் என்றும் வாழ்வாயே"
என்றே கூறிச் சட்டைதனை
இருந்த இடத்தினில் மாட்டிவிட்டான்.

8. பறவைகள் முன்போல் அவன்சட்டைப்
பைதனில் நலமாய் இருந்தனவே;
இறக்கைகள் நன்றாய் வளர்ந்தவுடன்
இன்பமாய் வெளியே சென்றனவே.

9. மறுநாள் உழவன்
குடிசையினில்
மாட்டி யிருந்த
சட்டைப்பையில்
குருவிதா னென்றும்
காணுமல்
குனிந்தெடுத் தானேர்
மோதிரத்தை.



10. அந்த ஏழை உழவனைப்போல்
அன்பு நிறைந்த சிறுவர்களே!
எந்த நாளும் கருணையுடன்
இருந்தால் நன்மை பெறுவீரே!



புகையின் எடை என்ன?

'முத்தணணு'

இங்கிலாந்திலே எலிஸபெத் அரசி அரசாண்டு கொண்டிருந்த காலத்தில் அவளுடைய சபையிலே கவிகளும், ராணுவ வீரர்களும், கப்பற்படைத் தலைவர்களும், வீரம் நிரம்பிய பிற மனிதர்களும் நிறைந்திருந்தார்கள். அவர்களுள் ஸர் வால்டர் ராலி என்பவர் ஒருவர்.

அவர் அமெரிக்காவிலிருந்து புகையிலையைக் கொண்டு வந்தார். அதன் புகையைக் குடிக்கும் வழக்கத்தையும் கற்றுக் கொண்டு வந்தார்.

ஒருமுறை அவர் அரசியோடு பேசிக்கொண்டிருந்தபொழுது புகையிலையினுடைய குணங்களைப் பற்றிப் பேசினர்; தாம் கேள்விப்பட்டவற்றையெல்லாம் அவளிடம் எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தார்; "அதில் நெருப்புப் பற்றவைத்து அதனுல் உண்டாகும் புகையைக் குடித்தால் மனது அமைதி அடையும்" என்றார்; தம்முடைய புகையிலைக் குழாயிலிருந்து கிளம்பும் புகையினுடைய எடை எவ்வளவு என்று நிச்சயமாய்ச் சொல்லமுடியும் என்றும் சொன்னர்.

அதைக் கேட்ட அரசி ஆச்சரியம் அடைந்து, "அது எப்படி முடியும்? புகையை நிறுப்பதாவது? வெறுமனே புரளி செய்கிறீர்!" என்றாள்.

அதற்கு ராலி, "நான் நிஜமாகத்தான் சொல்லுகிறேன். பத்து நிமிஷம் புகையிலைக் குழாயைப்

பிடித்தால் அதிலிருந்து கிளம்பிய புகையின் எடை யைத் துல்லியமாக நான் சொல்லுவேன்'' என்றார்.

''உம்மால் முடியவே முடியாது. பந்தயம் கட்டு கிறேன்'' என்றாள் அரசி.

''சரி; சம்மதம்'' என்றார் ராலி.

அவர் உடனே தம்முடைய ஆளைக் கூப்பிட்டுப் புதிய புகையிலைக் குழாய் ஒன்றைக் கொண்டுவரச்



சொன்னார். புகையிலை டப்பியையும் தராசுப் படிக் கல்லையும் கொண்டுவரச் சொன்னார். டப்பியிலிருந்து கொஞ்சம் புகையிலையை எடுத்துத் தராசில் போட்டு நிறுத்துப் புகையிலைக் குழாயில் வைத்தார். பிறகு அரசியைப் பார்த்து, ''இந்தப் புகையிலையின் எடை யைக் குறித்துக் கொள்ள வேண்டும்'' என்றார். பிறகு, ''இதோ இதைப் பற்ற வைத்துக் குடிக்கப் போகி றேன். பத்து நிமிஷமானதும் சொல்லவேண்டும்'' என்றார்.

''சரி'' என்றாள் அரசி.

ராலி அந்தக் குழாயிலிருந்த புகையிலையைப் பற்றவைத்துப் புகை பிடித்துக்கொண்டிருந்தார். பற்றவைத்த புகையிலையிலிருந்து உண்டான புகை



ராலியின் வாய்க்குள் கொஞ்சமும் காற்றில் கொஞ்சமுமாகப் போய்க்கொண்டிருந்தது.

பத்து நிமிஷமானதும் அரசி, "நிறுத்தும்' என்றாள். உடனே ராலி குழாயிலிருந்த புகையிலையின் நெருப்பை அணைத்துவிட்டார்.

அரசி அவரைப் பார்த்துச் சிரித்துக்கொண்டு, "வாய்க்குள்ளும், காற்றிலும் போன புகையை எப்படிப் பிடித்துக்கொண்டுவந்து நிறுக்கப் போகிறீர்?" என்று பரிகாசம் செய்தாள்.

"சற்றே பொறுக்க வேண்டும்" என்றார் ராலி.

"ஆஹா! நீர் எங்கும் அலைந்து காற்றிலிருந்து புகையை வலை போட்டுப் பிடித்துக் கொண்டு வருகிற வரையில் இங்கே காத்திருக்க வேண்டுமா? நல்ல யோசனை!" என்று சிரித்தாள்.

ராலி பதிலொன்றும் சொல்லாமல் புகையிலைக் குழாயில் மீந்திருந்த புகையிலையை ஜாக்கிரதையாகத் தராசுத் தட்டில் கொட்டி அதை எடைபோட்டார். பற்றவைப்பதற்கு முன்னால் இருந்த எடையிலிருந்து இந்த எடையைக் கழித்தார். பிறகு அரசியைப் பார்த்துப் புகையிலைப் புகையின் எடை இவ்வளவு என்று, முன்னும் பின்னுமுள்ள எடை வித்தியாசத்தைக் குறிப்பிட்டுச் சொன்னார்.

அதைக் கேட்ட அரசி ஆச்சரியம் அடைந்து, அவர் சொன்னதை ஒப்புக்கொண்டு அவருடைய சாமர்த்தியத்தைப் புகழ்ந்தாள். தான் பந்தயம்வைத்த நூறு பொன்னை அவருக்குக் கொடுத்தாள்.

"ராலி! எத்தனையோ பேர் பொன்னைக் கரியாக்குவதை நான் பார்த்திருக்கிறேன். இன்றுதான் கரியைப் பொன்னாக்கியதை நான் கண்டேன்" என்று அவரைக் கொண்டாடினாள்.



மதிப்புரை

விதியின் கதி: [ஸ்ரீ வி. ராமையா பி. ஏ. எழுதியது; கிடைக்குமிடம்: ஆசிரியர், ஜில்லா எஞ்சினீர், தென் இந்தியா ரெயில்வே; திருச்சிராப்பள்ளி.]

இப்புத்தகம் ஐந்து அங்கங்களடங்கியதொரு நாடகம். செல்வகேசவனென்னும் அரசன் நவரீதிநாயகமென்னும் தர்மந்திரியின் பேச்சைக் கேட்டுப் பழைய மந்திரியைத் தள்ளிவிட்டு நவீன நாகரிகங்களில் மூழ்கித் தன் நாட்டை ஆள்கிறான். தன் குடிகளை வருத்தி வரி விதிக்கின்றான். ஒரு நந்தவனத் தலைவனுடைய மகளை மந்திரியும் அப்பால் அரசனும் கைக்கொள்ள முயல்கின்றார்கள். இரு கள்வர் தலைவர்களுடைய முயற்சியாலும் தந்திரச் செயலாலும் அப்பெண் மீட்கப்படுகின்றாள். இறுதியில் அவளுடைய பிறப்பின் உண்மை வெளிப்படவே அவளே ராஜ்யத்துக்குத் தலைவியாக நியமிக்கப் படுகிறாள். கதையில் கள்வர் தலைவருடைய செயல்களைப் பார்த்தால் அவர்களைக் கள்வர்களாக விதித்திருப்பது அநாவசியமென்றே தோற்றுகின்றது. பிறமாதரை விரும்பாத நற்குணத்தால் அவர்கள் சிறப்படைகின்றனர்.

செல்வகேசவனுடைய தாய் இறந்த பின்பும் பூத உருவத்தில் இரண்டு முறை தோற்றுவதாக அமைத்திருப்பதை மாற்றிவிடலாம். கதை சுவாரஸ்யமாக இருக்கின்றது. முன்னுரையில் ஸ்ரீமான் நடேச முதலியார், "இது அவர்களுடைய முதன் முயற்சியாகும். மேலும் மேலும் அவர்கள் ஊக்கம் வளர்ந்து, தமிழ் அன்னையின் சிலம்படிக்குச் சிறந்த நூல்களை அளிக்குமென்று நம்புகின்றேன்" என்று எழுதியுள்ளார். முதன் முயற்சியைச் சிறந்த நூலாகக் கருதமுடியாது; ஆதலின் சிறந்த நாடகங்களை இயற்றவும் இப்பொழுது வெளிவந்த புத்தகத்திலுள்ள சில பிழைகளை நீக்கவும் ஆசிரியர் முயல்வாரென்றே நம்புகிறோம்.

உத்தர்பாரா உபந்யாஸம்: [பகவான் ஸ்ரீ அரவிந்தர் அருளியதன் தமிழ் மொழிபெயர்ப்பு; ஸ்ரீமான் குலபதி பி. ஏ. சுப்பிரமணிய ஐயாவர்கள் வெளியிட்டது; கிடைக்குமிடம்: ஸ்ரீ அரவிந்த ஆசிரமம், புதுச்சேரி; விலை அணா ஒன்று.]

சிறையிலிருந்து வெளிவந்து தம் புதிய வாழ்க்கையிலே புகுவதற்கு முன் ஸ்ரீ அரவிந்தர் செய்த இவ்வுபந்யாஸத்தில் பாரமார்த்திகத் துறையிலே பிரவேசிப்பதில் அவருக்கிருந்த உள்ளவெறி தெளிவாகக் காணப்படுகின்றது. "நான் உனக்கென்று ஸங்கற்பித்திருக்கிற கர்மம் வேறொன்றுளது. அதற்காகவேதான் உன்னை நான் இங்கே கொணர்ந்திருக்கின்றேன்; தானுகவே நீ அறிந்துகொள்ளக் கூடாமற்போன ஞானத்தை நானே புகட்டுவேன்; என் பணிக்கு உன்னை ஆளாக்குவேன்" என்று இறைவன் தமக்குக் கட்டளையிட்டதை அவர் வெளிப்படுத்துகின்றார். "ஸநாதன தர்மந்தான் தேசியம்" என்ற முடிவுக்குத் தாம் வந்த வரலாற்றை அவர் இந்த உபந்யாஸத்திற் சொல்கின்றார்.

மொழிபெயர்ப்பு, தெளிவாகவும் அழகாகவும் இருக்கிறது. அரவிந்த ருடைய பிற நூல்கள் இம்முறையில் வெளிவந்தால் நலமாக இருக்கும்.

உயிரின் உண்மை அல்லது நாம் உயிரா? உடலா? [ஸ்ரீமான் டி. எஸ். இராஜப்பிள்ளை இயற்றியது; கிடைக்குமிடம்: அருளாலயம், 43, அரண்மனைக்காரன் வீதி; ஜி. டி. சென்னை; விலை அணா 8.]

வேதாந்தநூற் கருத்துக்களை ஆசார்ய சிஷ்ய ஸம்வாத ரூபத்தில் எளிய நடையிற் சுருக்கமாக இப்புத்தகம் வெளியிடுகின்றது. பிறவிகள் எத்தனை வகை? ஆத்மாவின் இலக்கணம் என்ன? உடம்பிற்கும் உயிருக்கும் உள்ள சம்பந்தம் யாது? முத்தியடையும் மார்க்கம் யாது? என்பனபோன்ற கேள்விகளுக்கு உரிய விடைகளை இச்சிறிய புஸ்தகத்தில் காணலாம். இதனை எழுதியவர் சில சில இடங்களில் இந்தக் காலத்துக் கேற்ற உதாரணங்களை எடுத்துரைக்கின்றார். ஜீவன்களுடைய அறிவுவிளக்கம் அவரவர்களின் சித்தத்தெளிவை ஒத்திருக்குமென்பதற்கு எலெக்ட்ரிக் பல்புக் கேற்றபடி வெளிச்சம் பிரகாசித்தலையும், ஆத்மாவினின்று உடல் வேறாக இருந்தாலும் உயிருள்ளவரையில் உடலைப் பாதுகாப்பது அவசியமென்பதற்கு நாம் குடியிருக்கும் வீடு வாடகை வீடாஞலும் அதனைப் பாதுகாப்பது அவசியமாதலையும் உவமையாகக் கூறுவது காண்க.

இவ்வாறு வேதாந்த விஷயங்களைத் தெளிவாக விளக்கவந்த இவ்வாசிரியர் இந்தப் புத்தக வெளியீட்டில் தக்க கவனம் செலுத்தியிருக்கவேண்டும். ஒவ்வொரு பக்கத்திலும் பல பிழைகள் இருக்கின்றன. சந்தியை இவர் அறவே மறந்துவிட்டார். ஒருமை பன்மை மயக்கங்களைச் சிறிதும் கவனிக்கவில்லை. பல இடங்களில் தமிழில் எழுதியவற்றையே ஆங்கிலத்திலும் எழுதியிருக்கின்றார். தமிழ்நாட்டாருக்குத் தமிழிலே ஒரு புஸ்தகம் எழுதும்போது அந்தக் கருத்தை ஆங்கிலத்திலே விளக்கத்தான் வேண்டுமென்றால் அது பெரிய கேலிக்கூத்தாகவே முடியும். இதனை எழுதியவர் தமிழைக்காட்டிலும் ஆங்கிலத்தில் சொல்வதிலே அதிக 'மோகம்' உடையவராக இருந்தால் ஆங்கிலத்திலே புஸ்தகத்தை எழுதியிருக்கலாம்.

'லலாட (புருவமத்தி) (Centre between the two eye-brows) ஸ்தானத்திலிருந்து விவகாரம் செய்யும் காலம்' என்பதில் அநாவசியமாக லலாடத்தை இரண்டு விதமான வியாக்கியானங்களுடன் உபயோகிப்பதைக் காட்டிலும் புருவமத்தியென்றே போட்டிருக்கலாம். இத்தகைய பிரயோகங்கள் பல இப்புத்தகத்தில் உள்ளன.

தமிழ் நடையிலுள்ள பிழைகளைத் திருத்தி இத்தகைய மிகையான பகுதிகளையும் நீக்கிவிட்டு இந்தப் புஸ்தகத்தை வெளியிட்டால் உண்மையிலே இது சிறந்த புஸ்தகமாக இருக்கும்.



ஓ

கணபதி துணை

சிளிச்சர்க்கரைப் புலவர்

இயற்றிய

புகையிலை விடு தூது

பதிப்பாசிரியர்:

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி

டாக்டர் உ. வே. சாமிநாதையர்

(All rights reserved)

உ

முகவுரை

தூதுப் பிரபந்தங்கள் இந்தநாட்டிலுள்ள இலக்கிய மொழிகள் எல்லாவற்றிலும் உண்டு. தமிழ்ப்பிரபந்தங்களில் ஏனையவை பெரும்பாலும் தமிழுக்கே உரியனவாயிருப்பத் தூதைமாத்திரம் எல்லாமொழிப் புலவர்களும் தம் செய்யுட்டிறத்தைக் காட்டுவதற்குரிய களனாக மேற்கொண்டமை அப்பிரபந்தத்தின் சிறப்பைப் புலப்படுத்தும். காளிதாஸ மகாகவி பாடிய மேகஸந்தேசம் ஒரு மேகவிடுதூதே. அதனைப் பின்பற்றி நூற்றுக்கணக்கான காவியங்கள் வடமொழியில் எழுந்துள்ளன.

தூதுநூல்கள் இருவகைப்படும். தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் அவள்பால் விடுப்பது ஒருவகை; தலைவனது அருள் வேண்டித் தலைவி விடுப்பது ஒருவகை. தமிழில் இவையிரண்டும் கலிவெண்பாவால் அமைக்கப்படும்.

புலவர்கள் கடவுளர் மீதும், ஆசிரியர் மீதும், உபகாரிகள் மீதும் பாடிய தூதுப்பிரபந்தங்கள் பலவாகும். தூதாகச் செலுத்தப்படும் பொருள் உயர்திணையாகவும் அஃறிணையாகவும் இருக்கும். அஃறிணைப்பொருள்கள் தூது சென்றுவரும் ஆற்றலுடையனவல்லவாயினும் காமமயக்கத்தால் அவற்றிற்கு அவ்வாற்றல் இருப்பதுபோலப் பாவித்து உரைப்பதாகச் செய்யுள் செய்வது புலவர் மரபு.

இவ்வாறு பொருள்களைத் தூதுவிடும் செய்தியைச் சொல்லும் செய்யுட்கள் தமிழில் தொன்றுதொட்டு வித்துவான்களாற் பாடப்பெற்றுள்ளன. தனிப்பிரபந்தமாக வழங்குதல் பிற்காலத்தில் உண்டானதென்றே தோற்றுகின்றது.

தூதுப்பொருள்கள் பத்தென்பது பழைய வரையறை;

"இயம்புகின்ற காலத் தெகினமயில் கிள்ளை
பயம்பெறுமே கம்பூவை பாங்கி—நயந்தகுயில்
பேதைநெஞ்சந் தென்றல் பிரமரமீ ரைந்துமே
தூதுரைத்து வாங்குந் தொடை"

என்னும் இரத்தினச் சுருக்கச் செய்யுளில் அப்பத்தையும் காணலாம். புலவர்கள் இயற்றியுள்ள தூதுப்பிரபந்தங்களை ஆராயின் இவ்வரையறைக்கு மிஞ்சிய பலபொருள்கள் தூதுப்பொருள்களாகச் செய்யுட்கு உதவுவதைக் காணலாம். வித்துவான்கள் தத்தம் கருத்துக்கும் கற்பனைக்கும் ஏற்ற பொருள்களைத் தூதுவிடுவதாக அமைப்பதே வழக்கமாக இருக்கின்றது.

ஒருவரைப் புகழ்ந்து பாடுவதற்குத் தூதுப்பிரபந்தங்களைப் புலவர்கள் பயன்படுத்துவதைப்போல், இகழ்ந்து பாடுவதற்கும் இப்பிரபந்தம் ஒரு கருவியாவதுண்டு. மிதிலைப்பட்டிக் கவிராயர்களுள் ஒருவர் தமக்கு இடையூறு செய்த ஒருவர்மீது "கழுதைவிடு தூது" என்று ஒரு பிரபந்தம் இயற்றியுள்ளார். அத்தூது ஒரு வசைப் பிரபந்தம்.

பாட்டுடைத் தலைவருக்கு ஏற்ற பொருளைத் தூது விடுதலும், புலவர் தம் விருப்பத்திற்குரிய பொருளைத் தூதுவிடுவதாக அமைத்தலும் வழக்கம்.

புகையிலைவிடுதூது என்னும் இது சீனிச்சர்க்கரைப் புலவரென்பவரால் பழனிமலையிற் கோயில் கொண்டெழுந் தருளியுள்ள ஸ்ரீ பாலசுப்பிரமணியக் கடவுள்மீது இயற்றப்பெற்றது; ஒரு தலைவி புகையிலையை அக்கடவுள்பால் தூதனுப்புவதாக அமைந்தது. இது 59 கண்ணிகளை உடையது. இத்தூதில் புகையிலையின் பெருமைகளை முதல் 53 கண்ணிகளில் சொல்லப்படுகின்றன, தூதுவிடும் செய்தி ஏனைய ஆறுகண்ணிகளிற் சுருக்கமாக அமைந்துள்ளது. இதனால் இதைப் பாடிய புலவர் புகையிலையைச் சிறப்பிப்பதற்காகவே இதனைப் பாடியிருக்கவேண்டுமென்று தெரிகின்றது.

பாட்டுடைத் தலைவரான பழனியாண்டவருக்குப் புகையிலைச் சுருட்டு நிவேதனமுண்டென்று சிலர் சொல்லக் கேட்டதுண்டு. விராலிமலையில் அத்தகைய நிவேதன முண்டென்று தெரிகின்றது. இந்தப் புலவருக்கும் புகையிலை போடும் வழக்கம் இருக்கலாம். இந்த இயைபுகளை இந்தப் பிரபந்தத்தைப் பாடுவதற்குக்

காரணமாக இருந்தனபோலும். புகையிலை மிகுதியாகப் பயிரிடப் படுகின்ற இடங்கள் சூழ்ந்த பழனிக்கு அருகில் வசித்த உபகாரி ஒருவர் கேட்டுக்கொள்ள இயற்றியதாகக் கூறுவதும் உண்டு.

இதன் ஆசிரியராகிய சீனிச்சர்க்கரைப் புலவரென்பவர் பரம் பரைப் புலமை வாய்ந்த குடும்பத்தில் உதித்தவர். இராமநாதபுரம் ஸம்ஸ்தான வித்துவானாக விளங்கிய சர்க்கரைப் புலவரின் குமாரர்; மயூரகிரிக்கோவை இயற்றிய சாந்துப் புலவரின் தம்பியார். இவ ருடைய காலம் 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியும் 19-ஆம் நூற் றாண்டின் முற்பகுதியுமாகும். இவர் திருச்செந்தூர்ப் பரணி யென வேறொரு பிரபந்தமும் இயற்றினரென்று கூறுவர்.

இப்பிரபந்தத்தில் புகையிலையின் பெருமையும், புகையிலையி னைச் செய்யப்படும் சுருட்டு, சாராயம், பொடி என்னும் பொருள் களைப்பற்றிய பாராட்டும் காணப்படும். புகையிலைக்குத் திருமா லும், சிவபெருமானும், பிரமதேவரும், தமிழும், முருகக்கடவுளும் சிலேடைவகையில் உவமை கூறப்படுகின்றனர். புகையிலையின் காரமும், பித்தந்தரும் இயல்பும், மலர் வித்து என்பவற்றையுடை மையும், பாடஞ் செய்யப்படுதலும், தாகத்தைத் தீர்க்க உதவுத லும், வியாபாரத்தால் லாபம் உண்டாக்குதலும் அங்கங்கே சொல் லப்படும்.

தமிழுக்கும் புகையிலைக்கும் சிலேடையமைந்த பகுதியில் கோவை, வளமடல், சந்தப்பா, பரணி என்பன குறிக்கப்பெறு கின்றன.

புகையிலையின் வரலாறாக இப்பிரபந்தத்திலே கூறப்படும் கற்பனைக்கதை வருமாறு:—

ஒருமுறை மும்மூர்த்திகளுள்ளே ஒரு வழக்கு உண்டாயிற்று. அதனைத் தீர்த்துக்கொள்ளும்பொருட்டு அவர்கள் தேவர்கள் கூடியுள்ள சபைக்குச் சென்று தம் வழக்கை எடுத்துரைத் தனர். தேவர்கள் அவற்றைக் கேட்டபின், "உங்கள் வியவகாரத் தைப் பிறகு கவனித்துக்கொள்வோம்" என்று சொல்லி அம் மூவர்களிடத்தும் வில்வம், திருத்துழாய், புகையிலை என்னும் இவற்றைக் கொடுத்து இவற்றை மறுநாள் கொண்டுவரச் சொல்லி யனுப்பினர்.

அவர்கள் மூவரும் அங்ஙனமே சென்றனர். சிவபெருமான் பாற் கொடுத்தபத்திரமாகிய வில்வத்தைக் கங்கையின் அலைகொண்டு

போயிற்று; திருமாலிடம் கொடுத்த திருத்துழாயைப் பாற்கடலி லுள்ள அலை கொண்டு போயிற்று. பிரமதேவர் தாம் பெற்ற புகையிலையைத் தம் நாவிலுள்ள கலைமகளிடத்திற் கொடுத்துவைத் திருந்தார்.

மறுநாள் மூவரும் விண்ணவர் சபைக்கு வந்தபோது தேவர் கள், "முன்னே நாம் கொடுத்தபத்திரங்களைக் கொடுங்கள்" என்று கூறவே சிவபெருமானும் திருமாலும் விழித்தனர்; "எங்கள் பத்திரங்கள் போயின" என்று அவர்கள் கூறினர். அது கண்டு மகிழ்ச்சியுற்ற பிரமதேவர் கலைமகளிடத்திலிருந்து புகையிலையை வாங்கி, "இதோ, எனக்கு அளித்த பத்திரம்" என்று முன்வைத்து, "மற்றவர்கள் பத்திரங்கள் போயின; என்னுடையது போகையிலை" என்று கூறினர். அவர் கூற்றில் புகையிலையென்பதன் மரூஉ வாகிய போகையிலையென்னும் பெயர் தோற்றியது; பிரமதேவரிட மிருந்து நழுவாமல் அவருக்கு உரியதானமையின் அதனைப் பிரம்ம பத்திரம் என்று யாவரும் அன்றுமுதல் வழங்கலாயினர். பிரம தேவர் தாம் கூறிய வழக்கில் வெற்றிபெற்றனர். ஏனை இருவரும் தம் வழக்கிழந்தனர்.

புகையிலையைப் பற்றி நம் நாட்டில் பல வேறு கற்பனைக் கதைகள் வழங்கிவருகின்றன. அவற்றுள் ஒன்றை இப்புலவர் இப்பிரபந்தத்தில் அமைத்தார்.

புகையிலைச் சுருட்டைப் பற்றிய செய்திகளாக இதில்வருவன: புகையுடையது, தம்பம் போல்வது, அனலேந்துவது, நுனியிற் சாம்பலையுடையது; ஆகாயம் சுருட்டுப் புகை போல இருப்பதால் இறைவர் ஆகாயமே தம் திருமேனியாக ஆனரென்பர்.

"கற்றைத் தெளிந்த கனட்பல வான்களுமுன்
சுற்றுக்கு ளாவதென்ன சூழ்ச்சியோ"

என்பது சுருட்டை நினைந்து பாராட்டியது.

புகையிலைக்காம்பு என்பது வழக்கு; அதனை யமைத்து,

"தாம்பூல நாவுக்குச் சாரமது தானுமுன்றன்
காம்பி லடக்கமன்றே கட்டழகா"

என்று இவ்வாசிரியர் புகழ்கின்றார்.

புகையிலையினல் செய்யப்படும் பொடியின் மகிமை;

"வாடைப் பொடிகதம்ப மானவெல்லா முன்னுடைய
சாடிப் பொடிக்குச் சரியுண்டோ".

என்ற கண்ணியிலே சொல்லப் பெறுகின்றது.

ஒரு சிட்டிகைப்பொடிக்காகத் தம் நிலையையும் மறந்து பிறரைக் கெஞ்சும் மனிதர் பலரை நாம் பார்க்கிறோம். இப்புலவரும் அத்தகையோரைப் பார்த்திருக்கிறார்;

"சொற்காட்டு நல்ல துடிகார ராரையும்போய்ப்
பற்காட்ட விட்ட பழிகாரா"

என்ற கண்ணியே அதற்கு அடையாளம்.

புகையிலை விளையும் இடங்களாகக் காங்கேயம், யாழ்ப்பாணம், அழகன்குளம், பரத்தையர்யல் என்பனவும், கானக்கறுப்பனென்னும் புகையிலைச்சாதியும் இவரால் உணர்த்தப்பெறுகின்றன. எல்லாவற்றிலும் பரத்தையரயலில் விளையும் புகையிலையே சிறந்ததென்று இவர் கூறுகின்றார்.

புகையிலைக்கு இவ்வளவு சிறப்புக்கூறும் இப்புலவருக்கு அது 'தமிழ் போல நாவில் விளையாடி'யது என்று கொள்வதிற் பிழையொன்றுமில்லை.

புகையிலை இந்த நாட்டிற்கு வந்த புதிய பொருள். ஆயினும் அதனைப் பாராட்டிய புலவர்கள் இவரையன்றி வேறு சிலரும் உண்டு. அதனைப்பற்றிய தனிப்பாடல் ஒன்று வருமாறு:

"நாலெழுத்துப் பூடெவே நரம்பிருக்கும்
காலுந் தலையுங் கடைச்சாதி—மேலாக
ஒட்டு முதலெழுத்து மோதுமூன் றுமெழுத்தும்
விட்டாற் பரமனுக்கு வீடு."

[நாலெழுத்துப் பூடென்றது புகையிலையை. காலும் தலையுமென்றது அப்பெயரிலுள்ள முதலும் கடையுமாகிய எழுத்துக்களை; அவை புலை யென்பன; புலை - கடைச்சாதி. முதலெழுத்தும் மூன்றுமெழுத்தும் விட்டால் எஞ்சி நிற்பன, கைலை என்னும் இரண்டெழுத்துக்கள்; கைலை, சிவபெருமான் இருப்பிடம்.]

பொடியைப்பற்றி வழங்கும் தனிப்பாடல் ஒன்று வருமாறு:

"ஊசிக் கழகு முனைமழுங் காமை யுயர்ந்தபர
தேசிக் கழகிந் திரிய மடக்க றெரிகலன்சேர்
வேசிக் கழகின் னிசைபல நூல்கற்ற வித்வசனர்
நாசிக் கழகு பொடியெனக் கூறுவர் நாவலரே."

மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களுடைய மாணாக்கரும் கும்பகோணம் காலேஜில் தமிழாசிரியராக இருந்த வருமாகிய வித்துவான் சி. தியாகராச செட்டியார் திருவானைக் காவில் பொடி வியாபாரம் செய்யும் சோமசுந்தரம் பிள்ளை என்பவரையும் அவர் விற்கும் பொடியையும் சிறப்பித்து ஒரு சமயம் ஒரு செய்யுள் இயற்றினர். அது வருமாறு:

"கொடியணி மாட மோங்கிக் குலவுசீ ராணைக் காவிற்
படியினி லுள்ளார் செய்த பாக்கிய மனையான் செங்கைத்
தொடியினர் மதனன் சோம சுந்தரன் கடையிற் செய்த
பொடியினைப் போடா மூக்குப் புண்ணியஞ் செய்யா மூக்கே."

இவற்றைப்போல வேறு சில செய்யுட்களும் உண்டு. அவை இப்போது கிடைக்கவில்லை.

இந்தச் சிறுபிரபந்தத்தைக் கலைமகள் வாயிலாக வெளியிடுவதற்கு இடமளித்த ஸ்ரீமான் ரா. நாராயணஸ்வாமி ஐயரவர்களுடைய அன்பு பாராட்டுதற்குரியது.

'தியாகராஜ விலாசம்'
திருவேட்டீசுவரன்பேட்டை
14—8—39

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்



2913

XV

1937

